www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

செப்.12-18,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 89

## புதிய யானைப்பாகனும் பொதுஜன முன்னணியும்!



# அரசு— புலிகள் பேச்சு

## தொண்டாவின் ரணில் காத்திருப்பு!

## அவசரம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



தாய்

ரசிகன் வழங்கும் இலக்கிய நயம்

புதிய செய்திகள் துணுக்குகளோடு

## சினிவிசிட்

இரட்டைக் கொலை

# கொலைகாரத் தாய்க்குத் தூக்கு!?

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## அவதி வாழ்க்கை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வெளிநாடுகளில் உள்ள
இலங்கைத் தமிழ் அகதிகளை
வேண்டாத விருந்தினர்களாகவே
பல நாடுகள் கருதுகின்றன.

அரசுக்கும்-புலிகளுக்குமிடையில்
பேச்சுக்கள் ஆரம்பித்தபின்னர்
"சமாதானம் திரும்பிவிட்டது"
என்றும்-இனி நீங்கள்
திரும்பிச் செல்லலாம் என்றும்
பலவேறு நாடுகளில்
நம்மவர்களுக்கு சொல்லப்படுகிறது.

வெளியேற மறுத்தால்
விமானம்வரை தூக்கிச்சென்று
திருப்பி அனுப்பக்கூட
தனது பொலிசாருக்கு
ஐரோப்பிய நாடொன்று
அனுமதியளித்திருக்கிறது.

சொந்தமண் அந்நியமாகும்போது
வேற்று நாடுகளில்
அவமானம் சுமக்கவேண்டிய
அவதி வாழ்க்கை நம்மவருக்கு.

வெளிநாடுகளுக்கு நம்மவர்கள்
விரைந்தோடியதற்கு
ஆயுத மோதல் சூழல்
மட்டும் காரணமல்ல.

வேலை வாய்ப்பின்மையும்
ஒரு காரணம்.
தேடுதல் வேட்டைகளும்
முக்கிய காரணம்.
இனப்பிரச்சனையின் விளைவுகள்
மூல காரணம்!

பேச்சுவார்த்தைகள்
ஆரம்பமாகியிருக்கின்றனவே தவிர
இன்னமும்-இனப்பிரச்சனைக்கு
ஆக்கபூர்வமான தீர்வுகள்
தோன்றிவிடவில்லை.

அதேபோல-
பொருளாதார நெருக்கடிகள்
வேலை வாய்ப்பின்மையை
நிரந்தரமாக்கிக்கொண்டிருக்கின்றன.

நம்மவர்களைத் திருப்பியனுப்ப
அவசரம் காட்டும் நாடுகள்
இவற்றைப் புரிந்துகொள்ளவேண்டும்.

வெளிநாட்டு தமிழ் அகதிகள்
தொடர்பான பிரச்சனைகளில்
தமிழ் கட்சிகள் காட்டும்
அக்கறையும் போதுமானதல்ல.

புலிகள்கூட- அந்த
அகதிகளிடம் நிதி திரட்டுகிறார்கள்.

அவர்கள் பிரச்சனையில்
அலட்சியமாக இருக்கிறார்கள்.

தத்தம் தேவைகளுக்கு ஏற்பவே
தர்மநியாயம் பேசும்
தவறான போக்கொன்று
பொதுவான போக்காகிவருகிறது.
பொதுப் பிரச்சனைகளில்
தமிழ் அமைப்புக்களது
செயற்பாடுகளிலும் அதுதான்
பிரதிபலிக்கிறது.

அரசைப் பொறுத்தவரை
அகதிகளை
திருப்பியனுப்பவேண்டாம் என்று
சொல்ல முடியாத நிலை.

ஆனால், அகதிகள் திரும்பி வந்தால்
அதனால் ஏற்படும் சுமைகளை
அரசு தாங்குமா?

தமிழ் நாட்டிலிருந்து திரும்பிவந்த
அகதிகள் விடயத்தில்கூட
தகுந்த நிவாரணம்
செய்யப்படவில்லை என்ற
புகார்கள் இருக்கின்றன.

இலங்கைக்குள்ளே உள்ள
இடம்பெயர்ந்த
தமிழ் பேசும் அகதிகளது
மீளக் குடியேற்றம்கூட
முயற்கொம்பாகவே இருக்கிறது.

பாதுகாப்புக் காரணமாக
தலைநகரில் அடிக்கடி
தேடுதல் நடவடிக்கைகள்,
சோதனைகள்-
தொடரவேண்டித்தான் உள்ளது.

தேடுதல்-சோதனைகளில்
இடம் பெயர்ந்த மக்கள்
சிரமங்களை முகம்கொடுக்கிறார்கள்.

இவ்வாறான நிலையில்
வெளிநாடுகளிலுள்ள அகதிகள்
பெருந்தொகையாக திரும்பிவந்தால்
ஏற்படப் போகும் நெருக்கடிகளை
சமாளிப்பது எப்படி?

எனவே- தமிழ் அகதிகளை
உடன் திருப்பியனுப்புவதை
நிறுத்துமாறு
சம்பந்தப்பட்ட நாடுகளிடம்
தமிழ் அமைப்புக்களும்
மனிதாபிமான அமைப்புக்களும்
வேண்டுகோள் விடுக்கட்டும்.

அதே சமயத்தில்-
வெளிநாடுகளிலுள்ள நம்மவர்கள்
தமது நடைமுறைகளால்
அங்கு வெறுப்புக்கள் வளராது
பார்த்துக்கொள்ள வேண்டும்.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## உங்களைக் கைவிடுவது இல்லை!

நான் நம்பியவர்கள் என்னைக் கைவிட்டு விட்டார்களே... உயிருக்கு உயிராய் நேசித்த என் நண்பர்கள்கூட என்னைக் கைவிட்டு விட்டார்களே... என் பெற்றவர்களும், சுற்றத்தவர்களும்கூட கைவிட்டு விட்டார்களே என்று வேதனைப்படுவோர்தான் எத்தனை பேர்?

பணம் இருக்கையில் சுற்றி வந்தவர்கள் பணமில்லாதபோது விலகிச் செல்லும் நிலை. சுகதேகியாய் வாழ்ந்து மற்றவர்கட்காக உழைத்துப் பின் நோய் வந்து படுக்கையில் வீழ்ந்ததும் விலகிப் போகும் நிலை நடைமுறை வாழ்வில் இந்நிலை கூறி புலம்பிடும் உள்ளங்கள்தான் எத்தனை?

மற்றவர்கள் கைவிட்டுவிட்டார்களே, விலகி விட்டார்களே என்று கவலைப்படும் நாம் எம்மை விட்டு விலகாதவர், கைவிடாதவர் உள்ளார். என்பதனை மறந்து விடுகிறோம். யோசுவா 1:5 கூறுவது என்ன- "மோசேயோடு இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை" மோசேயுடன் கடைசிவரை துணையிருந்த ஆண்டவர் இன்று எம் வாழ்நாள் முழுவதும் துணைவரக் காத்திருக்கிறார்.

கலங்கிடும் உள்ளங்களே! இனி கலங்கிட வேண்டிய அவசியமில்லை. இறைவன் எமைக் கைவிடுவதும் இல்லை. பணக்கஷ்டமா? நோயா? பிரச்சனைகளா "உங்களை திக்கற்றவர்களாக விடேன்" என்று யோவான் 14:18 கூறிய தேவன் ஒருபோதும் திக்கற்றவர்களாக விட்டுவிடமாட்டார்.

எம்மைக் கைவிடாத, திக்கற்றவர்களாக விடாத தேவன் இருக்கையில் நாம் ஏன் பயப்படவேண்டும்? கலங்கிட வேண்டும்? எம் மனதின் கலக்கத்தையும் கவலைகளையும் விடுத்து என்றும் கைவிடாத தேவனை எம் நாவால் துதித்து வழிபடுவோம். என்றும் எம் தேவன் எம்மைக் கைவிடமாட்டார்.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

# ஆன்மீகம்



## நோன்பும்-பிரார்த்தனையும்

புனித ரமழான் நோன்பு மாதத்தில் எமது இவ்வுலக- மறு உலகத் தேவைகள் குறித்து நாம் இறைவனிடம் (துஆ) பிரார்த்தனை செய்தல் அவசியமாகும். குறிப்பாக ஒரு நோன்பாளி நோன்பு துறக்கும் வேளையில் கேட்கும் இறைஞ்சுதல் இறைவனால் அங்கீகரிக்கப்படுவதாக நபி (ஸல்) அவர்கள் இயம்பியுள்ளார்கள். எனவே நாமும் நோன்பு துறக்கும் நேரத்தில் எமது முக்கிய தேவைகளை இறைவனிடம் கேட்டுப் பெற முனையவேண்டும்.

ஆயினும் இன்று பெரும்பாலானோரின் கவனம் நோன்பு துறந்தவுடன் உணவருந்துவதிலேயே இருக்கிறது. கஞ்சி குடிப்பதிலும் வகைவகையான உணவுகளைச் சுவைப்பதிலுமே அவர்கள் அக்கறை காட்டுகின்றனர். நாம் கட்டாயமாக நோன்பு துறக்கும் அலுவலை அவசரமாக முடித்துவிட்டு விஷேட பிரார்த்தனைகளில் ஈடுபடுவதுடன் நேரம் கடத்தாமல் மஃரிப் (மாலை) தொழுகையையும் நிறைவேற்றவேண்டும்.

எமது துஆ- பிரார்த்தனைகள் ஏற்கப்படுமோ? என ஒருபோதும் நாம் மனம் தளரக்கூடாது. உண்மையான இறைஞ்சுதலை இறைவன் ஏற்று அங்கீகரிக்கிறான். எமது சாதாரண அறிவுக்கு அது புலப்படுவதில்லை. ஒரு முஸ்லிம் பிரார்த்தனை செய்கிறார். அவர் இரத்த பந்தத்தை முறிக்கவுமில்லை, பாவமான காரணம் குறித்துக் கேட்கவுமில்லை. அவ்விதமாயின அவரது பிரார்த்தனையின் பலனாக மூன்று விடயங்களில் ஏதாவதொன்று கிடைத்தே தீரும். அதாவது அவர் எதனைக் கேட்டாரோ அது கிடைத்துவிடும். அல்லது அவருக்கு ஏற்படவிருக்கும் துன்பம் அகன்றுவிடும். அல்லது அவருக்குப் பாவ மீட்சியுடன் நன்மைகள் அதிகரிக்கப்படும். ஆனால் நாம் துஆ பிரார்த்தனை செய்யும்போது இறைவனுடைய புகழையும்-நபியவர்களின் புகழையும் கூறாமல் பிரார்த்திக்கக்கூடாது. ஏனெனில் ஹம்து-ஸலவாத் இல்லாத துஆ ஏற்கப்படுவதில்லை.

திஹாரிய ஹாரித்.

## கவிதைப்போட்டி இல-86

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

### கல்லறை கட்டப் போகிறாள்?

போர்த் தவிர்ப்பு மீண்டுமொரு
போராக மாறாமல்
போர் வெறியைப் பூமிக்குள்
போட்டு மூடி
கல்லறையைக் கட்டுதற்கா
பிள்ளையிவள்
கல் சுமந்து போகின்றாள்?
செ.குணரத்தினம்-மட்டக்களப்பு.

### விதியின் செய்கை

வாழ்வை
மாற்றிய
போரின் வன்மை
வாழ
வழி தேடிய
விதியின்
செய்கை.
ஆர்.யோகநாதன்
வவுனியா.

### சுமைகள்..!

முன்னம்-
தலையில் பாரம்...
ஏறுமோ..?!
பின்னம்-
வயிறின் பாரம்...
தீருமோ?!
கோட்டைமுனை
வாஹிட் ஏ.குத்தூஸ்.



### விடிவைத் தேடி

போருக்கே
முடிவில்லாத போது
என்
வாழ்விற்கேது
விடிவு?
எம்.துரையன்
அக்கரைப்பற்று-8.

### அடிக்கல்

சமாதானமும்
சண்டை நிறுத்தமும்,
அகதிமுகாம்
கல்பெயர்த்து
அமைதி மண்டபத்துக்கு
அடிக்கல் நாட்ட,
அழைப்பு விடுத்தது
உனக்குத்தானா?
பூ.இதயரெத்தினம்
ஆரையம்பதி-03.

தாய் கொடுத்த முலைப்பாலின் வேகம்தானோ?
தலை மீது கல்ல டுக்கிப், போகின்றாயே
பால் வடியும் உன் முகத்தில், புழுதிதோய
பசுந்தளிரே! காற்றசைவில் கூந்தல் பாய
நீ சுமக்கும் சுமைகண்டு எந்தன் நெஞ்சம்
நெகிழ்ந்தாலும் என்ன செய்ய, நீ அகதிதானே!
திருமதி.லீலாவதி சிவலிங்கம்-கிரான்.


### சுமை!

பூமி என்னை
சுமக்கிறது,
வறுமையை
நான் சுமக்கின்றேன்!
யாழமீர் மர்சூன்
கல்கிஸ்ச.

### அவநம்பிக்கை

அமைதி குலைந்து
அடுத்த குண்டு
விழுவதற்குள்
அரை உயிரைக் காப்பாற்ற
அரண் அமைக்கும்
அவசரமோ?
ஆமினா மர்சூக்-மருதமுனை.

## கவிதைப் போட்டி இல-89



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.02.1995.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 89
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772,
கொழும்பு.

### துன்பம் நீங்கி வாழாதோ?

பச்சை மண்ணின் பசிச் சுமையை
சுட்ட மண்ணைச் சுமப்பதனால்!
தூக்கி வீச முடியு மென்றால்!
தூக்கச் செய்த பாதகரால்
துணையாய் நிற்றல் ஆகாதோ?
துயரம் நிறைந்த பாப்பாவும்
துன்பம் நீங்கி வாழாதோ?
க.சுசீலா-மட்டக்களப்பு.

### கேள்விக்கென்ன பதில்

வாசல்வரை வந்த
வறுமை ஒழிப்புத் திட்டமும்
எங்கள் வாழ்வை
உயர்த்தவில்லையே,
இருப்பில் இருக்கும்
திட்டங்களா
இனிமேல் எங்கள்
வாழ்வை உயர்த்திவிடும்..?
வை.சித்திக்கிருஷ்ணா—
பாண்டிருப்பு-1.

### வறுமை!

போர் ஓய்ந்து
போனாலென்ன?
போப் வந்து
போனாலென்ன?
பொல்லாத
வறுமை இன்னும்
போகாமற்
கிடக்கிறதே!
ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-2.

### அமைதி எதற்கு! யாருக்கு!!

அமைதி வேண்டுமென்று
அங்கலாய்க்கும் ஜெகத்தீரே!
அருகில்தான் நானும்
அடைபட்டுக் கிடக்கின்றேன்
அறுத்தெறியுங்கள் முதலில்
அழுத்தும் விலங்குகளை.
வி.ஆகுவாகனன்
கல்முனை-1.

### எட்டு கல்லு சுமக்க வேணும்

தங்கச்சிக்கும் அம்மாக்கும்
கொப்பி குளிச வாங்க வேணும்
கஞ்சி கொஞ்சம் காச்ச வேணும்
கால் வயிறு குடிக்க வேணும்
ஆறு கல்லு சுமந்து காணா
எட்டு கல்லு சுமக்க வேணும்!
எம்.பி.றிஜானா பேகம்
கொச்சிக்கடை.



### எங்கே அவை?

நீ வாராவாரம் சுமந்துவரும் அனைத்தும் மிகச் சிறப்பானவை. நான் முரசை எடுத்தவுடன் படிப்பது ரசிகனின் இலக்கிய நயத்தை.

ஜனவரி 08-14,1995ல் வெளியான முரசில் 3,18ம் பக்கங்களில் எதுவித அச்சும் படாமல் வெள்ளைத் தாளாக இருந்தது. இலக்கிய நயத்தையும் காணவில்லை. இது உண்மை, பரவாயில்லை என் முரசுக்காக மன்னிக்கிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள
சத்தியசீலன்-பொத்துஹர.

அச்சுப்பதிவு தவறாக இருந்தால் அந்த பிரதியை உடன் முகவரிடம் திருப்பிக்கொடுத்து வேறு முரசை பெற்றுக்கொள்ளலாம்.

-ஆ.ர்-

□□

நீ வாரம் ஒரு முறை சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. தேன் கிண்ணம், மகாபாரதம், தாய் தொடர், அரசியல் தொடர் இவை எல்லாம் என் மனத்தைக் கவர்கின்றன. மேலும் உன் ஆக்கங்கள் தொடரட்டும்.

கே. ஆர். தீபாநந்தினி, ஆர். உதயமலர், எம். பிரேமதி-பல்லகொட.

□□

அரிய பல செய்திகளை அள்ளி வரும் அற்புத முரசே!

உலகின் தலைசிறந்த நாவலான 'தாய்' தொடரை உன் மூலமாக வாசிக்கக் கிடைத்ததை பெருமையாகக் கருதுகிறோம். மகத்தான படைப்புகளை தன்னில் சுமந்துவரும் உன்னை ஒரு அற்புத புதையல் என்றுதான் கூற வேண்டும்.

எஸ். தாஜுன்நிஸா றஹ்மான்
பிலியந்தலை.

□□

வெள்ளி வந்தால் என் மனதில் தவிப்பு. இனிய முரசின் வரவை எண்ணி அடைவேன் பூரிப்பு. கரத்தினிலே தவழ்ந்தவுடன் தருகிறாய் களிப்பு. எனும் உன் ஆக்கமெல்லாம் சுவையான இனிப்பு.

தொடர்ந்தும் தரும் எக்ஸ்ரே ரிப்போர்ட், அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை போன்ற கட்டுரைகளை தயக்கமின்றி உண்மைகளை வெட்ட வெளிச்சமாக்குவதில் உனக்கு நிகர் நீயே முரசே. தொடர்ந்தும் உன் பணியைச் செய்திடுவாய் அதுவே உனக்கு சிறப்பு.

செல்வி சித்தி மர்ழியா
ஹுஸைன்-தியத்தலாவை.

□□

சத்தமின்றி நித்தம் வந்து சித்தங்களை சொத்தாக்கும் சத்தான முரசே!

உன் திருமேனி தாங்கிவரும் ஆக்கங்களில் தொடர்ந்து வரும் தாய், மகாசூலம் ஆகிய இரு தொடர்கதைகளும் வெரி வெரி பைன்.

அட்டூழியமான அராஜகங்களை அரசியல் தொடரில் அப்பட்டமாக எடுத்துக்கூறி அடுத்த வாரத்திற்கான 'விளைவறி வேட்கையை' தூண்டி வரும் அற்புதனுக்கு எனது நன்றிகள் உரித்தாகுக! ராசிகா! ரகசியமாக என்னிடமாவது மட்டும் உன்னைப் பறிற் சொல்லி விடுவாயா? எதிர் பார்ப்போடு ஏங்கித் தவிக்கும்

ஏத்தாலை வாசகன்.
ஏ.எச். ராஸீன் மொகமட்- ஏத்தாலை.

### உன் துணிச்சலோ துணிச்சல்

என் இனிய முரசே!

உண்மைச் செய்திகளை வெளி உலகுக்கு துணிச்சலுடன் எடுத்துக் காட்டும் உன் திறமையை எப்படி பாராட்டுவதென்றே தெரியவில்லை! நீ சுமந்துவரும் அம்சங்களில் குறிப்பாக எக்ஸ்ரே ரிப்போர்ட், கிரைம் டயறி, தேன் கிண்ணம், அரசியல் தொடர், தகவல் பெட்டி போன்றவை என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டன.

திருமதி. சந்திராணிதங்கத்துரை
சவளக்கடை-7.



நடந்ததை துல்லியமாகவும் நடக்கப் போவதை நாசூக்காகவும் நடக்கிறதை உண்மையாகவும் எக்ஸ்ரே ரிப்போர்ட் மூலம் கூறும் நாரதரின் அரசியல் இன்னும் எத்தனையோ பல சுவையான அம்சங்களை அள்ளி வீசும் முரசே நீரும் வாழ்க! உமது எழுதுகோலும் வாழ்க!

ஆர்.உதயச்சந்திரன்
அவிசாவளை.

□□

தொல் தமிழ் வளரட்டும்
திக்திக்கும் செய்தி கொண்டு
திக்கெட்டும் பவனி வரும்
பெருமை மிகு தினமுரசே!
உன்னிடத்தில் ஓர் அங்கம்
கவிதைப் போட்டியென
கட்டாயம்வெளிவரும் காலந்தவறாது.
பைந்தமிழ்ப் பணியிது பாராட்டுக்குரியது. தொடர்ந்து பணி யாற்று.
தொல் தமிழ் வளரட்டும்.

த. கனகரெத்தினம்
மத்திய முகாம்-6.

□□

என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தினமுரசே! நீ அள்ளி அள்ளி வழங்கும் அனைத்து அம்சங்களும் என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டன. உன்னை கையில் எடுத்தவுடன் எதை படிப்போம், எதை விடுவோம் என்று திண்டாடியே போய்விடுவேன். குறிப்பாக நீ வழங்கும் தகவல் பெட்டி என்னும் அம்சம் மிகமிக சுவையாக இருக்கின்றது. படிக்க படிக்க ஆவலை தூண்டிக்கொண்டே இருக்கின்றது.

செல்வி. பீ. றொசானா-அக்கரப்பத்தனை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# "புதிய போர் நிறுத்த ஒப்பந்தம் வேண்டும்"

# புலிகள் முன்வைத்துள்ள புதிய நிபந்தனைகள்!

(அரசியல் நிருபர்)

கடந்த 5ம் திகதி யாழ்ப்பாணத்தில் போர் இடை நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புலிகள் புதிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர். இதனையடுத்து போர் தவிர்ப்பு ஒப்பந்தம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

போர் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுவில் உள்ள யாழ் மாவட்டத்திற்கான வெளிநாட்டுப் பிரதிநிதிகளை புலிகள் அங்கு அழைப்பதில் தாமதம் காட்டி வந்தனர்.

கடந்த 5ம் திகதி வருமாறு புலிகளிட மிருந்து அழைப்பு வந்தது.

இதனையடுத்து முன்னேற்றமான சூழல் ஏற்பட்டுவிட்டது என்று சில விமர்சகர்கள் ஊகங்களை வெளியிட்டிருந்தனர்.

ஆனால், வெளிநாட்டு பிரதிநிதிகள் மத்தியில் புலிகள் புதிய நிபந்தனைகளை போர் இடை நிறுத்தம் தொடர்பாக விதித்துள்ளனர். இதனால் முன்னர் செய்யப்பட்ட போர் தவிர்ப்பு ஒப்பந்தம் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

5ம் திகதி காலையில் கண்காணிப்புக் குழு வெளிநாட்டு பிரதிநிதிகளோடு புலிகளது பிரதிநிதிகள் பேச்சு நடத்தியபோது பிரிகேடியர் பீரிசும் கலந்துகொண்டார்.

**அந்த பேச்சுவார்த்தை தொடர்பாக புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:**

## புதிய ஒப்பந்தம்

ஏற்கனவே தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களும், சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களும் கைச்சாத்திட்ட போர் இடை நிறுத்த ஒப்பந்தத்துடன், மேலுமொரு விரிவான போர் இடைநிறுத்த உடன்பாட்டை இணைப்பது தொடர்பாக 1ம் சுற்று பேச்சில் முக்கியமாக ஆராயப்பட்டது.

தமிழீழ தேசிய தலைவரும், சிறிலங்கா ஜனாதிபதியும் செய்துகொண்ட போர் இடை நிறுத்த ஒப்பந்தம் சுருக்கமான முறையில் அமைந்துள்ளதால் மீண்டும் ஒரு விரிவான உடன்பாட்டு அம்சங்களைத் தயாரித்து, விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் கைச்சாத்திட வேண்டியதன் அவசியம் குறித்து விடுதலைப் புலிகளும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ஆராய்ந்தனர். இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துக்கு தெரிவிக்கும்படி விடுதலைப் புலி பிரதிநிதிகள் பிரிகேடியர் பீரிசிடம் கேட்டுக்கொண்டனர்.

இவ்வாறு விரிவான போர் இடைநிறுத்த உடன்பாடு உருவாக்கப்பட்டு, அதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் போராளிகளின் நடமாட்டம், மீன்பிடி தடை நீக்கம் போன்ற விடயங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்ட பின்னர் அதில் இருதரப்பினரும் கைச்சாத்திடுவர். விரிவான போர் இடை நிறுத்த உடன்பாடு கைச்சாத்தான பின்னர் போர் இடை நிறுத்த கண்காணிப்பு குழுக்கள் முழுமையாக செயற்பட தொடங்கும்.

## விரிவான உடன்பாடு

போர் இடை நிறுத்தத் தொடர்பான தற்போதைய ஒப்பந்த ஆவணம் மிகவும் சுருக்கமாகவுள்ளதால், கண்காணிப்பு தொடர்பாக எழக்கூடிய பிரச்சனைகளைக் கையாளவும், கண்காணிப்பை சுலபமாக மேற்கொள்ளவும், போர் இடை நிறுத்தம் தொடர்பான- விரிவான விடயங்கள் அடங்கிய மேலும் ஒரு உடன்பாட்டு ஆவணம் தேவையென்பதை வெளிநாட்டு பிரதிநிதிகளும் ஏற்றுக்கொண்டனர்.

இவ்வாறான உடன்பாடு, போர் இடை நிறுத்தத்தை கண்காணிக்க தமக்கு வழிகாட்டி ஆவணமாக உதவும் எனவும் அப்பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

இவ்வாறான ஒரு விரிவான உடன்பாட்டை விடுதலைப் புலிகளும், அரசாங்கமும், இரு வாரங்களுக்குள் தயாரித்து கைச்சாத்திட்டால் தாம் சீக்கிரமாக செயற்படலாமெனவும், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் புலிகளுக்கும், அரச பிரதிநிதியான பிரிகேடியர் பீரிசுக்கும் தெரிவித்தனர்.

இவ்வாறு புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிருப்தி

போர் இடை நிறுத்த ஒப்பந்தம் குறித்து புலிகள் முன்வைத்துள்ள புதிய நிபந்தனைகள் அரசாங்க மட்டத்திலும் அதிருப்தியோடு நோக்கப்படுவதாகத் தெரிகிறது.

இரு தரப்பும் சுமுகமாகப் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்கு புலிகள் புதிதாக விதித்துவரும் நிபந்தனைகள் இடையூறாக அமைகின்றன என்று கருதப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளது நடவடிக்கைகள் தொடர்பாக படை வட்டாரங்கள் ஏற்கனவே அதிருப்தி தெரிவித்துள்ளன. இந்த நிலையில் கிழக்கில் தமது போராளிகளது சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடைகூடாது என்று புலிகள் கூறியுள்ளனர்.

புதிய உடன்பாட்டில் அதனையும் உள்ளடக்கவேண்டும் என்றும் புலிகள் வலியுறுத்தி உள்ளனர்.

அவ்வாறான புதிய உடன்பாட்டை செய்வதில் அரசுக்கு சில சங்கடங்கள் உள்ளன. என்று அறிய முடிகிறது. படைத் தரப்பினரும் புலிகளது புதிய நிபந்தனைகளை சந்தேகத்தோடு நோக்குகின்றனர்.

## மேலும் சிக்கல்

போர் இடை நிறுத்தம் தொடர்ந்து அமுலில் இருக்கவேண்டுமானால் புலிகளது நிபந்தனைகளை ஏற்கவேண்டிய நிலையும் காணப்படுகிறது.

ஏற்கனவே பூநகரிப் பாதை விவகாரத்தால் பேச்சுக்கள் தாமதமடைந்துள்ளன. இப்போது புலிகள் விடுத்துள்ள புதிய நிபந்தனைகள் மோதல் தவிர்ப்பு விடயத்திலும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன.

விட்டுக்கொடுப்பின் அடிப்படையில் இரு தரப்பும் நடந்துகொண்டால் மட்டுமே மோதல் தவிர்ப்பு தொடர்வதோடு பேச்சுவார்த்தையும் முன்னெடுக்கப்பட முடியும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## பட்ஜெட் பற்றி புலிகள்

பொதுஜன முன்னணி அரசின் முதலாவது வரவு செலவு திட்டத்தின் மூலம் சமாதானம் பற்றிய அதன் நோக்கம் தெளிவாகத் தெரிந்துவிடும். என்று 5.2.95 அன்று 'புலிகளின் குரல்' தெரிவித்தது. பாதுகாப்பு செலவீனங்களுக்காக ஒதுக்கப்படும் நிதியைப் பொறுத்து அரசின் நோக்கத்தை விமர்சிப்பதற்குப் புலிகள் நினைக்கின்றனர் என்று தெரிகிறது.

# "மேற்கத்திய நாடுகளின் பங்களிப்புக்கு வரவேற்பு!"

## வெளிநாட்டு பிரதிநிதிகள் மத்தியில் பிரபா உரை

**யாழ் சென்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளை கைகுலுக்கி வரவேற்ற புலிகளின் தலைவர் பிரபாகரன், "தமிழீழ மக்களது சார்பில் உங்களை வரவேற்கிறேன்" என்று தெரிவித்தார்.**

போர் தவிர்ப்பு ஒப்பந்த கண்காணிப்புக் குழுவின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கடந்த 5ம் திகதி (5.2.95) யாழ்ப்பாணம் சென்றனர்.

அங்கு காலையிலும் மாலையிலும் புலிகளோடு இரண்டு சுற்றுப் பேச்சுக்களில் அவர்கள் கலந்துகொண்டனர்.

2ம் சுற்றுப் பேச்சில் புலிகளது தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடு பிரிகேடியர் பீரிசும் சென்றிருந்தார்.

### திடீர் சந்திப்பு

இரகசியமான இடமொன்றில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை பிரபாகரன் சந்திப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரபாகரன் சந்திக்கப் போகும் விடயம் கூட திடீரென்றுதான் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

காலையில் நடந்த முதல் சுற்றுப் பேச்சில்கூட, அன்று மாலையில் பிரபாகரன் தம்மைச் சந்திப்பார் என்பது வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தெரிந்திருக்கவில்லை.

பாதுகாப்பு காரணங்களுக்காக பிரிகேடியர் பீரிஸ் பிரபாகரனை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அரச தரப்பு மீது புலிகளுக்கு உள்ள சந்தேகத்தையும், முன்னெச்சரிக்கை உணர்வையும் அதன் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது.

வெளிநாட்டு பிரதிநிதிகளை கைகுலுக்கி வரவேற்றார் பிரபாகரன். அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை பிரபாகரனிடம் அறிமுகம் செய்துவைத்தார்.

### புலிகள் ஒத்துழைப்பர்

வெளிநாட்டு பிரதிநிதிகள் மத்தியில் பிரபாகரன் உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

"போர் இடை நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்வதற்காக வெளிநாட்டு பிரதிநிதிகள் இங்கு வந்திருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பிலும், தமிழீழ மக்கள் சார்பிலும் நான் உங்களை வரவேற்கிறேன். போர் நிறுத்த உடன்பாடு செம்மையாக நடைமுறையாவதற்கு நீங்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். நீங்கள் பணியாற்றுவதற்குரிய முழு ஒத்துழைப்பையும், பாதுகாப்பையும் விடுதலைப் புலிகள் வழங்குவார்கள் என்பதனை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

### பிரச்சனைகள் உண்டு

"போர் இடை நிறுத்த ஒப்பந்தத்தில் சில பிரச்சனைகள், சிக்கல்கள் இருக்கின்றன. இது தொடர்பாக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேசித்தீர்த்து ஒரு உடன்பாட்டிற்கு வந்த பின்னர் அதன் அடிப்படையில் நீங்கள் செயற்படலாம்." என்று பிரபாகரன் தெரிவித்தார்.

மேலும் பிரபாகரன் தனது உரையில்; "மேற்கத்தைய நாடுகள் எமது மக்களின் பிரச்சனையில் ஆர்வமாக, அனுதாபமாக இருப்பதை நாம் அறிவோம். எமது பிரச்சனையில் சர்வதேச பங்களிப்பு எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

"ஒரு இறுதியான, நிலையான சமாதானம் ஏற்படுவதற்கு மேற்கத்தைய நாடுகளின் ஆக்கபூர்வமான பங்களிப்பு இருக்கவேண்டும்.

"வெளிநாட்டு பிரதிநிதிகள் அடிக்கடி இங்கு வரவேண்டும். புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பிரச்சனைகளை நேரடியாக அறிந்துகொள்ளவேண்டும்" என்றும் பிரபாகரன் அங்கு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளது தலைவர் தம்மை சந்தித்ததையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக வெளிநாட்டு பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தனர்.

# "கொடும்பாவி எரித்தவர் தங்கத்துரை"

# "குடியேற்றம் நடத்தியவர் சம்பந்தன்"

## பதவி ஒன்று மோதும் அணி இரண்டு

(சஞ்சீவன்)

திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்கத்துரை பதவி விலகவேண்டும் என்று திருகோணமலை கூட்டணி கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு.சம்பந்தனின் தூண்டுதல் காரணமாகவே அவ்வாறான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தங்கத்துரை ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"திருகோணமலையில் சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கி அவர்களது வாக்குகள் மூலம் தப்பிப் பிழைத்து முன்னர் பாராளுமன்றம் சென்றவர் சம்பந்தன். இம்முறையும் பாராளுமன்றம் செல்லும் ஆசையில் திரு. தங்கத்துரையை ஏமாற்றி கட்சிச் செயலாளர் என்ற அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து சம்பந்தன் ஒப்பந்தம் செய்தார். இதனை ஏற்க முடியாது" என்பது தங்கத்துரை ஆதுரவாளர்களது வாதம்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்கு ஆசனம் கொடுக்கவில்லை என்பதற்காக அப்போது கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த அமிர்தலிங்கத்தின் கொடும்பாவியை எரித்தவர் தங்கத்துரை" என்று கூட்டணியின் திருமலைக் கிளை தனது 8 பக்க அறிக்கையில் கூறியுள்ளது.

கட்சியைவிட்டு விலகிப்போய் தமிழ் நாட்டில் இருந்து வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் முகவராக தொழில் பார்த்தவர் திரு.தங்கத்துரை. கட்சியின் முடிவுக்கு அவர் கட்டுப்படாதது ஆச்சரியமல்ல என்று சம்பந்தன் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

சம்பந்தன் பெற்ற விருப்பு வாக்குகள் 19,525. தங்கத்துரை பெற்ற விருப்பு வாக்குகள் 22,409. ஆனால் திரு.தங்கத்துரையை ஏமாற்றி பதவி ஆசையால் சம்பந்தன் செய்த ஒப்பந்தம் அநியாயமானது.

ஆகக்கூடியது ஒரு வருடகாலமே திரு.தங்கத்துரை பதவியில் இருக்கக் கூடியதாகவும், திரு.சம்பந்தன் 4 வருடங்கள் பதவியில் இருக்கக்கூடிய வகையிலும் ஒப்பந்த விதிகள் அமைந்துள்ளன. பிரபல சட்டவாதி எனப்படும் திரு.நீலன் திருச்செல்வம் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது. இவ்வாறான ஒரு பாரபட்சமான ஒப்பந்தத்தை நீலன் திருச்செல்வமும் அங்கீகரித்தது ஏன்? என்று தங்கத்துரை ஆதரவாளர்கள் கேட்கின்றனர்.


திருமலை கூட்டணி கிளையைச் சேர்ந்த ஈழத்து நாதன் போன்றவர்களுக்கு திருமலை மக்களிடையே செல்வாக்கு கிடையாது. அவர்கள் பிரதேசவாதம் மூலம் இலாபம் பெற நினைக்கிறார்கள். அவர்களது முடிவுக்கு கட்டுபடத் தேவையில்லை எனவும் தங்கத்துரை ஆதரவாளர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

தாம் சம்பந்தன் ஆதரவாளர்கள் அல்ல, வாக்குறுதியை மீறும் தங்கத்துரை இந்த மண்ணின் பிரதிநிதியாக இருக்க தகுதியற்றவர் என்று சொல்கிறது கூட்டணியின் திருமலைக் கிளை.

சம்பந்தன் வேண்டுமானால் சட்ட நடவடிக்கை எடுக்கட்டும். நீதிமன்றத்தில் நாம் பார்த்துக்கொள்வோம் என்று சொல்கிறது தங்கத்துரை வட்டாரம்.

# பயோ டேட்டா

தமிழக வார இதழ் 'குமுதம்' பிரபலமானவர்கள் பற்றிய சுயவிபரங்களை வெளியிடுவதுண்டு. (பயோடேட்டா) குமுதத்தின் சமீபத்திய இதழில் பிரபாகரன் பற்றி வெளியான பயோடேட்டா இது.



**பெயர்:** வேலுப்பிள்ளை பிரபாகரன்.

**தொழில்:** போராட்டம்.

**பிடித்த இடம்:** காடும், கடலும்.

**பிடித்த பொருள்:** சயனைடு.

**பிடித்த ஏவல்:** மனித குண்டுகள்.

**நண்பர்கள்:** தற்போது சந்திரிகா.

**எதிரிகள்:** பிற தமிழ் இயக்கங்கள்.

**முதல் விருப்பம்:** தனித் தமிழ் ஈழம்.

**கடைசி விருப்பம்:** மாநில சுயாட்சி.

**ஒரே எரிச்சல்:** தமிழக கட்சிகள் கைவிட்டது.

**நம்புவது:** பாலசிங்கம்.

**நம்பாதது:** தளபதிகளை.

**பொழுதுபோக்கு:** சமாதானப் பேச்சுக்கள்.

**மறந்தது:** இந்தியாவின் உதவிகள்.

**மறக்காதது:** ஐ.பி.கே.எ.்.ப்.

**சமீபத்திய சாதனை:** போர் நிறுத்தம்.

**நீண்டகால சாதனை:** மன உறுதி.

# மட்டு-அம்பாறை அபிவிருத்தி அஷ்ரப் மீது கண்டனம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப்மீது புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கடந்த 3.2.95 அன்று இரவு யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி அக்குற்றச்சாட்டை தெரிவித்தது.

மட்டக்களப்பு, அம்பாறையில் அபிவிருத்தி, புனர்வாழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்த நடவடிக்கைகளில் தமிழ் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுவருகின்றன.

புதிதாக அமைத்துக்கொடுக்கப்படும் வீடுகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

அம்பாறைப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரே புனர்வாழ்வு அமைச்சராக இருப்பதால் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இவ்வாறு 'புலிகளின் குரல்' தெரிவித்திருக்கிறது.

# அபராதம் மூன்று இலட்சம்

**யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் தாம் விற்பனை செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் பற்றுச்சீட்டுக் கொடுக்கவேண்டும் என்பது புலிகளது அறிவுறுத்தலாகும்.**

விற்பனை வரி அறவிடுவதற்கு வசதியாக இருக்கும் என்பதால் அந்த அறிவுறுத்தலை கண்டிப்பாக நடைமுறைப்படுத்துமாறு புலிகள் கூறிவருகின்றனர்.

சமீபத்தில் யாழ் நகரில் உள்ள சிவகுமார் ஸ்ரோர்ஸ் என்னும் வர்த்தக நிறுவனத்தினர் ஒரு போத்தல் நல்லெண்ணெய் விற்பனை செய்தபோது பற்றுச்சீட்டு வழங்கவில்லை. கையும் மெய்யுமாக அதனைப் பிடித்த புலிகள் மூன்று இலட்சம் ரூபா அபராதம் விதித்தனர்.

# தாயகம் திரும்பி வரும் அகதிகள்

## தமிழக அரசு துரித நடவடிக்கை

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் ஆறாயிரம்பேரை முதல் கட்டமாக திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

1992 ஜுலை முதல் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் பணி தொடங்கியது. இதுவரை 45 ஆயிரத்து 175 பேர் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் உள்ள அகதி முகாம்களில் 64 ஆயிரத்து 577பேர் அகதிகளாக உள்ளனர்.

இம்மாதம் 27ம் திகதி முதல் (பெப்ரவரி 27) அதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகிறது. 'ராமனுஜம்' என்னும் கப்பல் மூலமாக 3 ஆயிரத்து 410 அகதிகள் தலைமன்னார் வருவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 171 படகுகள் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படவுள்ளன.

www.padippakam.com



# கொச்சிக்காப் போடியார் மடல்

## மட்டக்களப்பு புதினம்



அய்யாத்துரை அண்ணே,

"கிடந்தா கிடக்கட்டும், கிழவியையும் என்னையும் உள்ள உடு" எண்ட மாதிரி நம்மட ஆக்கள் நடக்கானுகள். மட்டக்களப்பில நல்ல புதினம். புதினம் எண்டா புதினமில்ல. டவுனுக்குள்ள உள்ள பள்ளியள நம்மட டி.ஈ. ரெண்டு நேரம் ஆக்கிப் போட்டாரு. ஏனெண்டு தெரியா எண்டு நம்மட கன்னங்குடா கரிச்சான்ர பொடியன் சொல்லித்துப் போறான். முகத்துவாரத்து முனியாண்டியும், அமிர்தகழி அமுங்குப் போடியும்- பாலமீன்மடுவில கண்டாப்ப இதுதான் கத. ரெண்டொரு நாளைக்கு பள்ளிக்கூடங்களில கசமுசக்கா இருக்கும். போகப்போக பழகித்தா சரியாப் போயிடும் எண்டு சல்லியருர கந்தரு இயினைக்க கண்டாப்ப சலசலத்துப் போறாரு.

இந்த சலசலப்புக்கெல்லாம் இந்த பனங்காட்டு நரி பயந்து போகாது அண்ண. பள்ளிக்கு வாற பெரிய புள்ளையளும் எடிகேசன் கந்தோருக்குள்ள, வெகு காலத்துக்குப் புறகு போனபோல. என்னவாம் எண்டா, டிவிசன் மாஸ்டர்மார் சுண்டின சுண்டாம். கொஞ்சம் கேசாத்தான் வேல போகுதாம். இவைய எங்கள என்ன செய்யிற அதுக்கெல்லாம் ஓட எங்களுக்கு மேற்ச் மூள இருக்கு எண்டு குறுமன்வெளி வாத்தி சொல்லித்துப் போறாரு.

அண்ண! மட்டக்களப்பில வெள்ளமும் எங்கள உட்டபாடில்ல. காடு கரம்பையெல்லாம் வெள்ளம்! உடைக்காத இடத்தில எல்லாம் உடைச்சிப்போட்டு அண்ண! சும்மா சொல்லக்கூடாது. வெள்ளத்திர அகுத்தி சொல்ல ஏலா. சனமும் என்ன செய்யும்? ஆத்தாக் கொடுமையில மேடென்ன, பள்ளமென்ன எண்டு பாராம நாலு நெல்ல எறிஞ்சி போட்டா நமக்கும் தீன்பாட்டுக்கு போதும் எண்டு நினைச்சதுகள், இந்த கண்கெட்ட ஆண்டவனுக்கு நம்மட வறுமை தெரியல்லையா எண்டு திட்டுதுகள். எல்லாப் பயிரும் நிற தண்ணிக்க எண்டா, அதுகள்தான் திட்டாம என்ன செய்யும்? என்ன! கடுதாசியில பேன புடிச்சி சம்பளம் வாங்கிற தொழிலா இது? இந்த மண்ணையும் ஆகாசத்தில இருக்கிற ஆண்டவனையும் நம்பித்தானே பூமியில நாங்க மண்ணக் கொத்திற..!

நாலு கோணக்க மாணக்க எழுத்தயாலும் படிச்சிருந்தா இந்தப்பாடு நமக்கு ஏன் வர. நாமளும் குளாய மாட்டிற்று ஏசிபீசி நோண் எண்டு பேசித்து தாள்தாளா எண்ணியிருக்கலாமே!

அண்ண! நான் யாழ்ப்பாணத்தில் உங்கள பாக்க வரேக்க கொஞ்சம் இங்கிலிசி பேசின நான்.இப்ப எண்டா எல்லாத்தையும் நல்லா மறந்து போனன். நம்மட ஆக்களெண்டா பொன்னைபோல ஆக்கள், நம்மட அடங்காத் தமிழனபோல ஆக்கள். மத்தவன்கிட்ட நிக்க ஏலாம எலுவா இங்கிலிஸ் பேசினதுகள். தமிழனுகள் நல்லா ஆக்களெண்டு பேர் வாங்கித் தந்த ஆக்கள் எலுவா?

இப்பயும் எண்டா நேத்துப்போல இருக்கு, நம்மட ஜி.ஜி.கோட்டில நிண்டு கதைக்கிறது? ஆருதான் கோட்டில ஜி.ஜிக்கு முன்ன முட்ட ஏலும். சட்டப் புத்தகத்த கரைச்சி குடிச்ச ஆக்கள் எலுவா?

நம்மட சுந்தரலிங்கத்தாரும் சிங்கம் எலுவா? இங்கிலாந்து ராணியிரை குடும்பத்துக்கும் படிப்பிச்சிக் குடுத்தவரு எலுவா? இப்பிடி நம்மட எத்தின தமிழ் ஆக்கள் சொல்லலாம். எல்லாரும் அண்ண! தமிழனுக்கு பெருமை தேடித் தந்த ஆக்கள். இப்ப ஆரு இரிக்கா இப்பிடி அடிச்சிப் பேசக்கூடிய ஆக்கள்?

அய்யாத்துரை அண்ண! புறக்கிற எண்டா பூமிக்குப் பாரமா புறக்கக்கூடாது. புறக்கிறஎண்டா நாலு நல்ல காரியத்த செய்யக்கூடியவனா புறக்கோணும். இல்லையெண்டா புறக்கக்கூடாது. நீங்க மறந்தாலும் இந்த புத்தியை மறக்கமாட்டன். நான் இப்ப மீசையையும் வெட்டிப்போட்டன். அந்த நாளில- நேத்தெண்டாப்போல இருக்கு- புளாவில கள்ளுக்குடிச்ச நாம- இந்தப் போடிர மீசைய ஒதுக்கிப்போட்டு-ஒரு கண்ணைக்கு ஒரு இழுவ இழுத்தா-ரேஸ்ட் எண்டா சொல்ல ஏலா அண்ண. வருமா அண்ண அந்தக் காலம்....?

நம்மட யாழ்ப்பாணத்தில ஊறுற கள்ள நாம எப்ப இனிக் குடிக்கிற..? சாகிறதுக்கு முதலில இந்தப்போடி அய்யாத்துர அண்ணயும் கூட்டித்து யாழ்ப்பாணம் போய்வரவேணும். பாப்பம், பாப்பம் பொறுத்தார் பூமி ஆள்வார். பொங்கினவர் காடுறைவார்'. எப்பிடி எண்ட பழமொழி?

# உடைத்தனர்—மகிழ்ந்தனர்

காத்தான்குடி பிரதான வீதியில் அமைந்திருந்த முக்கிய அரசியல் கட்சியொன்றின் நீல நிறமான- பள்ளிவாசலுக்குச் சொந்தமான கட்டிடம் பிரதேச சபையின் உத்தரவின்பேரில் தரைமட்டமாக்கப்பட்டது. மேற்படி கட்சியின் மாவட்ட அமைப்பாளருக்கும் மாவட்டத்தின் ஒரே பிரதி அமைச்சருக்குமிடையே நடந்த பனிப்போரில் பிரதி அமைச்சரின் பக்கமே நீதிமன்றத் தீர்ப்பு அமைந்ததால், கட்டிடம் உடைக்கப்பட்டபோது பிரதி அமைச்சரின் ஆதரவாளர்கள் சுமார் இரண்டு மணித்தியாலயம் பட்டாசு கொளுத்தினர்.

# திடீர் பாய்ச்சல்

மட்டு மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் திடீர் பாய்ச்சல்களை நடாத்தி வருகின்றது. குறித்த விலையிலிருந்து அதிகமாக விற்பனை செய்ததற்காகவும், விலைப்பட்டியல் தொங்கவிடாமைக்காகவுமே வர்த்தகர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள பொறுப்பதிகாரி திரு.எஸ்.தர்மகுலசிங்கம் தெரிவித்தார். எதிர்வரும் வாரங்களில் மேலும் பல வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார்.

# தொடரும் பனிப்போர்

காத்தான்குடி பிரதேசத்தில் அரசியல் பனிப்போர் ஆரம்பித்துள்ளது.முஸ்லிம் காங்கிரசிற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையையே இந்த பனிப்போர் நடக்கிறது. முஸ்லிம் காங்கிரசிற்குப் பக்கபலமாக தபால், தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சரும், ஆளும் கட்சிக்குப் பக்க பலமாக சுகாதார அமைச்சரும் உள்ளார்களாம். கட்சி கிளைகளை இருசாராரும் போட்டி போட்டுக்கொண்டு திறக்கின்றனர். முன்பு முஸ்லிம் காங்கிரசிற்கு ஐ.தே.க.இப்போது பொ.ஐ.மு.என சிலர் பேசித் திரிகின்றனர். *(காத்தான்குடி நிருபர்)*

# சிக்கன கடனுதவி சங்கத்தில் மோசடி!
# ஊழியர் சம்பளத்திலும் சுருட்டல்!

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச் சாரத்தில் பண மோசடிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிய வந்துள்ளது.

மாவட்டம் பூராகவுமுள்ள சுமார் ஐம்பது கிளைச் சங்கங்களின் கூட்டமைப்பே இச்சமாசம். கிளைச் சங்க உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தையும் அறிவுத்தரத்தையும் உயர்த்துவதற்காக என மேலிடத்தால் வழங்கப்பட்டு வரும் பெருந்தொகைப் பணம் பல கருத்தரங்குகள் நடத்தாமலேயே நடத்தப்பட்டதாக ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு மோசடியான முறைகள் அதன் முகாமையாளர் தில்லைநாதன் என்பவரால் கையாளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

மேலும் அங்கு பணியாற்றும் கொத்தணி உத்தியோகத்தர்களுக்கு 1500 ரூபா சம்பளம் வழங்கப்படுவதாக வவுச்சர்கள் தயார் செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும் தில்லைநாதன் அவ் உத்தியோகத்தர்களுக்கு 1200 ரூபாவையே சம்பளமாக வழங்கி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம் மோசடி கடந்த சில வருடங்களாக தொடர்ந்து இடம் பெறுவதோடு உண்மையான கொத்தணி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாகவே எண்ணிக்கை காட்டப்பட்டும் வவுச்சர் போடப்பட்டுள்ளது.

இத்தகைய நிர்வாகச் சீர்கேட்டையும் மோசடிகளையும் கண்டித்து திட்ட இணைப்பாளர் உட்பட கொத்தணி உத்தியோகத்தர்கள் ஆறுபேர் இவ்வூழல்கள் விசாரிக்கப்பட்டு நீதியான முடிவு வேண்டுமெனக் கோரி கடந்த மாதத்திலிருந்து வேலைக்குச் செல்லாமல் இருந்து வருகின்றனர்.

இயக்குநர் சபையோ தில்லைநாதனின் வாக்கை வேறுவிதமாகக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டிருப்பதன் மர்மம் குறித்து பரவலான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இவ் விடயம் திருமலை பா.உ.தங்கத்துரை உட்பட பல முக்கியஸ்தர்கள் கவனத்துக்குக்கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனது.

# நுளம்புகளை ஒழிக்க விசேட பயிற்சி
# மூளைக் காய்ச்சலை தடுக்க நடவடிக்கை!

*(காத்தான்குடி நிருபர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் மூளைக்காய்ச்சல் நோய்த் தடுப்புப் பிரச்சார நடவடிக்கைகளுக்கு சுகாதார திணைக்களம் உள்ளூராட்சி சபைகளின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளது.

இம் மாவட்டத்தில் இன்றுவரை மூளைக் காய்ச்சல் நோயினால் 15 பேர்வரை இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 100க்கும் அதிகமானோர் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகின்றது. இது தொடர்பான பரிசோதனை அறிக்கையின் பின்புதான் சரியான முடிவுக்கு வரமுடியுமென வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்பொழுது குடம்பி நிலை நுளம்புகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இடையிடையே பெய்துவரும் மழை காரணமாக தடுப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. அடுத்த கட்ட நடவடிக்கையாக வளர்ச்சியடைந்தது. நுளம்புகளை இரவில் புகைமூலம் அழிக்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான விசேட பயிற்சி தற்போது மலேரியா தடுப்புத் தலைமையகத்தில் பிராந்திய மலேரியா தடுப்பு உத்தியோகத்தர், பொது சுகாதார அத்தியட்சகர், வெளிக்கள உத்தியோகத்தர் உட்பட ஐந்துபேர் கொண்ட குழுவினருக்கு பயிற்சி வழங்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மண்முனைமேற்கு, களுவாஞ்சிக்குடி, கோறளைப்பற்று ஆகிய இடங்களில் நோய் அதிகம் காணப்படுவதாகவும் அவ்வதிகாரி மேலும் சொன்னார்.


## விளம்பரப் பகுதி



### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)**
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

### சர்வ வசியம்

காதல் கைகூடவில்லையா?
திருமணம் தடைப்படுகிறதா?
கல்வியில், தொழிலில் முன்னேற்றமின்மையா?
வெளிநாடு சென்றும் சிறந்த வேலை, வேறு வசதிகள் கிடைப்பதில் தாமதமா?

இன்றே சர்வ வசியம் செய்துகொள்ள கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

**S. Lafeer (Yogi)**
**Arasadi Rd,**
**Mawadipalli**
**KARAITIVU. (EP)**
**SRI LANKA.** *ADVT*

### விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்

விளம்பர மேலாளர்
இல.5,காவிந்த பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-06.

**Advertising Manager**
**No.5, Kavinda Place,**
**Kirulapone,**
**Colombo.**

தொலைபேசி **852041**


# பாதை சீர்கேடு! பாதசாரிகள் படும் பாடு!!

பேருவளை நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருக்கும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பாதைகளில் ஒன்றுகூட பாதசாரிகளினதோ, வாகனங்களினதோ நலனுக்கு ஏற்றதாக இல்லை.

எப்பாதையை பார்த்தாலும் குன்றும், குழியுமாக மிக மட்டமான நிலையில் பல வருடகாலமாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது. மழைக்காலம் வந்துவிட்டால் அவைகள் பாதைகள் என்று தெரிவதில்லை. சிறு சிறு குட்டைகள் போன்றே காட்சியளிக்கின்றது. இதனால் மக்கள் படும் இன்னல்களோ சொல்லில் அடங்காதது.

தற்போது கோடை காலம் வேறு ஆரம்பமாகி விட்டதால் எற்கனவே மழையாலும் வேறு காரணங்களினாலும் அழிவுற்று தற்போது 'தார்' இன்றி கற்களை மட்டுமே கொண்டுள்ள இவ்வீதிகளில் (பல இடங்களில் அதுவும் இல்லை) வாகனங்களின் போக்குவரத்தால் மேலெழும் தூசு மூட்டம் பாதசாரிகளை வெருண்டு ஓடச் செய்கின்றது.

இதில் மிகவும் வேதனைக்குரியது என்னவென்றால் பேருவளை பிரதான வீதியை (காலிவீதி) சென்று அடையும் வரையில் ஒரு பாதைகூட நல்ல முறையில் இல்லை என்பதுதான். இது சம்பந்தமாக பேருவளை பிரதேச வாசிகள் பல முறைப்பாடுகளை செய்தாலும் 'நகரசபை' அதை காதில் வாங்கிக்கொண்டதாக தெரியவில்லை. எனவே இப்பிரதேச வாசிகளின் நலனை முன்னிட்டு கூடிய கெதியில் பாதைகள் சீரமைக்கப்படவேண்டும் என்பதே அணைவரினதும் அவா! எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என 'முரசு' வாயிலாக கேட்கின்றேன்.


### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 492/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 251/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 128/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO.

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பிரபல வர்த்தக நிலையம் ஒன்று க்கு

### தமிழ் தட்டெழுத்தாளர் தேவை

ஆங்கிலத்தில் ஓரளவு ஆற்றலும் தமிழில் நல்லாற்றலும் இருத்தல் அவசியம். தங்களது சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

விளம்பரதாரர்
தமிழ் தட்டெழுத்தாளர்
மே/பா.தினமுரசு வாரமலர்
த.பெ.எண்.1772
கொழும்பு.

ADVERTISER
C/O.THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO.

*ADVT*


# வர்த்தமானி வருவதில் தாமதம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் வெளியிடப்படும் வர்த்தமானி குறுமன்வெளி உபதபால் அலுவலகத்திற்கு நீண்ட காலமாக மிகவும் தாமதமாகியே வந்து சேர்கிறது. 30.12.94 வெளியான வர்த்தமானியில் எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி 16.01.95 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 30.12.94 வெளியான வர்த்தமானி 17.01.95 அன்றே குறுமண்வெளி உப தபால் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. இதனால் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடைய இப்பகுதி இளைஞர்களும், யுவதிகளும் விண்ணப்பிக்க முடியாமல் விசனம் கொண்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதை கவனத்திற்கொண்டு இவ்வாறான சீர்கேடுகளைத் தவிர்த்து இனிமேல் வெளியிடப்படும் வர்த்தமானியை குறிப்பிட்ட தபால் அலுவலகத்திற்கு குறித்த காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டுமென கேட்கிறேன்.

சீ.ரவீந்திரன்-குறுமன்வெளி-11.

# நம்மூர் தொலைக்காட்சிகளில்
# தமிழ் வரட்சி நீங்க சில யோசனைகள்!

இலங்கையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலமாக அறிவியல், கலை நிகழ்ச்சிகளை வழங்கும் பிரபல நிறுவனங்கள், தங்கள் வாடிக்கையாளர்களாக தமிழ் பேசும் மக்களும் இருக்கின்றார்கள் என்பதை ஏனோ கண்டு கொள்வதில்லை.

அல்லது, தமிழ் பேசுவோர் தங்களின் தயாரிப்புக்களை விலை கொடுத்து வாங்குவதில்லை. தங்கள் வங்கிகளில் பணம் வைப்பதில்லை என்று கண்டு பிடித்து விட்டார்களோ..?

எனக்கு இந்தச் சந்தேகம் வரக் காரணம், இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி போன்ற தேசிய வங்கிகள் தமிழ் மக்களுக் கென எந்தவித நிகழ்ச்சிகளையுமே வழங்கு வதில்லை. இவை வாரா வாரம், வருடம் முழுவதும், சிங்கள நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை (ஸ்பொன்சர்) வழங்குகின்றன.

'மக்கள் வங்கி' வாரா வாரம் பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியொன்றை சிங்கள மாணவர்கள் மத்தியில் நடத்துகின்றது. மிகவும் பயனுள்ள இதுபோன்ற அறிவு நிகழ்ச்சிகளை தேசிய வங்கிகளிலொன்று முன்வந்து தமிழ் மாணவர்களிடையே நடத்தினால் என்ன?

அரச நிறுவனங்களான 'தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்' தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனம் போன்ற ஏராளமான நிறுவனங்களும்,

'சிங்கப்பூர் ஸ்ரீலங்கா'மில்க் ஃபூட்ஸ்' 'லீவர் பிரதர்ஸ்' போன்ற தமிழ் மக்களும் பாவிக்கும் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்களும் (இதில் தமிழ் நிறுவனங்களும் அடங்கும்) தமிழில் கலை நிகழ்ச்சிகளோடு அறிவியல் போட்டி நிகழ்ச்சிகளை ஒளி ஒலி பரப்பினால் தொலைக்காட்சிகளில் நிலவும் தமிழ் வறட்சி நீங்குவதோடு அறிவியலும் வளருமே.

கவனிப்பீர்களா...?

கே.ராம்ஜீ உலகநாதன்-கோவுஸ்ஸ-எல்ல.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புதிய யானைப் பாகனும் பொதுஜன முன்னணியும்!

# அரசு-புலிகள் பேச்சு ரணில் காத்திருப்பு!!

## எக்ஸ்ரே ரிப்போர்ட் – நாரதர்

“வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அரசுக்கு ஆதரவு.”

அப்படித்தான் கூறியிருக்கிறார் ரணில். அந்தக் கூற்று மூலம் தனது அரசியல் விவேகத்தையும் சற்று வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆரவாரப்பட்டு, ஆவேசப்பட்டு மூர்க்கமாக மோதும் முறையை ரணில் விரும்பவில்லை.

நிதானித்து, எதிரியின் அசைவுகளை கூர்ந்து கவனித்து இனித் தாக்கலாம் என்று தெரிந்தவுடன் அடி கொடுக்கும் உத்திதான் ரணிலுக்கு பிடித்தமானது.

மாபெரும் மக்கள் ஆதரவோடு பதவிக்கு வந்துள்ள அரசாங்கத்தோடு உடனடியாக மல்லுக்கட்டினால் அதனை திருவாளர் பொதுஜனம் இரசிக்கப்போவதில்லை.

அதனை நன்கு புரிந்துவைத்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்கா.

அதனால்தான் வேலை நிறுத்தங்களில் கூட ஐ.தே.கட்சி தன்னை வெளிப்படையாக அடையாளம் காட்டவில்லை.

பாராளுமன்றத்தில்கூட புதிய யானைப்பாகன் எதிர்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமைதியாகத்தான் அமர்ந்திருக்கிறார்.

பாராளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிக்கா ஐ.தே.கட்சியின் 17 வருடகால ஆட்சியை ஒரு பிடி பிடித்தார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்தபோது அக்கட்சியின் மூத்த தலைவர்கள் அமைதிப் படுத்தினார்கள்.

“தாக்குதல் தொடுக்க இது தருணமல்ல” என்று அக்கட்சி கருதுவதையே அக்காட்சி பிரதிபலித்தது.

அதாவது ஐ.தே.கட்சி அரசியல் களத்தில் தற்போது போர் நிறுத்தம் செய்திருக்கிறது.

இது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தம். ஆளும் கட்சி தனது தாக்குதலை நிறுத்தவில்லை.

போர் நிறுத்த நேரத்தில் தனது அணியை தயார்படுத்துவதில் சுறுசுறுப்பாக இறங்கியிருக்கிறார் ரணில்.

தேர்தல் நேரத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிரமப் பட்டுக்கொண்டிருக்கிறது பொதுஜன முன்னணி.

17 வருடகால ஐ.தே.கட்சி ஆட்சியின் நிர்வாகத்திற்கு பழக்கப்பட்டுவிட்ட அதிகாரிகளை புதிய ஆட்சி தனக்கேற்ப மாற்றிக் கொள்ளவும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

ஆட்சிக்கு வெளியே இருந்து விமர்சிப்பது எப்போதும் சுலபமான காரியம்தான்.

17 வருடகால ஐ.தே.கட்சி ஆட்சிமீது மக்களுக்கு ஏற்பட்ட சலிப்பு.

மக்களை வசீகரிக்கக்கூடிய தலைமைத்துவம் இல்லாமல் வயோதிப தோற்றத்தோடு காட்சியளித்த அரசாங்கம்.

இவற்றையெல்லாம் சரியான முறையில் பொதுஜன முன்னணி கவனத்தில் எடுத்திருந்தால் அவசரப்பட்டு வாக்குறுதிகளை வழங்கியிருக்கத் தேவையில்லை.

‘பாண் விலையை குறைப்போம்’ என்று பொதுஜன முன்னணி சொல்லியிருக்காவிட்டாலும் அதற்கு கிடைத்த வாக்குகள் தவறியிருக்கப் போவதில்லை.

ஐ.தே.கட்சியை 17 வருட காலமாக அசைக்க முடியாமல் போன பிரமிப்பு, எப்படியாவது அதனை தோல்வியடையச் செய்வதே முக்கியம் என்ற தீவிரமும் மக்களை கவரும் வாக்குறுதிகளை அதிகளவில் வழங்க காரணமாயிற்று.

இப்போது ஆட்சிக்கு வந்த பின்னர் நிதானித்து யோசிக்கும்போது கொஞ்சம் அவசரப்பட்டு அதிகமாகப் பேசிவிட்டோமோ என்று பொதுஜன முன்னணியே யோசிப்பதாகத் தெரிகிறது.

பல கட்சிகளது கூட்டு அமைப்பில் இயல்பாகவே எழக்கூடிய உள் சிக்கல்கள் ‘எங்களுக்கு கிடைத்தது போதாது’ என்னும் அதிருப்திகளும் லேசாகத் தலைகாட்டுகின்றன.

ஆனால், உண்மை என்னவென்றால் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா அரங்கில் தோன்றியிருக்காவிட்டால் பொது ஜன முன்னணிக்கு ஆட்சி அதிகாரம் ஒரு கனவாகவே இருந்திருக்கும்.

குறிப்பாக ‘இடதுசாரிகள்’ என்று தம்மை மறக்காமல் சொல்லிக்கொள்ளும் கட்சிகளால் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கவே முடியாது.

முன்னரைவிடப் பாதுகாப்பு பலப்படுத்தப் படுகிறது.

போர் நிறுத்தத்தின் பின்னர் புலிகள் முன்பைவிட மூர்க்கமாகத் தாக்கலாம் என்ற சந்தேகம் படையினருக்கு இல்லாமல் இல்லை.

எனவே-ஐ.தே.கட்சி அரசு-புலிகள் பேச்சுவார்த்தையின் முடிவுக்காக காத்திருக்கிறது.

அரசாங்கம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்றும் அக் கட்சி வற்புறுத்துகிறது.

அரசு ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்தால் தென்னிலங்கையிலும், ஏனைய தமிழ் பேசும் கட்சிகளிடமும் ஏற்படும் பிரதிபலிப்புக்களை கவனித்து தாக்குதலை தொடுக்கலாம் என்பதுதான் திட்டம்.

ஆனால், ரணில் தலைமையில் ஐ.தே. கட்சி இனவாத முகம் கொண்டதாக மாறாது என்று நம்பலாம்.

அதே சமயம் அரசு-புலிகள் பேச்சுவார்த்தையின் சாதக பாதகங்களை தனக்கு ஏற்ப பயன்படுத்த ஐ.தே.கட்சி முனையும் என்பதை மறுப்பதற்கில்லை.

அவ்வாறான ஒரு வாய்ப்பைக் கொடுக்கக்கூடாது என்பதில் பொதுஜன முன்னணியும் விழிப்பாகவே இருக்கிறது.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை, போர் தவிர்ப்பு முறிந்துபோனால் ஐ.தே.கட்சியும் அரசியல் அரங்கில் தற்போது செய்துகொண்டுள்ள போர் நிறுத்தத்தை முடித்துக்கொள்ளும்.

அதற்காக இப்போதே தயாராகி வருகிறது அக்கட்சி.

□□

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகள் ஒன்றுபட்ட முடிவுகளோடு செயற்படுவது என்று ஒரு முயற்சி எடுக்கப்பட்டது.

ஒரு சிறந்த நோக்கம் நிறைவேறவேண்டுமானால் பேச்சை குறைத்துக்கொண்டு செயலில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

ஆனால், அரசியலில் வாய்ப் பேச்சுக்களுக்கே முதலிடம் என்றாகிவிட்டது.

தமிழ் இனவாதிகள் ஒன்று கூடுகிறார்கள் என்னும் கருத்துப்பட ‘ஐலண்ட்’ ஆங்கில பத்திரிகை ஆசிரியர் தலையங்கமும் எழுதியாகிவிட்டது.

எனினும் பெப்ரவரி மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹொட்டலில் ஒற்றுமை முயற்சியின் கூட்டம் நடந்திருக்கிறது.

இ.தொ.கா., புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் அக் கூட்டத்தில் கலந்துகொண்டன.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரன் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் அந்த முயற்சிக்கு எதிரான கருத்துக்களையும் அவர் தெரிவிக்கவில்லை.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணி



தொண்டமான்



ரணில் விக்கிரமசிங்கா

## தொண்டாவின் அவசரம்

நாடு முழுவதும் தனித்து போட்டியிட்டு ‘நவ சம சமாஜ கட்சி’ வாங்கிய மரண அடியே அதற்கு சான்றாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான தாக்குதலை நடத்த ஐ.தே.கட்சி எதிர்பார்த்திருக்கும் முக்கிய முனை அரச-புலிகள் பேச்சுவார்த்தை.

புலிகள் ‘தமிழீழத்தை கைவிட்டு குறைந்த பட்ச உடன்பாட்டு வருவார்கள் என்பதை ஐ.தே.கட்சியோ அதன் தலைவர் ரணிலோ துளியும் நம்பத் தயாராக இல்லை.

அதனை வெளிப்படையாகத் தெரிவிக்கவும் அவர்கள் விரும்பவில்லை.

புலிகளின் நடைமுறைகள் எப்படி இருக்கின்றன என்று தமிழ் கட்சிகளிடமும், இராணுவ வட்டாரங்களிடமும் கவனமாகக் கேட்டறிந்து கொண்டிருக்கிறார் ரணில்.

அவருக்கு கிடைக்கும் தகவல்கள் புலிகள் பதுங்கியிருப்பது பாய்வதற்கே என்பதை உறுதிப்படுத்துகின்றன.

அரசின் முயற்சிகளை வெளிப்படையாக விமர்சிக்காவிட்டாலும் இராணுவ தரப்பினர் புலிகளை நம்பவில்லை.

கிழக்கு மாகாணத்தில் படை முகாம்களில்

முயற்சிகள் மூன்றடி நகரும் முன்பாகவே முழக்கங்கள் முன்னூறு முறை ஓங்கி ஒலிக்கின்றன.

இந்த முறையும் அப்படித்தான் நடந்திருக்கிறது. திரு.தொண்டமானும் அவரது இ.தொ.கா.வும் சற்று அதிகமாகவே பேசிவிட, ஏனைய கட்சிகளுக்கு சங்கடமாகிவிட்டது.

மூத்த தலைவர் என்ற வகையில் ஒற்றுமை முயற்சிக்கு அவரை நடுவராக நியமிக்கப்போக, அவர் களத்தில் இறங்கி ஆடுபவராக மாறிவிட்டார்.

“என்னைத் தலைவராக 28 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்துவிட்டார்கள்” என்று அவர் கூறியது அப்பட்டமான அரசியல் இலாப நோக்கம் என்றே கருதப்பட்டது.

தான் அவ்வாறு பேசவில்லை. தமிழ் பத்திரிகை ஒன்று திரித்து வெளியிட்ட செய்தி என்று தமிழ் கட்சிகளிடம் தொண்டா விளக்கமளித்தார் என்று தெரிகிறது.

எப்படியோ முயற்சிக்கு முன்பே செய்திகள் வெளியாகியதால் பரபரப்பான செய்திகளாகி சர்ச்சைகள் கிளம்பிவிட்டன.

அவலை நினைத்து உரலை இடித்தது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சனைகளில் ஒரே கருத்தை வெளியிடுவது, அரசியலமைப்பு சீர்திருத்தம் போன்ற பிரச்சனைகளில் தனித் தனியே கருத்துச் சொல்லாமல்ஒரே கருத்தை கூறுவது என்பவற்றுக்கு அப்பால் செல்லக்கூடிய ஒரு சூழல் இல்லை.

பாராளுமன்றத்தில் தமிழ் கட்சிகளைச் சேர்ந்த 28 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். தற்போதைய நிலையில் இது ஒரு பெரிய பலம்.

பாராளுமன்றத்தின் விதியை தீர்மானிக்கும் இந்தப் பலத்தை சரிவர பிரயோகித்தால் தமிழ் மக்களின் நலன்களுக்கு ஓரளவாவது உபயோகமாக இருக்கும்.

அதனைத்தான் செய்யமுடியுமே தவிர 28 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குரலில் அரசையோ, புலிகளையோ எதிர்த்து அரசியல் இயக்கம் உருவாக்க முடியாது.

திரு.தொண்டா புலிகளை ஆதரித்துப் பேசிவருபவர். தமிழர் விடுதலைக் கூட்டணி புலிகளை புகழ்ந்து பேசியதில்லை. திரு. தொண்டா புலிகளை புகழத் தவறுவதில்லை.

“நாம் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ள முடிகிறது என்றால் அதற்கு புலிகளே காரணம்” என்று பகிரங்கமாக கூறியவர் தொண்டமான்.

அரசு புலிகளோடு நடத்தும் பேச்சுவார்த்தையை அவர் பலமாக ஆதரிக்கிறார்.

தேர்தலை நிராகரிக்கவேண்டும் என்ற புலிகளது திட்டவட்டமான முடிவை மீறி போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு சென்றிருப்பவர்கள் கூட்டணியினர்.

வடக்கு-கிழக்கு தமிழர்களது ஏகப் பிரதிநிதிகள் தாமே என்ற புலிகளது கருத்துக்கு மாறாக தாமும் தமிழர்களது பிரதிநிதிகள் என்று பாராளுமன்றத்தில் அமர்ந்திருப்பவர்கள் கூட்டணியினர்.

ஆக, கூட்டணியைவிட தொண்டமான் தான் புலிகளை அனுசரித்து நடந்து வருகிறார்.

அவரது தலைமையில் புலிகளுக்கு எதிரான அரசியல் இயக்கத்தை உருவாக்க முயற்சி நடப்பதுபோல கூட்டணி விடுத்த அறிக்கை மிகச் சிறந்த ஜோக்.

புலிகளது விருப்பத்திற்கு முற்றிலும் விரோதமான அவசரகால சட்டம் போன்றவற்றை ஏகமனதாக நிறைவேற வழிசெய்துகொண்டு, புலிகளுக்கு விரோதமாக எந்த முயற்சியிலும் ஈடுபடமாட்டோம் என்று கூட்டணி கூறுவதுதான் மேலும் வேடிக்கை.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடுவது பற்றி புலிகள் அலட்டிக் கொள்ளவில்லை. அதனை ஒரு பெரிய விசயமாகவும் அவர்கள் நினைக்கவில்லை.

ஆனால், அரசாங்க வட்டாரங்களில் அதிர்ச்சி ஏற்பட்டது உண்மை. 28பேரும் சேர்ந்தால் நெருக்கடி ஏற்படும். இவர்கள் ஒன்றுபட்டு எதிர்த்து வாக்களித்தால் பாராளுமன்றம் கலையும் நிலைகூட ஏற்படலாம் என்பதால்தான் அரசு அதிர்ச்சியடைந்தது.

இந்த நேரத்தில்தான் அரசுக்கும் நல்ல பிள்ளையாக, புலிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள விரும்பி ஒரு அறிக்கையை கூட்டணி வெளியிட்டது.

ஆனால்,ஒரு விசயம் தெளிவானது. கூட்டணி தலைகீழாக நின்று புலிகளை தாஜா பண்ணினாலும்கூட கூட்டணியை புலிகள் நம்பமாட்டார்கள். நம்பிக்கெட்ட வரலாற்றை பிரபாவும் மறக்கமாட்டார்.

எதிரிகளைக்கூட பிரபா மதிப்பது உண்டு. நண்பர்களைப்போல் நடிக்கும் எதிரிகளை பிரபா நம்புவதே கிடையாது என்பதை கூட்டணி அறிந்திருப்பது நல்லது.

புலிகளுக்கு விரோதமாக நடந்து கொள்ள கூட்டணி விரும்பாவிட்டால் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற வேண்டியிருக்கும்.

ஒரு பதவிக்கே கீரியும்-பாம்புமாக திருமலையில் மோதிக்கொள்ளும் கட்சிக்கு அது லேசுப்பட்ட காரியமல்ல.

ஒற்றுமை முயற்சியை திரு. தொண்டமானோ அல்லது வேறு எவருமோ கட்சி அரசியலாக்குவது போல் நடந்துகொள்ள முற்பட்டால் அது தவறுதான்.

அதற்காக மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் கூட்டணி முடிச்சுப் போட முயல்வதும் சரியல்ல. ■



கிழக்கு சிங்கத்தார் நல்ல மனுசன். ஆனால் அடிக்கடி ‘அவரா சொன்னார் இருக்காது’ என்று நினைக்க வைக்கிறார். நிபந்தனையோடு அரசை ஆதரிக்கிறோம் எண்டு முன்பு சொன்னார். சமீபத்திலை நிபந்தனையில்லாத ஆதரவு கொடுக்கிறோம் எண்டு சொல்லியிருக்கிறார். ரெண்டு எழுத்தார் கிழக்கிலை நடமாடும் செய்தியாலை ஏற்பட்ட உதறலில் சமயத்திலை உளறுகிறாரோ?

வடக்கையும் கிழக்கையும் இணைந்திருக்கவிட்டு தீர்வு கண்டால் பிரச்சனைதான் உருவாகும் எண்டுதான் நீதிக்குப் பொறுப்பானவரும் நினைக்கிறாராம்.

கிழக்கிலை சோதனை முகாம் ஒண்டில் நடந்த கதை தெரியுமோ? “அடையாள அட்டை எங்கே?” “இல்லை!” “ஏன்?” “நான் புலி” “அதை நிரூபிக்க முடியுமா?” சீருடையினர் கேட்டார். “முடியும்” எண்டு சொன்ன அந்த உறுப்பினர் சயனைட் குப்பியையும், தனது இலக்கத் தகடையும் காண்பிச்சாராம். “சரி நீர் போகலாம்” என்றார் சீருடையார். ஆனால் பொதுசனத்தை மட்டும் துருவினமாம். இதைப் பார்த்த பொதுமகன் ஒருத்தர் என்ன சொன்னவர் தெரியுமோ? எங்களிட்டையும் ஒரு குப்பி இருந்தா செக் பண்ணுப் படாமல் போய்ச் சேரலாம். ஹி.ஹி.ஹி.

யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்தார் நிர்வாகத்திலை கண்டிப்பும் கட்டுப்பாடும் இறுக்கம்தான். ஆனாப் பாருங்கோ அதுக்குள்ளையும் சுழி ஓடுற ஆட்கள் இருக்கினம். சொன்னா நம்பமாட்டியள். பான் கொடுக்கிற ஒரு ரெண்டு எழுத்து உறுப்பினர் மேசைக்கு கீழாலை வாங்கிறாராம். மூன்று இலட்சம் களையா கொடுத்துப்போட்டு வந்து ஒரு தம்பதியினர் வெளிநாட்டுக்கு பறந்திட்டினம். வாங்கும்போது அவர் சொன்ன தத்துவம்: “இது வெளியாலை தெரிஞ்சா நீங்களும் தப்பேலாது என்ரை தலையும் தப்பாது”

## அதிரடி அய்யாத்துரை

திருவான மலையிலை தங்கமானவர் கலர் கலரா பிரசுரங்கள் அடிச்சு விநியோகிச்சிருக்கிறாராம். பெரும்பான்மை இனத்தினருக்கு நிலம் கொடுத்து குடியேற்றியவருக்கு ஏன் நாங்கள் விட்டுக்கொடுக்க வேணும் எண்டு தங்கமானவரின் ஆதரவாளர்கள் சீறுகினமாம்.

வடக்கு-கிழக்கு சபையில் அதிகாரமுள்ளவராக இருக்கும் ஒருவர் அரச பத்திரிகை ஒண்டுக்கு ஆலோசகரா இருந்தவர். இப்போது அந்தப் பதவி காலியாம். இருக்கிற பதவியும் எப்போது போகுதோ. கணேசா இது என்ன சோதனை. கோணாரே, தாண்டவக் கோணாரே, இன்றிருப்பது நாளையில்லை என்பது மெய்யோ சொல்லு கோணாரே! என்றுதான் பாடவேணும்.

சமாதானம் பற்றி வாய் வலிக்கப் பேசிய சிலருக்கு பதவிகள் கிடைச்சிருக்கு. ஆனால் பாருங்கோ சமாதானத்தைத்தான் இன்னும் காணேல்லை. இப்படி ஒரு பொதுமகன் வருத்தப்பட்டார். நியாயமான கவலைதானே பாருங்கோ.

கட்சிச் செயலாளரையே திட்டித் தீர்க்கினம். எங்களுக்கென்ன அவை தங்களுக்குள் அடிபட்டால் எங்களுக்கு வலிக்கவோ போகுது எண்டு இருக்கினமாம் தலைநகரிலை இருக்கிற கூட்டான கட்சி வட்டாரத்தினர். தலைநகர் கட்சி வட்டாரத்திலை தங்கமானவருக்குத்தான் சாதகமான நிலை இருக்குதாம். ஒப்பந்தம் பற்றி பேப்பரைப் பார்த்துத்தான் தெரியும் எண்டு தலைமைவிட்ட கதை வெளிச்சுப்போச்சு. நீலமானவர் முன்னிலையில் தலைநகர அலுவலகத்தில் வைத்துத்தான் ஒப்பந்தம் கைச்சாத்தானதாம். தங்கடை கட்சிக்குள் செய்த ஒப்பந்தத்தையே நிறைவேற்ற முடியேல்லை, வேறை ஒப்பந்தங்களைப்பற்றி எப்படிப் பேசுகிறது எண்டு கவலைப்பட்டார் பாருங்கோ கூட்டான கட்சி அபிமானி ஒருத்தர். அதுவும் சரிதான்.

வீரப் பேச்சுக்கள், விளாசலான அறிக்கைகள். உள்ளே இருக்குதாம் குத்துவெட்டுக்கள். விழுந்து வணங்கல்கள் இதையெல்லாம் அறிந்தால் நம்பி நலியமாட்டம்.

“ஆவதும் அழிவதும் அறிவதே அறிவு
மானமும், ஞானமும் மாத்திரை ஒன்றே
பெருமையும் சிறுமையும் பெற்றவர் அறிவர்
இன்பம் கண்டோர் துன்பம் விரும்பார்
நண்பு முதிர்ந்தால் பண்பு தோன்றும்
கலக்கமில்லா விளக்கம் ஞானம்
மக்கள் வாழ்வு சிக்கல் மிக்கது
தெளிந்த குடிமை தேர்வது கடமை.
ஆய்ந்து தெளிந்தோர் தேய்ந்து நலியார்...”

கி.அரங்கசாமி என்ற கவிஞர் எழுதியது இது. காலப் பொருத்தம் கருதி தந்திருக்கிறார்.

# புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவுகள்

## அரசியல் தொடர்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## 14

### எரிக்கப்பட்ட பிரசுரங்கள்

புலிகள் அமைப்பில் தீவிரமாக இயங்கியவர் ஊர்மிளாதேவி.

ஊர்மிளாதேவி பற்றி இலங்கையின் இரகசியப் பொலிசாருக்கு தெரிந்துவிட்டது. அவர்கள் தேடத் தொடங்கினார்கள். ஊர்மிளாதேவியை இந்தியாவுக்கு அனுப்பினார் பிரபாகரன்.

தமிழ் நாட்டில் புலிகளின் அலுவலகம் ஒன்று இருந்தது. ஊர்மிளாதேவியிடம் அந்த அலுவலகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

ஊர்மிளாவுக்கும் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் சிலருக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கின.


இதே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் போக்கு குறித்து புலிகளுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் ஏற்படத் தொடங்கின.

'பிரபாகரன் கூட்டணியினரின் வேகம் போதாது என்று நினைத்தபோதும் அமுதர் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிடவில்லை.

தமிழ் நாட்டில் இருந்த உமா மகேஸ்வரன் மற்றும் புலிகளது முக்கியஸ்தர்கள் பிரசுரங்கள் அச்சிட்டு யாழ்ப்பாணத்திற்கு படகு மூலம் அனுப்பினார்கள்.

அந்தப் பிரசுரங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை குறைகூறும் வாசகங்களை கொண்டிருந்தன.

தமக்கு எதிரான பிரசுரங்கள் வந்திறங்கியுள்ள விசயம் அமுதரின் காதுக்கு எட்டியது.



லெஃப்ரினன்ற் ஜெனரல் லூகாஸ் சாள்ஸ் அன்ரனி (சீலன்)

தாக்குதல் ஒன்று நடக்கக்கூடும் என்பதையே அப்போது நினைத்துப் பார்க்காத நேரம்.

'பயங்கரவாத நடவடிக்கைகளை' ஒடுக்கியே தீருவது என்று அரச படையினர் கங்கணம் கட்டியிருந்தனர்.

ஆனால், போராளிகள் அரச படைகளின் கோட்டைகளுக்குள்ளே தேடி வருவார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

நள்ளிரவுக்குப் பின் நடைபெற்ற திட்டமிட்ட தாக்குதலில் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் போராளிகளின் கைக்கு வந்தது.

அங்கிருந்த ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டு வெற்றிகரமாக தப்பிச் சென்றனர் உமா-சுந்தரம் குழுவினர்.

முதன் முதலில் தமிழ் போராளிகளால் நடத்தப்பட்ட பொலிஸ் நிலைய தாக்குதல் அதுதான்.

அரசாங்கம் திகைத்துப்போனது. பொலிஸ் நிலைய பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன.

### புதிய பாதை

போராளிகளது வளர்ச்சியை அரசாங்கம் கவலையோடு கவனித்தது.

கூட்டணித் தலைமையும் உமா-சுந்தரம் குழுவினரது வளர்ச்சியை அதிருப்தியோடு நோக்கியது.

அதனை கௌரவிக்கவே அவருக்கு பதவியுயர்வு கொடுக்கப்பட்டது என்று கண்டனம் எழுந்தது.

பொலிசாரால் ஆயுதம் ஏந்திய போராளிகளை சமாளிக்க முடியாது. இராணுவத்தினரை போராளிகளால் எதிர்க்க முடியாது என்று நினைத்தது அரசு.

அதனால் யாழ்ப்பாணத்தில் இராணுவ ரோந்துகள் அதிகரிக்கப்பட்டன. முக்கிய சந்திகளில் இராணுவத்தினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இரண்டு இராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கையில் துப்பாக்கி இருந்தபோதும் தம்மை தாக்கும் துணிச்சல் யாருக்கும் வராது என்ற நம்பிக்கையில் விழிப்பாக இருக்கத் தவறினர். சைக்கிளில் வந்து இறங்கினார்கள் சில இளைஞர்கள். இராணுவ வீரர் ஒருவரது அருகில் வந்தார் ஒரு இளைஞர். இராணுவ வீரர் என்ன நடக்கப் போகிறது என்று ஊகிப்பதற்கு இடையில் அந்த இளைஞர் கைத்துப்பாக்கியை உருவினார்.

தோட்டா பறந்தது. அதே சமயம் இன்னொரு இராணுவ வீரரும் சுட்டு வீழ்த்தப்பட்டார்.

# கொள்ளையர் என்று தாக்கிய பொதுமக்கள்

பிரபாவை அழைத்து பேசினார் அமுதர். துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படாமல் எரிக்கப்பட்டன.

### ஊர்மிளா விவகாரம்

இதே நேரம் பிரபாகரனால் உமா மகேஸ்வரன்மீது ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இயக்க உறுப்பினர்கள் காதலிக்கக் கூடாது என்ற விதியை உமா மீறிவிட்டார்.

உமாவும், ஊர்மிளாவும் காதலிக்கின்றனர். இது இயக்க விரோதம் என்று குற்றம் சாட்டினார் பிரபா.

'காதலிப்பது தவறு' என்ற வாதத்தை உமா ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த முரண்பாடு பெரிதாகியபோது உமா மகேஸ்வரன் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறினார்.

உமா மகேஸ்வரனுக்கு மரண தண்டனை விதிப்பதாக பிரபாகரன் அறிவித்தார்.

தண்டனையை நிறைவேற்ற உமா மகேஸ்வரனைத் தேடித் திரிந்தார் பிரபாகரன்.

### கூட்டணியால் முரண்பாடு

உமா மகேஸ்வரன் வெளியேறிய பின்னரும் புலிகளுக்குள் முரண்பாடுகள் இருந்தன.

பிரபாகரனின் கூட்டணி சார்பான போக்கை புலிகளுக்குள் ஒரு சாரார் விரும்பவில்லை.

1980ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நீர்வேலியிலும், காரைநகரிலும் புலிகள் இயக்கத்தினரின் மாநாடு ஒன்று நடைபெற்றது.

போராளிகளை தேடி யாழ் குடாநாட்டில் படையினர் சல்லடை போட்டு தேடித் திரிந்தபோது 40ற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒன்று கூடினார்கள்.

அந்த மாநாட்டில் புலிகளுக்குள் இருந்த கருத்து முரண்பாடுகள் வெடித்தன.

பிரபாகரனின் அமிர் ஆதரவு நடவடிக்கைகள் விமர்சிக்கப்பட்டன.

**பிரபாகரனுக்கு ஆதரவாகவும், எதிராகவும் புலிகளுக்குள் இரு பிரிவுகள் உருவாகின. 19 பேர் பிரபாகரனுக்கு ஆதரவாகவும், 13 பேர் எதிராகவும் நின்றனர். ஏனையோர் ஒதுங்கிக்கொண்டனர்.**

சுந்தரம், செல்லக்கிளி, நாகராசா, ஐயர் போன்றோர் அந்தக் காலகட்டத்தில் விலகியோரில் முக்கியமானவர்கள்.

இதில் சுந்தரத்திடம்தான் இயக்கத்தின் ஒரு பகுதி ஆயுதங்கள் இருந்தன.

மக்கள் மத்தியில் அரசியல் வேலைகளில் ஈடுபடவேண்டும் என்று கருத்துக் கொண்டிருந்தார் சுந்தரம்.

சுந்தரம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டார் பிரபாகரன்.

இதேவேளை சுந்தரம் குழுவினரும் தம்மை தமிழீழ விடுதலைப் புலிகள் என்றே அழைத்துக்கொண்டனர்.

புலிகள் இயக்கத்திலிருந்து பிரபாகரனுடன் முரண்பட்டு வெளியேறிய உமா மகேஸ்வரனையும் சுந்தரத்தையும் சந்திக்க வைக்க ஒரு முயற்சி நடந்தது.

இந்த முயற்சியில் முன்னணியில் இருந்தவர் சந்ததியார்.

1980ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சுந்தரம் குழுவினரோடு உமா மகேஸ்வரன் சேர்ந்துகொண்டார்.

### பிரபாவின் முடிவு

இதே வேளையில் பிரபாகரன் அணியினர் மத்திய செயற்குழு ஒன்றை உருவாக்கினார்கள். அதில் ஏழுபேர் இருந்தனர்.

## அற்புதன் எழுதுவது

பிரபாகரன், கலாபதி, கடாபி, அன்ரன், சாந்தன், சீலன், ராகவன் ஆகியோரே அந்த ஏழு பேர்.

சுந்தரம் குழுவினரும் உமா மகேஸ்வரனும் இணைந்துகொண்டதையடுத்து பிரபாகரன் ஒரு முடிவுக்கு வந்தார்.

குட்டிமணி, தங்கத்துரை குழுவினருடன் இணைந்து செயற்படலாம் என்பதுதான் பிரபாகரன் செய்த முடிவு.

இதனை ராகவன், கடாபி, கலாபதி ஆகியோர் விரும்பவில்லை.

சாந்தன் இயக்கத்தைவிட்டு ஒதுங்கிச் சென்றார். இதனால் புலிகளது செயற்குழு 3-3 என்று இரு அணியாக நின்றது.

குட்டிமணி-தங்கத்துரை குழுவினரோடு பிரபாகரன் அணியினர் இணைந்து கொண்டனர்.

இரு அணியினரும் இணைந்து நிதி சேர்க்கும் நடவடிக்கையில் குதித்தனர்.

யாழ்ப்பாணத்தில் குரும்பசிட்டி என்னும் இடத்தில் பிரபலமான நகை அடைவு பிடிக்கும் கடை ஒன்று இருந்தது.

அதன் உரிமையாளர் வன்னியசிங்கம். அந்த நகை அடைவு கடை குறிவைக்கப்பட்டது.

இயக்கம் என்றால் அரச வங்கிகளில் தான் கொள்ளை நடத்துவார்கள். தனியாரிடம் கொள்ளையிடமாட்டார்கள் என்று அப்போதெல்லாம் பொதுமக்கள் நம்பியிருந்தனர்.

### மக்கள் எதிர்ப்பு

இதனால் நகை அடைவு கடையில் கொள்ளை நடந்தபோது அதனை இயக்க நடவடிக்கை என்று மக்கள் நினைக்கவில்லை.

தனிப்பட்ட கொள்ளையர்கள் என்று நினைத்த மக்கள் உண்மை அறிந்ததும் பிரபாகரன், குட்டிமணி, தங்கத்துரை, சிறீசபாரத்னம் ஆகியோரை நோக்கி கற்களை

வீசினார்கள். தாக்குவதற்கு முற்பட்டார்கள்.

கல்லுகள், பொல்லுகள், கத்தி, கம்புகள் சகிதம் ஊரவர் திரண்டதைக்கண்ட குட்டிமணி வானை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்.

கூட்டம் கலையமறுத்து முன்னேறியது. கூட்டத்தை நோக்கி துப்பாக்கி திரும்பியது. அதில் சிலர் காயமடைந்தனர். ஒருவர் கொல்லப்பட்டதாகவும் நினைவிருக்கிறது.

**'குரும்பசிட்டியில் துணிகரக் கொள்ளை.'**

**'கொள்ளையர் வெறியாட்டம்.'**

1981இல் நடைபெற்ற அக்கொள்ளை பற்றி பத்திரிகைகள் அவ்வாறுதான் செய்திகள் வெளியிட்டன.

பொலிசார் இயக்கங்கள்மீது சந்தேகங்கள் எழுப்பியபோதும் அதனை மக்கள் நம்ப மறுத்தனர்.

தனியாரிடம், அதுவும் ஒரு தமிழரிடம் இயக்கக்காரர் கொள்ளையிட மாட்டார்கள் என்று நம்பப்பட்டதே அதற்கான காரணமாகும்.

'தமிழ் புதிய புலிகள்' (T.N.T) என்ற பெயரில் இயங்கி பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் மாற்றப்பட்டது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

தமிழ் புதிய புலிகள் என்ற பெயரில் இயங்கியபோது அதன் தலைவர் போல செயற்பட்டவர் செட்டி என்றழைக்கப்படும் தனபாலசிங்கம்.

இவர் பின்னர் பொலிசாருக்கு தகவல் கொடுப்பவராக மாறினார்.

1981ம் ஆண்டு கல்வியங்காட்டில் செங்குந்தா வீதியில் உள்ள செட்டியின் வீட்டுக்கு குட்டிமணியுடன் சென்றார் பிரபாகரன்.

செட்டியை சுட்டுக்கொன்றார் குட்டிமணி.

பிரபாகரன் அணியினர் குட்டிமணி-தங்கத்துரை குழுவினரோடு இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளை கடாபி, ராகவன் போன்றோர் விரும்பவில்லை.

யாழ் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த புலிகள் அமைப்பைச் சேர்ந்த ரி.சிவகுமாரன் 'உணர்வு' என்னும் பத்திரிகை ஒன்றை நடத்திவந்தார்.

பிரபாகரன் அணியினரது நடவடிக்கைகளை மறைமுகமாக அப்பத்திரிகை விமர்சித்தது.

### பொலிஸ் நிலைய தாக்குதல்

இதே நேரத்தில் உமா-சுந்தரம் குழுவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தின்மீது குறிவைத்தார்கள்.

1981ம்ஆண்டு ஜுலையில் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்தனர் உமா-சுந்தரம் குழுவினர்.

பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்து

அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. 'புதிய பாதை' என்னும் மாதப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார் சுந்தரம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் போக்கை 'புதிய பாதை' கடுமையாக சாடியது.

'புதிய பாதை' பத்திரிகையை நடத்தியதால் உமா-சுந்தரம் குழுவினர் 'புதிய பாதை குழுவினர்' என்றும் அழைக்கப்பட்டனர்.

உமா-சுந்தரம் குழுவினர் மக்கள் மத்தியில் வேலை செய்வதன் ஒரு கட்டமாக புனர்வாழ்வு பணிகளில் ஈடுபட்டு வந்தனர்.

### கே.சி. நித்தியானந்தா

1947ம் ஆண்டு இலங்கையில் அரச ஊழியர் வேலை நிறுத்தம் ஒன்று நடைபெற்றது.

அந்த வேலை நிறுத்த இயக்கத்தில் முக்கிய பாத்திரம் வகித்தவர் கே.சி.நித்தியானந்தா. இவர் (G.C.S.U) தொழிற்சங்க தலைவராக இருந்தவர். வேலை நிறுத்தம் காரணமாக வேலை இழந்த கே.சி.நித்தியானந்தா ஆயுதப் போராட்ட அமைப்புக்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார்.

இவரது உதவியோடு நெடுங்கேணிப் பகுதியில் சில புனர்வாழ்வு நடவடிக்கைகளில் உமா மகேஸ்வரன் ஈடுபட்டிருந்தார்.

கே.சி.நித்தியானந்தாவின் பெறாமகன் தான் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமாக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா என்பது குறிப்பிடத்தக்கது.

கே.சி.நித்தியானந்தா ஈரோஸ் அமைப்போடும் தொடர்பு கொண்டிருந்தார்.

இதனால் உமா-சுந்தரம் குழுவினர் பின்னர் 'காந்தீயம்' என்னும் அமைப்போடு தொடர்பை ஏற்படுத்திக்கொண்டனர்.

கட்டிடக் கலைஞரான டேவிட் என்பவரது தலைமையில் இயங்கிய 'காந்தீயம்' அமைப்பின் ஊடாக உமா-சுந்தரம் குழுவினர் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

1983ம் ஆண்டு ஜுலையில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட டாக்டர் இராஜசுந்தரம் 'காந்தீயம்' அமைப்பின் அமைப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுதப் போராட்ட அமைப்புக்கு காந்தியின் பெயரிலான நிறுவனமே ஒரு கவசமாக செயற்பட்டது ஆச்சரியமல்லவா?

ஆனால், அது காலத்தின் கட்டாயம்.

### இராணுவம் மீது தாக்குதல்

1981ம் ஆண்டு அக்டோபர் பிரிகேடியர் வீரதுங்காவுக்கு மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு கொடுத்தார் ஜே.ஆர்.

இலங்கையின் இராணுவத் தளபதியாகவும் வீரதுங்கா நியமிக்கப்பட்டார்.

வடக்கில் வன்முறைகளையும் அரச பயங்கரவாதத்தையும் வீரதுங்கா கட்டவிழ்த்துவிட்டார்.

இரண்டு இராணுவத்தினரும் உயிர் இழந்தனர். அவர்களது ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு சைக்கிளில் தப்பிச் சென்றனர் இளைஞர்கள்.

1981ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் திகதி நடைபெற்றது அந்த தாக்குதல்.

இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக தமிழ் போராளிகள் முதன் முதலில் நடத்திய கெரில்லா தாக்குதல் அதுதான்.

அதற்கு தலைமை தாங்கியவர் சீலன் என்றழைக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி. இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர்.

குட்டிமணி-தங்கத்துரை குழுவோடு பிரபாகரன் அணியினர் இணைந்திருந்த போதே இத்தாக்குதல் நடைபெற்றது.

சாள்ஸ் அன்ரனி, பிரபாகரன் அணியைச் சேர்ந்தவர். அதனால் அத்தாக்குதல் நடவடிக்கையை புலிகள் தம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பட்டியலில் சேர்த்து குறித்துவைத்துள்ளனர்.

வீரதுங்காவுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதை கண்டித்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

### மாவட்ட அபிவிருத்தி சபை

ஆயுதப் போராட்டம் காட்டில் பற்றிய தீயாக வளர்ந்துவருவதை அவதானித்தார் ஜே.ஆர்.ஜயவர்த்தனா.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை அழைத்துப் பேசினார் ஜே.ஆர்.

"மாவட்ட அபிவிருத்திச்சபை தருகிறேன் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

தமிழீழ தேசிய மன்றத்தை கூட்டுவதற்கு 77 பொதுத் தேர்தலில் மக்களது ஆணை கேட்டவர்கள் கூட்டணியினர்.

1981ல் ஜே.ஆர். கொடுத்த மாவட்ட அபிவிருத்தி சபையோடு மக்களிடம் வந்தார்கள்.

"கிடைப்பதை பெற்றுக்கொண்டு தொடர்ந்து போராடுவோம். தமிழீழத்தை நாம் கைவிடவில்லை."

என்றனர் கூட்டணியினர். கொதித்துப் போனார்கள் இளைஞர்கள்.

**"கேட்டது தமிழீழம், கிடைத்தது மாவட்டம்"**

**"பிடிப்பது ஆலவட்டம்.**
**பெற்றுக்கொண்டது மாவட்டம்."**

என்றெல்லாம் சுவர்களில் சுலோகங்கள் எழுதினார்கள் இளைஞர்கள்.

"தம்பிமார் இரத்தத் துடிப்பில் பேசுகிறார்கள். இராஜதந்திரம் புரியவில்லை."

என்றார்கள் கூட்டணித் தலைவர்கள்.

உமா-சுந்தரம் குழுவினர் ஒரு திட்டம் தீட்டினார்கள். ஒரு விபரீதத்திற்கு வித்திட்ட திட்டம் அது.

(இன்னும் வரும்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# நீறு பூத்த நெருப்பாக போர் தவிர்ப்பு ஒப்பந்தம்



## அலசுவது-இராஜதந்திரி

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் எத்தகைய கோணத்தில் அமைந்திருக்கும் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாக இருக்கின்றது.

இருதரப்பினருமே பேச்சுவார்த்தைகளில் தமக்கிருக்கும் ஆர்வத்தை வெளியிடுகிறார்களே தவிர, அப்பேச்சுக்களை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை ஆமைவேகத்திலேயே அவர்கள் வைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் போர் தவிர்ப்பு ஒப்பந்தமொன்றை கடந்த ஜனவரி மாதம் 8ந் திகதி செய்திருந்தனர்.

இப்போர்தவிர்ப்பு ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டதிலிருந்து பாரிய தாக்குதல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

சந்திரிகா அரசைப் பொறுத்தவரை இப்போர் தவிர்ப்பு ஒப்பந்தமென்பது ஒரு வெற்றியாகவே கருதப்படுகின்றது.

ஆயினும் போர் தவிர்ப்பையடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியல் அணுகுமுறைகள் மிகவும் மந்தகதியில் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

'தாமதித்து வழங்கப்படும் நீதி ஓர் அநீதி' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுவதுண்டு. (Delayed Justice is an injustice)

தாமதங்களால் சந்தேகங்கள், தப்பெண்ணங்கள் தோன்றுவதும், நேர்த்தியான நோக்கங்கள் நேர்மாறாக திசைதிரும்பும் சூழ் நிலைகள் உருப்பெறுவதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தம் கடந்த ஒரு மாதகாலமாக பாரிய தாக்குதல்களை தவிர்த்திருக்கக் காணப்படுகின்றது.

ஆயினும் படையினர் தரப்பில் இருந்து வெளியாகும் தகவல்களை நோக்கும் போது ஆங்காங்கே போர் தவிர்ப்பு அமுலாக்கத்தை மீறும் செயல்களும் இடம் பெற்றிருப்பது தெரிய வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மிரட்டல் நடவடிக்கைகளில் இறங்குவதாகவும், தம்மைப் பலப்படுத்தி வருவதாகவும் படையினர் குறிப்பிடுகின்றனர். மேலும் மீண்டும் ஒரு யுத்தத்துக்குத் தயார் படுத்தும் வகையில் புலிகள் காப்பரண்களை கட்டியும், பதுங்கு குழிகளை சீரமைத்தும் வருவதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

எனவே இத்தகைய குற்றச்சாட்டுக்களை படையினர் முன்வைப்பதற்கும், இவை குறித்து மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகள் தப்பபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் போர் தவிர்ப்பு அமுலாக்கத்தையடுத்து உறுதியான அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாததே முக்கிய காரணமாக இருக்கின்றது.

போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதன் மூலம் இனப்பிரச்னைத் தீர்வு குறித்த அணுகுமுறைகளில் நீண்டதூரத்தைக் கடந்து விட்டது போன்ற தோரணையிலேயே சந்திரிகா அரசு இருந்து வருகின்றது.

ஆனால் இப்போர் தவிர்ப்பு ஒப்பந்தமென்பது ஒரு 'நீறுபூத்த நெருப்பாக' இருப்பதனையே வடக்கு-கிழக்குப் பிரச்னையின் தாக்கத்தை உணர்ந்தவர்களால் அறியக் கூடியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமக்கே உரிய கம்பீரத்துடன் நடமாடி வருகின்றனர். மறுபுறத்தே படையினரும் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் ஆயுதபாணிகளாக நடமாடி வருகின்றனர்.

இரு தரப்பினரும் தம்மிடையே மோதல்களை தவிர்த்துள்ளனரே

## சமாதான சகவாழ்வுக்காக ஆணையிட்ட நாட்டுமக்கள்

தவிர, நிறுத்தியிருக்கக் காணப்படவில்லை.

இந்நிலையில் தகுந்த அரசியல் அணுகுமுறைகள் விரைந்து உறுதியாக முன்னெடுக்கப்படாத பட்சத்தில் மீண்டும் மோதல்கள் வெடிப்பது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

ஜனாதிபதி சந்திரிகாவிடம் கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ரீதியிலான நிலைப்பாடு குறித்து பலத்த சந்தேகம் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இச்சந்தேகத்தின் வெளிப்பாடாகவே அவர் அண்மையில் வழங்கிய பிரெஞ்சு லே மொன் (Le Monde) பத்திரிகைப் பேட்டியும் விளங்கியிருந்தது.

அப்பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளை முற்று முழுதாக நிராகரித்து விடவில்லை.

அரசியல் அணுகு முறைகளில் உடன்பாடு காணப்படாத பட்சத்தில் இராணுவம் செயலில் இறங்குவதைத் தவிர்க்க முடியாதிருக்கும் என்று சந்திரிகா தமது பேட்டியில் கூறியிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இக்கருத்து அவரது ஆட்சியதிகாரத்தின் வெளிப்பாடாக இருக்கின்றது. முன்பு மாகாணசபை முதலமைச்சராகவும், பின்னர் பிரதம மந்திரியாகவுமிருந்தபோது சந்திரிகா எக்கட்டத்திலும் இராணுவ நடவடிக்கைகளை நியாயப் படுத்தியோ, அல்லது இராணுவ விஸ்தரிப்பை ஆமோதித்தோ கருத்துக்களை வெளியிட்டிருக்கவில்லை.

பிரதம மந்திரியாக இருந்து ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக போட்டிக்கு நின்ற சமயம், சந்திரிகா பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியொன்றில் ஆயுதப் படையினரைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

படையினர் வரம்பு மீறிச் செயல்படுவதாகவும், அவர்கள் தமக்குள்ளே ஓர் இராச்சியத்தை நடத்துவதாகவும் பிரதமராகவிருந்த போது சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.

ஆயினும் தற்போது சந்திரிகாவின் அந்தஸ்த்து வேறு. இன்று அவர் அரசியல் ரீதியான தலைவர் மட்டுமல்ல; முப்படையினரின் பிரதம தளபதியும் ஆவார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் எந்தவொரு அரசியல் தலைவரும் பெற்றிராத மாபெரும் தேர்தல் வெற்றியை ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பெற்றிருந்தார். இத்தேர்தல் வெற்றியே- அதாவது நாட்டு மக்கள் வழங்கிய ஆணையே- இன்று சந்திரிகாவை முப்படையினருக்கும் ஆணையிடும் வல்லமையைக் கொடுத்திருக்கின்றது.

இருந்தபோதிலும் நாட்டு மக்கள் சந்திரிகா, போரை முன்னெடுக்கவேண்டும். இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளுக்கு முக்கியமளித்து, இனப்பிரச்னைக்குத் தீர்வைக் காணவேண்டுமென்ற ரீதியில் தேர்தல் வெற்றியை அவருக்கு வழங்கியிருக்கவில்லை.

## தாமதித்து வழங்கப்படும் நீதி ஓர் அநீதி

நாட்டுமக்கள் உண்மையிலேயே இராணுவ நடவடிக்கைகளில் நம்பிக்கை வைத்திருப்பார்களேயானால் அவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியினரையே பதவியிலமர்த்தியிருப்பார்கள். ஏனெனில் கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக வடக்கு-கிழக்குப் பிரச்னையை இராணுவ ரீதியாகவே ஐ.தே.கவினர் பெரிதும் அணுகியிருந்தனர்.

எனவே நாட்டு மக்கள் போரை வெறுப்பதுடன், பாரிய இழப்புகளுக்கும், அவலங்களுக்கும் இடமளித்துள்ள வடக்கு-கிழக்குப் பிரச்னை அரசியல் ரீதியாக கௌரவமான முறையில் தீர்க்கப்படவேண்டுமென்ற அடிப்படையிலேயே சந்திரிகாவுக்கு ஒரு பிரமாண்டமான வெற்றியை வழங்கியிருந்தனர்.

இவ்வெற்றியின் தார்ப்பரியத்தை ஜனாதிபதி சந்திரிகா எவ்வளவு தூரம் மதிக்கின்றார் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாக இருக்கின்றது.

நாட்டின் ஆட்சியதிகார விடயங்களை நிர்ணயிக்கும் வல்லமை கொண்டவர் என்ற ரீதியில் ஜனாதிபதி சந்திரிகா அனைத்துத் தரப்பினரையும் அனுசரித்துப் போக வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இந்நிலையில் அவர் ஆயுதப் படையினர் மீது கொண்டுள்ள ஆளுமையை உதறித் தள்ளிவிடமுடியாது.

ஒரு நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு என்பவற்றைப் பேணுவது ஆயுதப் படையினரின் கடமையாகும். இந்நிலையில் அவர்களை கையாளும் பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகாவைப் பெரிதும் சார்ந்திருக்கின்றது.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்த விடயத்தில் அரசியல் ரீதியிலான அணுகுமுறைகள் என்று காலடி எடுத்து வைத்த பின்னர் இராணுவ நடவடிக்கைகள் பற்றிப் பிரஸ்தாபிப்பதென்பது ஒரு குழப்பமான சூழ்நிலையையே தோற்றி விட்டிருக்கின்றது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பமான சமரசப் பேச்சுகள் தொடர்ந்து நீடித்து அர்த்தமுள்ள தீர்வொன்று கிடைக்கவேண்டுமென்பதே நாட்டு மக்களின் விருப்பமாக இருக்கின்றது.

இராணுவ ரீதியான பின்னணியுடன் ஓர் இராணுவ அமைப்பாகவே இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் ஆர்வங்காட்டும்போது அரசாங்கமும் அரசியல் அணுகுமுறைகளுக்கே முதன்மையளிக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு சர்ச்சை தொடர்பான மூலாதார விடயங்கள் அணுகப்படுமுன்னர், இருதரப்பினரும் நேருக்கு நேராக சந்தித்து அவ்விடயங்களை ஆராயு முன்னர் தப்பெண்ணங்களை வளர்த்து, சந்தேகங்களுக்கு இடமளிக்கும் பட்சத்தில் அரசியல் தீர்வென்பது 'கானல் நீராகவே' காணப்படும்.

---

# "தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் என்னையும் சுடலாம்"

1989 நவம்பர் 27ம் திகதி மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள்:

இந்த மாவீரர் நாளைக் கொண்டாடும் போது ஏன்? இதுவரை எங்களுக்கு முன்னரும் எத்தனையோ தலைவர்கள் போராடி இருக்கிறார்கள் தானே என்ற ஒரு நினைவு வரும். எத்தனையோ இயக்கங்களும் போராடி இருக்கின்றன தானே? என்ற ஒரு கேள்வி எழும். ஆனால் எங்களுடைய இனத்தின் கெட்டகாலம், இதுவரையும்



போராடிய மற்றவர்கள் ஒழுங்காகத் தங்களுடைய இலட்சியத்துக்காக இறுதி வரை போராடவில்லை. கூட்டணியில் இருந்த அமிர்தலிங்கம் போன்றோர் இறுதி நேரத்தில் துரோகிகளாக மாறியதால் எமது அமைப்பு அவர்களை அழித்தது உங்களுக்குத் தெரியும். அதே போல் மற்றைய இயக்கங்களும் இன்று ஓர் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எட்டப்பர்களாகி எம் இனத்தை விற்றுக் கொண்டிருப்பதும் உங்களுக்குத் தெரியும்.

பொதுவாக எமது அமைப்புத்தான் இன்று இந்தப் போராட்டத்தில் உறுதியாகத் 'தமிழீழம்' என்னும் ஒரே கொள்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. மற்றைய தலைவர்களும் சரி, இயக்கங்களும் சரி இன்று எமது இனத்தைக் காட்டிக்கொடுக்கும் அமைப்புக்களாகவே மாறிவிட்டார்கள். அந்த நிலையில் வீரமரணம் அடைந்த 1307 போராளிகளுக்குமான இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவது தான் பொருத்தமாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அதுமட்டுமல்ல, பிரபாகரனைப் பொறுத்தவரை பிரபாகரன் என்பவரும் ஒரு தனிமனிதன் அல்ல. அவர் ஓர் இனத்தின் பிரதிநிதி. அமிர்தலிங்கம் துரோகம் செய்தது போல் பிரபாகரனும் தமிழீழத்துக்குத் துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக் கொல்லப்படவேண்டியவரே. எனவே நாங்கள் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடும் போது துரோகிகளை மக்கள் மத்தியில் இருந்து தூக்கி எறியத்தான் வேண்டும்.

நன்றி- புலிகளின் 'உலகத் தமிழர்'


குறிப்பு: 1989வரை பலியான புலிகளது தொகைதான் 1307.

# ஏரியில் மூழ்கிய கள்ளமில்லா குழந்தைகள்

# அமெரிக்காவை அதிரவைத்த இரட்டைக் கொலை

## கிரைம் டயரி

### தருவது ரசிகன்





சுசான்

**கு**ளிரான மாலை நேரம். அமெரிக்காவில் உள்ள தென் கரோலினா மாநிலம். 1994 அக்டோபர் 25. டேவிட் சுமித்-சுசான் தம்பதியினர் தொலைக்காட்சியில் தோன்றி விடுத்த வேண்டுகோள் உருக்கமாக இருந்தது.

சுசான் அழுதுகொண்டேயிருந்தாள். அவளால் பேச முடியவில்லை. சோகம் நெஞ்சையடைத்திருக்கவேண்டும் என்று பார்வையாளர்கள் பேசிக்கொண்டார்கள்.

டேவிட் சுமித்தான் பேசினார். "எங்கள் குழந்தைகளை காணவில்லை. நாங்கள் யாருக்கும் தீங்கு செய்யவில்லை. எங்கள் குழந்தைகளுக்கும் எதுவும் நடந்திருக்காது என்று நம்புகிறோம். எங்கள் குழந்தைகளை கண்டுபிடிக்க உங்கள் உதவியையும் நம்பியிருக்கிறோம்."

பேசி முடித்தபோது அவர் கண்கள் கலங்கியிருந்தன. அருகில் இருந்த அவர் மனைவி சுசான் விக்கி விக்கி அழுதாள்.

'காணாமல் போன குழந்தைகள் இருவர். பெயர் விபரங்களை தொலைக்காட்சி அறிவித்தது.

பெயர்: மைக்கல்-வயது-மூன்று.

பெயர்: அலெக்சாண்டர்- வயது-பதினான்கு மாதம்.

□□

**பொ**லிசார் சுசானை விசாரித்தார்கள். சுசான் அழுதுகொண்டே கேள்விகளுக்கு பதில் சொன்னாள்.

"நான் எனது இரு குழந்தைகளோடும் காரில் சென்றேன். திடீரென்று ஒருவன் காரை மறித்தான்."

"அவனது அங்க அடையாளங்கள் ஏதாவது சொல்ல முடியுமா, திருமதி சுசான்."

"உயரமாக இருந்தான். கறுப்பு நிறம். சுருள் முடி."

சுசான் விபரித்தாள். பொலிசார் தொடர்ந்து கேட்ட கேள்விகளுக்கு சுசான் சொன்ன பதில்களில் இருந்து தெரிய வந்தவை இவை:

காரை மறித்தவன் தானும் காரில் ஏறிக்கொண்டான். காரை செலுத்துமாறு சுசானை மிரட்டினான். குறிப்பிட்ட தூரம் சென்ற பின்னர் காரை விட்டு இறங்குமாறு சுசானை எச்சரித்தான்.

"குழந்தைகளை அவனிடம் விட்டுவிட்டு நீங்கள் காரைவிட்டு எப்படி இறங்க முடிந்தது?"

"'இறங்காவிட்டால் குழந்தைகளை கொன்றுவிடுவேன்' என்று மிரட்டினான் அந்தப் பாவி,"

என்றாள் சுசான்.

சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் பறந்தது.

சுசான் சொன்ன அங்க அடையாளங்களை வைத்து கம்பியூட்டர் மூலம் கடத்தல்காரனின் படத்தை வரைந்தார்கள். சுசானிடம் படத்தைக் காண்பித்தார்கள்.

"ஏறக்குறைய அந்தப் பாவி இப்படித்தான் இருப்பான். அவனை பிடித்துவிடலாம் அல்லவா?"

சுசான் கேட்டாள்.

"பிடித்துவிடலாம். பிடிக்க வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்."

பொலிஸ் ஆறுதல் சொன்னது. கம்பியூட்டர் படம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

□□

**அ**மெரிக்க பத்திரிகைகளில் "குழந்தைகள் கடத்தல்" பரபரப்பான செய்தியாக வந்தது.

"நாங்கள் என்ன விரல் சூப்பிக்கொண்டா இருக்கிறோம். விசாரித்துக்கொண்டுதானே இருக்கிறோம். இந்தப் பத்திரிகைகளுக்கு வேறு வேலையே இல்லை. பொலிஸ் குறட்டை விட்டுக்கொண்டிருக்கிறது என்று நினைப்பு."

விசாரணையாளர்கள் சலிப்போடு பேசிக்கொண்டார்கள்.

"கடைக்குச் சென்ற தாயார் திரும்பி வந்தபோது காருடன் குழந்தைகள் மாயம்"

ஒரு பத்திரிகை இப்படி தலைப்பு போட்டிருந்தது.

விசாரணையாளர்களில் ஒருவர் அந்தப் பத்திரிகையை கையில் எடுத்து செய்தியை படித்தார்.

படிக்க, படிக்க அவர் முகம் இறுகியது.

"உடனடியாக சுசான் வீட்டை சோதனை யிடவேண்டும்."

"சுசான் வீட்டையா? எதற்கு?"

சக விசாரணையாளர்களிடம் தனது சந்தேகத்தை விளக்கினார் செய்தியைப் படித்த விசாரணையாளர்.

□□

சுசான் வீட்டை தலை கீழாகப் புரட்டி அலசியதில் ஒரு கடிதம் கண்ணில் பட்டது.

"அன்பே சுசான்,

உன் காதலை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நாம் மணமுடித்துக்கொள்ளலாம். டேவிட் சுமித்தை நீ விவாகரத்து செய்யப் போவதாக தெரிவித்தாய். நல்லது! ஆனால் ஒரு நிபந்தனை, உங்கள் குழந்தைகளை நான் ஏற்க முடியாது."

பொலிஸ் சுசானை கைது செய்தது. ஒரு குற்றவாளி உண்மை சொல்கிறாரா என்று கண்டறியும் நவீன விசாரணை முறைகள் இப்போது வந்துவிட்டன.

சுசானை நவீன முறையில் விசாரித்தார்கள்.

அதே சமயத்தில் டேவிட் சுமித்தும் விசாரிக்கப்பட்டார்.

"உங்கள் இருவருக்கும் இடையே மனக் கசப்பு இருப்பதாக நினைக்கிறோம்."

"உண்மை. பிரிந்துதான் வாழ்கிறோம்."

"இணைந்து வாழ முடியாது என்று..."

"யெஸ்! முடிவு செய்து விவாகரத்து வழக்கு நடக்கிறது."

டேவிட் சுமித்தை விசாரித்த பின்னர் சுசானை மேலும் துருவியதில் உண்மை கிடைத்தது.

அக்டோபர் 25, 1994. தனது குழந்தைகள் இருவரையும் காரில் ஏற்றினாள் சுசான்.

இருக்கைகளோடு இணைத்து கட்டும் பட்டியால் இரு குழந்தைகளையும் கட்டி விட்டு காரை செலுத்திக்கொண்டிருந்தாள்.

வீதியை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இரு குழந்தைகளும் தமது விதி முடியப்போவது தெரியாமல் தூங்கிப் போனார்கள்.

மூன்று மணி நேர பயணத்தின் பின்னர் ஜோன் டி லோங் ஏரிக்கரையில் வந்து கார் தரித்து நின்றது.

சுசான்தான் காரை செலுத்தி வந்தாள். காரிலிருந்து இறங்கிய சுசான் பிரேக்கை தளர்த்திவிட்டாள்.

கார் மெல்ல மெல்ல ஏரியை நோக்கி உருளத் தொடங்கியது.

அப்படியே... ஏரிக்குள் சென்ற கார்...

நீருக்குள் மூழ்கத் தொடங்கியது. சுசான் கார் மூழ்கும்வரை அந்தக் காட்சியை பார்த்துக்கொண்டிருந்தாள்.



இருக்கைகளோடு பட்டியினால் பிணைக்கப்பட்டிருந்த
இரு குழந்தைகளும்,
நீரில் மூழ்கி
துடித்து தூக்கத்தால் விழித்து
மூச்சுத் திணறி-
செத்துப் போகும் காட்சி
சுசானின் மனக்கண்ணில் தெரியத்தான் செய்தது.



சுசான் கைதுசெய்யப்பட்டபோது

கல்மனம்தான்! ஆனாலும் அழுதாள். திரும்பி வந்து பொலிசில் புகார் செய்தாள். 'குழந்தைகள் கடத்தப்பட்டதாக' புலம்பினாள்.

அனைத்தையும் இப்போது சுசான் பொலிசாரிடம் ஒப்புவித்தாள்.

பெற்றவள், கருவில் சுமந்தவள் தன் குழந்தைகளை ஆழமான ஏரியில் தள்ளுவாள் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

சுசானும் நன்றாக நடித்தாள். பாசமாய் துடித்தாள்.

ஆனால், ஒரு தவறு செய்துவிட்டாள்.

தன்னோடு சேர்த்து கார் கடத்தப்பட்டதாகவும், இடை நடுவே தன்னை இறக்கிவிட்டதாகவும் பொலிசில் புகார் செய்தாள்.

பத்திரிகைக்கு சொன்ன தகவலில் "காரை நிறுத்திவிட்டு கடைக்கு சென்று பொருட்கள் வாங்கி வந்தேன். காரைக் காணவில்லை" என்று கூறினாள்.

அதனால்தான் பொலிஸ் சந்தேகித்தது. சுசானை துருவி உண்மையை கண்டுபிடித்தது.

இப்போது சுசான் தண்டனைக்காக காத்திருக்கிறாள்.

மரண தண்டனை வழங்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

சுசானின் காதலன் பெயர் ஃபின்ட்லே. அவனுக்கும் கொலைக்கும் ஒரு சம்பந்தமுமில்லை, கடிதம் எழுதியது தவிர.

பத்து மாதம் சுமந்தவளே செய்த படு பாதகம் அமெரிக்காவையே அதிர்ச்சியில் உறையவைத்திருக்கிறது. ■

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

## மருத்துவ விந்தைகள்

# புதிய கருத்தடை மருந்து தேவையானபோது நிறுத்தலாம்

**வே**ப்பம் விதையைப் பயன்படுத்தி இந்திய மருத்துவத்துறை விஞ்ஞானபீடம் சமீபத்தில் ஒரு புதிய கருத்தடை மருந்தொன்றைக் கண்டுபிடித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தியாவிலுள்ள சர்வதேச சுகாதார நிறுவனத்தின் உயிர்மம், மற்றும் வம்சக் கூறு (gene). பிரிவின் விஞ்ஞானியான திரு. ஜீ.பி. தல்வார் இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்பொழுது:

வேப்பம் விதைகளில் அடங்கப் பெற்றுள்ள 'பிராணீம்' எனப்படும் இரசாயனத் திரவத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள 'பிராணீம்' எனப்படும் இப்புதிய கருத்தடை ஊசி மருந்தை ஆண்களுக்கு செலுத்துவதன் மூலம் அவர்களின் விந்துக்களில் அடங்கப்பெற்றுக் காணப்படும் கருவணுக்களை அழியச் செய்யலாம்.



அக் குடும்பத்தினர் குழந்தையை விரும்பும் காலத்தில் இம் மருந்துப் பாவனையை நிறுத்திக் கொள்ளும் பட்சத்தில் மீண்டும் கருத்தரிக்க வாய்ப்புள்ளது.

"ஆண்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ள இவ் வூசி மருந்தைப் போன்று 'பிராணீமை' பயன்படுத்தி பெண்களுக்கான கருத்தடை மருந்தொன்றை கண்டுபிடிக்கும் முயற்சியிலும் தாங்கள் வெற்றி கண்டுள்ளதாகவும் இவற்றின் செயற்பாடும் முன்பு கூறப்பட்டது போல ஆண்களின் விந்துக்களில் அடங்கப்பெற்றுள்ள கருவணுக்களை அழியச் செய்வதோடு பாலியல் தொடர்பான நோய்களை ஏற்படுத்தும் தொற்றுக் கிருமிகளையும் அழியச் செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இவற்றினூடாக எதிர் காலத்தில் எய்ட்ஸ் நோய்க் கிருமிகளுக்கெதிரான மருந்துகளை கண்டு பிடிப்பதற்கும் தங்களின் இம் முயற்சி சாத்தியமான அடித்தளமாக அமையக் கூடுமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

---

# தலைமுடி நரைப்பது ஏன்?

## தவிர்த்துக்கொள்ள சில யோசனைகள்

**வ**யதானவர்களுக்கு தலைமயிர் நரைத்துக் காணப்படுவது இயற்கையான நிகழ்வுதான். என்றாலும் நடுத்தர வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தலை நரை ஏற்படுவதற்கு ஏதோ ஒரு வகையிலான விசேட காரணம் இருக்க வேண்டுமல்லவா?

எனவே தலை நரை குறித்து ஆயுர்வேத வைத்தியர்கள் என்ன கூறுகிறார்கள் என்று கேட்டுப் பார்ப்போம்.

இவ் வைத்தியர்களின் கூற்றுப்படி நடுத்தர வயதையடையும் முன்பே தலை மயிர் நரைப்பு ஏற்படுவதற்கு அவரவர்களின் வம்சக் கூறுகள் காரணமாகவும் ஏற்படக்கூடும். இவை தவிர்ந்து கீழ்க் காணும் பராமரிப்புக் குறைபாட்டினாலும் இவ்வாறு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

**பராமரிப்பு-குறைபாடுகளில் சில:**

1. பொருத்தமற்ற நேரங்களில் தலை குளித்தல்-குறிப்பாக இரவு நேரங்களில் குளித்த பின்பு, மயிர் உலராத நிலையில் படுக்கைக்கு செல்லுதல். தலை ஈரலிப்புடன் இருக்கப் பெறுமானாலும் மயிர் நரைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.
2. தலை குளித்த பின்பு ஈரலிப்புடன் குளிரூட்டப்பட்ட அறையில் அல்லது சூழலில் தரித்திருத்தல்
3. குளித்த பின்பு ஈரலிப்புடன் மயிரை அள்ளி முடிதல்
4. ஈரலிப்பை உணர்த்துவதற்கு செயற்கையான இயந்திர சாதனங்களை பயன்படுத்துதல்.
5. கடும் வெய்யிலில் பாதுகாப்பின்றி தலையை காய விடுதலும், அத்தருணங்களில் தலை குளித்தலும்.
6. அடிக்கடி காரமான ஷம்போ போன்ற இரசாயனத் திரவங்களை தலைக்கு பயன்படுத்துதல்.
7. தலைக்கு எண்ணை பாவிக்காதிருத்தல்.
8. சொடுகு தலைச் சருமத் தாக்கங்களினால் மயிருக்கு தேவையான போசணைகள் கிடைக்கப் பெறாதிருத்தல்.
9. போசணையற்ற ஆகாரக் குறைபாடுகள்- போன்றவற்றினாலும் தலை மயிரில் நரைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

இவற்றை தவிர்த்துக்கொள்வதற்கு கீழ்காணும் நடைமுறைகளை கடைப்பிடிக்கலாம்.

- தலைக்கும் உடலுக்கும் நல்லெண்ணை தேய்த்து காலையில் குளித்து வருதல்.
- தலையையும் மயிரையும் சுத்தம் செய்வதற்கு நெல்லிக்காயை அரைத்து அல்லது நெல்லி இலையை அவித்து தலைக்கு பூசி தலையை கழுவிக்கொள்ளுதல்.
- தலைக்கு தேவையான போசணையை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சோயா, கடலை, பயறு, பருப்பு போன்ற தானியப் பொருள்களை அதிகமாக உட்கொள்ளுதல்.
- வல்லாரை, அகத்தி, பொன்னாங்கன்னி போன்ற கீரை வகைகளில் ஒன்றை நாளாந்த உணவில் தவறாமல் சேர்த்துக்கொள்ளுதல்.
- பழங்களைப் பொறுத்தவரை நெல்லி, பழுத்த வெரலு போன்ற பழங்கள் தலைமயிரின் போசணைக்கு விசேடமானவைகளாகும்.
- சூட்டுடன் ஆகாரங்கள் உட்கொள்வதைத் தவிர்ப்பதோடு அதிக சூடான நீரில் தலை குளிப்பதையும் தவிர்த்துக்கொள்ளுதல்.
- மயிர் ஆரோக்கியத்திற்காக ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்ட எண்ணைகளை வைத்தியரின் ஆலோசனையுடன் தொடர்ந்து பாவித்து வருதல்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி






முதலாவது படத்தில் ஜேனும் ஜீனும் முதலாவது பிறந்த நாளன்று. இரண்டாவது படம் ஏழாவது வயதில். ஏனைய படங்கள்..... 12 வயதிலும், 21 வயதிலும் திரைப்படத்தில் நடனமாடும்போது....



## அபூர்வமான இரட்டையர்கள் கணவர்பாடு திண்டாட்டம்

ஜேன் நுக்கியோ மற்றும் ஜீன் பிளாஞ்சாட் ஆகிய இருவரும் இரட்டையர்கள். ஆனால்வேறு பல இரட்டையர்கள்போல் அல்லாமல் ஏறத்தாள 100 சதவீதமாக ஒற்றுமை உடையவர்களாக இருக்கிறார்கள்.

கண்ணாடிக்கு முன் நின்று பார்த்தால் எவ்வாறு நிஜத்துக்கும் பிம்பத்துக்கும் ஒற்றுமை தென்படாதோ அதே போன்று இவ்விருவருக்கும் நடை, உடை, பாவனை, எண்ணம் எதிலுமே எவ்வித வித்தியாசமும் தென்படுவதில்லை. ஒருவருக்கு ஏதாவது நோய் கண்டால், உடனே அதே நோய் அடுத்தவருக்கும் வந்துவிடும்.

இந்த இரட்டையருக்கு இப்பொழுது 73 வயதாகிறது. இவர்களுக்கு 24 வயதாக இருக்கும்போது ஒரே நாளில் திருமணம் நடைபெற்றது. ஆனால் 34வது வயதில் இருவருமே விவாகரத்துச் செய்து கொண்டார்கள். இருப்பினும் 45 வயதாகும்போது இருவரும் முன்புபோல ஒரே நாளில் மறுமணம் செய்து கொண்டனர்.

மறுமணமாகி 30 வருடங்களாகின்றன. இருந்தபோதிலும் இவர்களுடைய கணவன்மார் தங்கள் தங்கள் மனைவியரை அடைளாம் காண்பதில் இன்றும் சிரமப்பட வேண்டியுள்ளதாம். நல்ல காலம் இவர்கள் கணவர்கள் இரட்டையர்களல்லர். எப்படியோ அவர்களுக்கிடையிலும் குண நலன்கள் எப்போதும் ஒத்துப் போவதாகவும் இரசனைகளிலும் பேதம் இல்லை என்றும் தெரிகிறது.

ஜேன், நுக்கியோ என்பவரையும் ஜீன், பிளாஞ்சர்ட் என்பவரையும் மணம் முடித்து ஒரே தெருவில் இரு வீடுகள் தள்ளி வசிக்கின்றனர். கணவன்மார் வெவ்வேறு பெற்றாருக்கு வெவ்வேறு இடங்களில் பிறந்தபோதிலும் இருவரும் ஒரே நாளில்தான் பிறந்துள்ளனர். ஆனால் பிறந்த தேசம் பற்றித்தான் சரியான தகவல் கிட்டவில்லை. இருவருடைய விரல் அடையாளங்களில் ஒரு விசித்திரம். ஜேனின் இடது பெருவிரல் ரேகைகளும் ஜீனின் வலது பெருவிரல் ரேகைகளும் ஒரே மாதிரிக் காணப்படுகின்றன. இது ஓர் அதிசய ஒற்றுமை என்று பல விற்பந்நர்கள் கூறுகின்றனர்.

இருவரும் 10 ஹொலிவூட் திரைப் படங்களில் நடித்துள்ளனர். கலிபோர்னியாவில் வடஹொலிவூடில் வசிக்கும் இருவரும் "சகல விதப் பொருத்தமுள்ள இரட்டையர்" தெரிவு நடைபெற்றபோது முதலாவது இடத்தைப் பெற்றனர். இப்போட்டியில் அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் 900 இரட்டையர்கள் கலந்து கொண்டனர்.



### குட் ஷொட் என் கண்ணே ஏன் கண்ணே?

ஜெர்மன் கனோவர் என்னுமிடத்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் "கிளிக்" செய்யப் பட்ட படம் இது. இரண்டுமே சிம்பன்சி ரக குரங்குகள். தாயின் கால் நகத்தைக் குட்டி செல்லமாகக் கடித்துப் பார்க்கிறது. துடுக்குத்தனத்தால் வேடிக்கை பாதி வேதனை மீதி என்ற கட்டத்தில் தோன்றிய சிம்பன்சி தாயின் முகபாவம். பொருத்தமான நேரத்தில் கச்சிதமான "கிளிக்". கமராக்காரரே கையைக் கொடுங்கள்.



### மிகப் பெரிய மியாவ்

மியாவ் மியாவ் பூனைக்குட்டி மீசைக் காரப் பூனைக் குட்டி என்று குழந்தைகள் குதூகலிப்பதுண்டு. ஆனால் அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள பூனைக்குட்டியைக் கண்டால் குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்களும் பயந்துதான் போவார்கள்.

அது ஒரு இராட்சத பூனை. உலகில் மிகப் பெரிய பூனை அதுதான். உயரம் 44 அங்குலம். எடை 63 இறாத்தல் 11 அவுன்ச. ஆறு வயதாகும் இந்தப் பூனை உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்து விட்டது.

இந்தப் பூனையின் உரிமையாளருக்கு ஒரே ஒரு வருத்தம். பன்றி போலச் சாப்பிட்டுத் தள்ளுகிறதாம். சாப்பாடு போட்டு கட்டுபடியாக வில்லையாம்.

## கண்மணியே கண்ணுறங்கு



படத்தில் இருப்பது சிம்பன்சி ரகக் குரங்கு. அதன் கரத்தில் இருப்பது ஐந்து வாரக் குட்டியான நாய்.

இலண்டன் லீமின்ரன் என்னும் இடத்தில் இருக்கும் பண்ணையில் வாழ்கிறது இந்தப் பரிவான சிம்பன்சி. போகிற போக்கில் மனிதர்களைவிடக் குரங்குகள் உசத்தியாகி விடுகின்றன.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

வாரிசின்

## வசூல் படம்

நடிகராக இருந்து ஆந்திர முதல்வரானவர் என்.டி.ராமராவ். அவரது மகன் பாலகிருஷ்ணா தெலுங்கில் முன்னணி ஹீரோவாக இருக்கிறார் பாலகிருஷ்ணா. அவர் நடித்த மொழி மாற்றுப் படங்கள் பல தமிழில் வந்துள்ளன. விரைவில் வரவுள்ள படம் 'சின்னப் பண்ணை' தெலுங்கில் வெற்றிக்கொடி நாட்டியுள்ள படத்தை 'சின்னப் பண்ணை' என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். மார்ச் மாதம் திரைக்கு வருகிறது. பாலகிருஷ்ணாவின் ஜோடியாக மீனா நடித்துள்ளார்.

## தாமதித்தால் நஷ்டம்!

பிரசாந்த்-திவ்யபாரதி நடித்த படம் 'இள நெஞ்சே வா'. திவ்யபாரதி தற்கொலையான சூட்டோடு படம் வந்திருந்தால் ஓடியிருக்கும். நீண்டகால தயாரிப்பில் இருந்து தற்போது தமிழ்நாட்டில் திரையிடப்பட்டுள்ளது. திவ்யபாரதியை ரசிகர்கள் மறந்துவிட்ட நேரத்தில் 'திவ்யபாரதி நடித்த கடைசிப்படம்' என்ற விளம்பரத்தோடு படத்தை திரையிட்டுள்ளார்கள். சென்னை நகரில் ஒரு திரையரங்கில் மட்டுமே மூன்று காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. பிரசாந்துக்கு இது மற்றொரு தோல்விப் படம்.

## ஏழுமணிக்கு மேலே......

'பாட்ஷா' படத்தின் பாடலில் ஒரு வரி, 'ஏழு மணிக்கு மேலே நீயும் இன்ப லட்சுமி' என்று வருகிறது. ஏற்கனவே 'விடியும் வரை பெண்ணழகு' என்று எழுதி வாங்கிக் கட்டியவர் வைரமுத்து. எதுகை மோனை வரைமுறைக்கு ஏதாவது எழுதிவிட்டு பின்னர் அதற்கு வக்காலத்து வாங்குவதிலும் வைரமுத்து கெட்டிக்காரர். அது என்னவோ தெரியவில்லை வைரமுத்துவுக்கு இரவுக்கு மட்டுமே பெண்கள் இன்ப அழகாகத் தெரிகிறார்கள்.



ராதிகா
படம்-சந்திரசேகரா

## வினிதா சில குறிப்புகள்

**ஆசை-** எப்படியும் நடித்து பணம் பாதி புகழ் மீதி சம்பாதிப்பது.

**ஆசையுடன் வளர்ப்பது-** தலைமுடி. (நாமெல்லாம் ஒன்றுகூட கிடையாது)

**கவர்ந்த வாசகம்-** நாய் வேசம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும்.

**உலகில் அழகான பெண்-** நிலைக்கண்ணாடியில் மேக்அப்போடு தெரியும் இன்னொரு வினிதா.

**பிடித்திருப்பது-** சிக்கென்ற உடை. நடிக்க வந்திருக்காவிட்டால்- நிச்சயமாக தமிழக முதல்வராகியிருப்பேன் என்று சொல்ல முடியுமா என்ன?

**பிடித்த ஹீரோ-** தியாகராஜ பாகவதர் கபாலம்- கல... கல...கல...

## குஷ்பூவுக்கு ராசி

ஒரு காலத்தில் கவர்ச்சிக் குண்டாக நடித்து ரசிகர்களை கண்டிவிழுந்தவர் குஷ்பூ. அவருக்கு கோயிலே கட்டினார்கள். இப்போது குடும்பப் பாங்கான பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டார். இந்த ஆண்டு குஷ்பூவுக்கு ராசியான ஆண்டு. மீண்டும் பிரபுவுடன் ஜோடி சேர்ந்திருக்கிறார். பல புதிய படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார். குஷ்பூ அலை ஓய்ந்திருக்கலாம். ஆனால் குஷ்பூ முற்றாக ஓரம் கட்டப்படவில்லை.



குமரிமுத்து
படம்-தமிழச்சி

## கிளி கொடுத்த முத்தம்

'எல்லாமே என் ராசாதான்' பெப்ரவரி வெளியீடாக வருகிறது. படத்தில் ரூபஸ்ரீக்கும் கணேஷ் என்ற கிளிக்கும் நட்பு. அந்தக் கிளிக்கு செமத்தியான குறும்பு. அதுபற்றி ரூபஸ்ரீ சொல்கிறார்: காமிரா முன்நின்று நடிக்கும்போது கிளி சில்மிஷம் செய்ய ஆரம்பித்துவிடும். திடீரென என் உதட்டோடு அதன் உதட்டை (மூக்கை) இணைத்து முத்தம் கொடுக்கும். அடிக்கடி எதையாவது பேசிக்கொண்டிருக்கும். "சாப்பிட்டியா?" என்று கேட்டால் "சாப்பிட்டேன்" என்று சொல்லும்" என்கிறார் ரூபஸ்ரீ.

## 20 வயதில் அம்மா வேசம்!

'கேடி கண்மணி' படத்தில் நடித்த 'அஞ்சு' இப்போது 'நிலைவரசி' என்னும் படத்தில் நடிக்கிறார். உடலை கவர்ச்சியாக்க எத்தனையோ முயற்சிகள் செய்தும் பயனில்லை. அதனால் 20 வயது அஞ்சுவை அம்மா வேசத்தில் நடிக்கவைத்துவிட்டார்கள்.



குஷ்பூ
படம்-முத்துக்குளிக்க வாரீகளா



எஸ்.பி.பாலசுப்பிரமணியம்
ஜனகராஜ்
படம்-பாட்டுபாடவா

## ------மினி-சினி------

- கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் 'பெரிய குடும்பம்' படத்தில் பிரபு, வினிதா, ரஞ்சிதா தவிர மொத்தம் 24 நட்சத்திரங்கள் நடித்து வருகின்றார்கள்.
- பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் 'மிஸ்டர் ரோமியோ' படத்தில் மூன்று கதாநாயகிகள் நடிக்கிறார்கள். ஒருவர் 'கருத்தம்மா' ராஜஸ்ரீ மற்றவர் இந்தி நடிகை ஷில்பா ஷெட்டி. மதுபாலாவும் இருக்கிறார்.
- 'முரட்டுக்காளை', 'சகலகலா வல்லவன்', 'குருசிஷ்யன்' போன்ற படங்களை இணைந்து வழங்கிய எஸ்.பி. முத்துராமன்-பஞ்சு அருணாசலம் மறுபடியும் 'தொட்டில் குழந்தை' என்ற படம் மூலம் இணைகிறார்கள். இதில் ராம்கி கதாநாயகனாக நடிக்கிறார்.
- மலையாளத்தில் 'பெட்டைக்கோழி கூவின நூற்றாண்டு' என்ற படத்தைத் தயாரித்த ஊர்வசி இதைத் தொடர்ந்து ஒரு மலையாளப் படத்தையும் ஒரு தமிழ்ப்படத்தையும் தயாரிக்கவிருக்கிறார்.
- பார்த்திபனின் 'சரிகமபதநி' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்த சங்கீதா, தற்போது பார்த்திபன் இயக்கி, நடிக்கும் 'புள்ளகுட்டிக்காரன்' படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.
- 'நம்மவர்' படத்தைத் தொடர்ந்து சந்தமாமா விஜயா கம்பைன்ஸ் நிறுவனம் தெலுங்குப் படமொன்றைத் தயாரிக்கிறது. ராஜேந்திரப் பிரசாத்-ரோஜா நடிக்கும் இப்படத்தைப் பிரபல தெலுங்கு இயக்குநர் ஜந்தியாலா இயக்குகிறார்.
- குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, கதாநாயகியாக நடித்து வந்த வினோதினி, இப்போது நகைச்சுவை வேடங்களிலும் நடிக்கத் தொடங்கியுள்ளார். 'முத்துக்குளிக்க வாரீகளா' படத்தில் விவேக் ஜோடியாக இவர் நகைச்சுவை வேடத்தில் நடித்து வருகிறார்.
- மாதுரி டிக்ஷித், மீனாட்சி சேஷாத்திரி போன்று இந்திக்குப் போன ஹீரா தன் பெயருடன் தந்தையின் பெயரையும் சேர்த்து ஹீரா ராஜகோபால் என்று மாற்றியுள்ளார்.
- பல வெற்றிப் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த பி.சி. ஸ்ரீராம், ஐஸ்வர்யா கதாநாயகியாக நடித்த 'மீரா' என்ற படத்தையும் இயக்கியுள்ளார். தற்போது இவர் தொலைக்காட்சித் தொடரொன்றை இயக்கவுள்ளார்.
- கடந்த ஒரு வருட காலமாக தமிழில் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருக்கும் பானுப்பிரியா விரைவில் தமிழ்ப்படமொன்றில் கதநாயகியாக நடிக்கவுள்ளார்.



மதுபாலா
படம்-மிஸ்டர் ரோமியோ



## ஆங்கில சஞ்சிகைக்கு குஷ்பூ பேட்டி

## "பிரபுவும்- நானும் ஒன்றாக வாழ்கிறோம்"

'பெமினா' என்ற சஞ்சிகைக்கு குஷ்பூ அளித்துள்ள பேட்டி பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. சர்ச்சைக்குரிய அந்தப் பேட்டியின் சில பகுதிகள்:

"முதலில் குழந்தை நட்சத்திரமாக நடித்தேன். என்னுடைய இரண்டாவது சுற்று எனக்கு மோசமான காலம். நிறைய தவறான படங்களில் நடித்தேன். பணப் பேயான என் அப்பா கண்ட கண்ட படங்களில் எல்லாம் நடிக்கவைத்தார். தப்பான பாதையில் என்னைத் தள்ளுகிறார் என்று தெரிந்தும் எதிர்க்க முடியவில்லை.

87 இல் அப்பா எங்களை கஷ்டத்தில் தவிக்கவிட்டு சென்றுவிட்டார். நானும் அம்மாவும் பட்டினி கிடந்தோம். மருந்து வாங்கக்கூட பணமில்லை. அந்த நேரத்தில் மருந்து வாங்கித் தந்து எங்களை காப்பாற்றியவர் வீடியோகலந்தர் வீராசாமி. காரும் வாங்கித்தந்து மூன்று வேளை சாப்பாடும் கிடைக்க வழி செய்து தந்தார்.

'சின்னத்தம்பி' படத்தின்பின் எனக்கு மதிப்பு கூடியது. பலர் என்பின்னால் சுற்ற ஆரம்பித்தார்கள். என் பின்னால் சுற்றுபவர்கள் ஆபத்தானவர்கள் என்று கண்டுகொண்டேன்.

ஆனால் பிரபு மட்டும் விதிவிலக்கு. அவர் வெளிப்படையானவர். என்னிடம் ஒரு.... ஒரேயொரு பொய்கூட சொல்லமாட்டார். அவர் திருமணமானவர் என்பதால் எனக்குப் பயமில்லை. எங்கள் இருவருக்கும் இப்போது நல்ல புரிந்துணர்வு. இப்போது நான் பிரபுவின் அரவணைப்பில் இருக்கிறேன்.

போன வருசம் பிரபு தன் காதலை என்னிடம் சொன்னார். அவர் திருமணமானவர் என்று தெரிந்தும் நான் ஏற்றுக்கொண்டேன்.

இருவரும் சேர்ந்து சமீபத்தில் ஒரு வீடு வாங்கியுள்ளோம். சந்தோசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம்."

இவ்வாறு 'பெமினா' ஆங்கில சஞ்சிகைக்கு குஷ்பூ பேட்டியளித்துள்ளார். கோடம்பாக்கம் வட்டாரமே அதிர்ச்சியாகிவிட்டது.

# சினி முரசு 89 விசிட்



## ஆரவாரமில்லாமல் அள்ளும் படம்

பொங்கல் வெளியீடாக தமிழ்நாட்டில் திரைக்கு வந்த படங்களில் 'நான் பெத்த மகனே' ஆரவாரமில்லாமல் வசூலை அள்ளிக்கொண்டிருக்கிறது.

வி.சேகர் கதை-திரைக்கதை வசனம் எழுதி இயக்கியுள்ள மிகக் குறைந்த செலவில் உருவான படம். அது நிழல்கள் ரவி, ராதிகா, ஊர்வசி, மனோரமா, கவுண்டமணி, வடிவேல், செந்தில் ஆகியோரின் துணையோடு பெண்களைக் கவரும் படமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

## சளைக்காமல் கொடுத்தார்

பம்பாய் நடிகைகளை தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் விரும்பி அழைப்பதில் காரணம் இல்லாமல் இல்லை.

ஒரு சின்ன உதாரணம்: 'சின்னவங்க' என்றொரு படம். அதில் பம்பாய் வரவு ரீத்திகா நடிக்கிறார். கதாநாயகன் அபிஷேக். அவருக்கு முத்தம் கொடுப்பது போன்று ஒரு காட்சி. அபிஷேக்கின் உதட்டை கவ்வி வலிக்கச் செய்துவிட்டாராம் ரீத்திகா. காட்சி சரியாக வரவில்லை என்று ஐந்து ஆறு முறை மீண்டும் மீண்டும் திருப்ப எடுத்திருக்கிறார்கள். ரீத்திகா சளைக்கவேயில்லை. அபிஷேக்தான் களைத்துப்போனாராம்.

## உதட்டு இரகசியம்

நடிகை ரஞ்சிதா தன் உதடுகளைப் பற்றி பெருமைப்பட்டுக்கொள்கிறார். "இயல்பாகவே என் உதடுகள் சிவப்பு. படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் தேங்காய் எண்ணெய் உதடுகளில் தடவிக் கொள்வேன். இதனால் பளபளப்பு குறையாமல் இருக்கிறது" என்று சொல்கிறார் ரஞ்சிதா.



## இரகசிய வேசம்

'வில்லாதி வில்லன்' படத்தில் சத்யராஜ் மூன்று வேடங்களில் நடிப்பது தெரிந்த செய்தி. மூன்று வேடங்களில் ஒன்றை வெளியில் சொல்ல மறுக்கிறார் சத்யராஜ். அந்த வேடத்திற்கு ஜோடியாக நடிக்கவைக்க பம்பாய் நடிகைகளை வரவழைத்து தேர்வு நடக்கிறதாம்.

# எப்போதும் ஹீரோ

...காதல் காட்சிகளில் அட்டகாசப்படுத்தி... எம்.ஜி.ஆர் என்பது தெரிந்ததுதானே. இப்போது எம்.ஜி.ஆரை பின்பற்றி... நினைத்துக்கொண்டு சில ...க்கள் காதல் காட்சிகளில் நடிப்ப... ஆனாலும் எம்.ஜி.ஆர் நடிக்கும் ...களில் நெருக்கம் இருக்கும். ஆபாசம் ...து. ஆனால் இப்போது...? ...ம்.ஜி.ஆரின் பாணியை மட்டுமல்ல ...ஜி.ஆர் நடித்த படப் பெயர்களையே ...ம் புதிய படங்களுக்கு சூட்டத் ...விட்டார்கள். ...'...லாவதி' ஓடிக்கொண்டிருக்கிறது. ...' என்னும் பெயரில் ஒரு படம் ...ராஜசேகர், மதுபாலா ஜோடி நடித்து ...வரப்போகிறது. ...றைய ஹீரோக்களும் ஹீரோ ...ஆர் தானோ?

## லாபத்தில் வீடு

'பாட்ஷா' படத்தில் நடித்த நக்மா இப்போது 'வில்லாதி வில்லன்' படத்தில் நடித்து வருகிறார். 'பாட்ஷா' பட மதிப்பத்தை வைத்து சென்னையில் ஒரு வீடு சொந்தமாக வாங்கிவிட்டார் நக்மா.

## சரத் வருத்தம்

'நாட்டாமை' படத்தின் பெரு வெற்றியில் மகிழ்ந்த சரத்குமாருக்கு ஒரு வருத்தம்.

தற்போது திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கும் 'வேலுச்சாமி' படம் பற்றிய விமர்சனங்கள் நன்றாக இல்லை. சரத்குமார் வீணடிக்கப்பட்டிருக்கிறார் என்பது பரவலான கருத்து. படம் எதிர்பார்த்தளவு வசூலையும் அறுவடை செய்யவில்லை.

## அர்ச்சனாவுக்கு டும்..........டும்

நடிகை அர்ச்சனாவுக்கு விரைவில் திருமணம் நடக்கப் போவதாகச் செய்தி. திருமணத்தின் பின்னரும் நடிப்பாராம். ராதிகா திருமணத்தின் பின்பு ராசியான நடிகையானது மாதிரி அர்ச்சனாவும் மாறலாம். திருமண ராசி எப்படியோ?



## சிறையில் சிக்கிய மீனா

அர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் 'செங்கோட்டை' படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. அர்ஜுன் ஜோடிகளாக மீனா, ரம்பா ஆகியோர் நடிக்கின்றனர்.

குற்றமே செய்யவில்லை மீனா. அவரைப் பிடித்து சிறையில் போட்டுவிடுகிறார்கள். கைதியாக நடிக்கிறார் மீனா.

இப்பொழுதெல்லாம் தமிழ் படங்களில் சண்டைக்காட்சிகளில் ஹெலிகொப்டர்கள் தாராளமாக பறந்து திரிகின்றன. 'செங்கோட்டை' படத்திலும் 2 ஹெலிகொப்டர்கள் 300 குதிரைகள், 50 ஒட்டகங்கள் பங்குகொள்ளும் சண்டைக்காட்சிகள் படமாக்கப்படுகின்றன.

மே மாதம் திரையிடத் திட்டமிட்டுள்ளனர்.

## வள்ளி வரப்போறா

பாண்டியராஜன், மோகனா, திரோசா ஆகியோர் நடித்துள்ள படம் 'வள்ளி வரப்போறா' படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன. விரைவில் திரைக்கு வரப்போகும் படம் இது. சின்னப் பாண்டியாக பாண்டியராஜன் நடித்திருக்கிறார். பண்ணையார் மகளாக மோகனா நடித்துள்ளார்.

## தயாராகிறார் 'மிஸ்டர் ரோமியோ'

பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கும் பிரமாண்டமான புதிய படம் 'மிஸ்டர் ரோமியோ'. பிரபு தேவா படம் என்றாலே ஆடல், பாடல், அசத்தலான கவர்ச்சி என்று பல சமாச்சாரங்கள் இருக்கும். 'மிஸ்டர் ரோமியோ' படத்திலும் அவற்றுக்குப் பஞ்சமில்லை. பிரபு தேவாவுக்கு இரு ஜோடிகள். ஒருவர் மதுபாலா, இன்னொருவர் ஷில்பா ஷெட்டி. இந்தி திரையுலகில் கவர்ச்சி நடிகை ஷில்பா ஷெட்டி உள்ளபோது கவர்ச்சிக்கோ பஞ்சம்? ஷில்பா ஷெட்டியின் வருகை தமிழ் பட ஹீரோயின்களை கலக்கப்போவது உறுதி. 'மிஸ்டர் ரோமியோ' படத்தின் படப்பிடிப்புக்கள் ஹொங்கொங், நேபாளம், மொரிஷியஸ் போன்ற நாடுகளிலும் நடைபெறவுள்ளன.


## ...மனிதன் ஆரம்பம்

...வினிதா ஜோடி நடிக்கும் '...மனிதன்' படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. முக்கிய வேடத்தில் ...ராஜ் நடிக்கிறார். கவுண்டமணி, செந்தில் ... ஆகியோரும் நடிக்கின்றனர்.

## 'பம்பாய்' தாமதம் ஏன்?

'பம்பாய்' படத்தை எப்படியாவது பொங்கலுக்கு கொண்டுவர 'மணிரத்னம் பாடுபட்டார். ஆனால் தணிக்கைக்குழுவில் படம் மாட்டிக்கொண்டதால் நினைத்தபடி திரையிட முடியவில்லை.

தணிக்கைக் குழுவிடமிருந்து அதிக கத்தரிப்புக்கள் இல்லாமல் படத்தை மீட்டெடுத்து வெளியிடுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார் மணிரத்னம்.



வடிவேலு-அனுஜா



மீனா-கார்த்திக் படம்-மரு மகன்

## ரசிகர் பலமிருக்க பயம் ஏன்?

கதையில் விசயம் இருக்கிறதோ இல்லையோ சென்னை நகரில் மட்டும் நான்கு திரையரங்குகளில் தினசரி நான்கு காட்சிகள், ஒரு திரையரங்கில் மூன்று காட்சிகள் என்று கலகலப்பாக ஓடிக் கொண்டிருக்கிறது 'பாட்ஷா'. சென்னையில் காங்கிரஸ் கட்சிக் கூட்டமொன்றுக்கு 'பாட்ஷா' பட ரிக்கற் தருவதாக கூறி கூட்டம் சேர்த்திருக்கிறார்கள்.

லேடீஸ் ஸ்பெசல்

# தலைமுடிக்குப் பின்னால் என்ன இருக்கு?

## அலைபாயும் கூந்தல் மேலும் அழகாக சில ஆலோசனைகள்!



தலைமுடி-அழகாக, பளபளப்பாக அழகிய சுருள்களுடன் கூடியதாகவும் ஆரோக்கியமானதாகவும் பார்வைக்குத் தென்படும். ஆனால் உண்மையில் இம்முடிகளுக்கு உயிரில்லை. நகங்களைப் போன்று சிகையும் வளர்ச்சியடைகின்றது. எனினும் இதற்கு ஜீவன் இல்லை. முடியின் அடியில்- மண்டை ஓட்டில், ஒவ்வொரு மயிர்க்காலிலும் அமைந்திருக்கும் முடியின் வேர்தான் உயிருள்ளது. இரத்த நாளங்களால் ஊட்டம் பெற்று மயிரை வளர வைப்பது இந்த முடியின் வேர்தான்.

மயிர்க்கால் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்வரைதான் உயிருடன் வாழும். அதன் பின்னர் அது இறந்துவிடும். மயிர்க்கால் அல்லது வேர் இறந்ததும் அத்துடன் இணைந்திருக்கும் முடி உதிர்ந்துபோய்விடும். புதிய மயிர்க்கால் தோன்றும்-புதிய மயிரும் வளரும். மயிர்க்கால்களும் பல்வேறுபட்ட கால அவகாசத்தில்தான் வளரும் தன்மையுடையன என்பதால் மயிர் உதிர்தல்போல் மயிர் வளர்தலும் அவ்வப்போது நடைபெறுகின்றன.

### பொடுகு அல்லது சொடுகு

மண்டை ஓட்டின் மீதுள்ள தோலின் சிதைவே சொடுகு அல்லது பொடுகு எனப் படுகின்றது. தலையிலுள்ள தோல் உரிதல் அல்லது சிறு சிறு துகள்களாக உதிர்தல் ஒரு சாதாரண நடைமுறையாகும். தலையின் தோலில் படிந்துள்ள உயிர்மங்களின் சிதைவு அதிகரிக்கும் பட்சத்திலேயே பொடுகு தலைமுடிகளில் அதிகமாகக் காணப்படும். தலைமுடிகளுக்கு ஊட்டம் வழங்கும் சுரபிகள் அதிக அளவு கொழுப்புச் சத்தினை அளிப்பதுபோன்ற தன்மைகள் இருந்தாலும் பொடுகு அதிகரிக்கலாம். பொடுகு ஒரு தொற்று நோய் என்று தவறுதலாகக் கணிக்கப்படுகிறது. இது தொற்றக் கூடிய தொன்றல்ல என்பது நிச்சயம்.

பொடுகுத் தொல்லை அதிகரித்தால் நாகச் சத்து 'ஸிங் பைரித்தியோன்'-சேர்ந்த இதற்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்ட ஷம்பு பாவிக்கலாம். பொடுகு அதிகரித்தால் மண்டை ஓட்டுக்கு சற்று ஓய்வு தேவைப்படுகிறது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் தங்கள் தலையை கடுமையாக அழுத்திச் சீவுவதாகாது. அதிக இடைவெளியுள்ள பற்களைக் கொண்ட சீப்பைப் பயன்படுத்த வேண்டும். தலையைச் சொறிவதும் தவிர்க்கப்படவேண்டும். ஷம்பு போடும்போதும் மண்டை ஓட்டினை அதிகமாக அழுத்துவதும் நல்லதல்ல.

### ஷம்பு உபயோகித்தல்

தலை மயிரை மூன்று வகையாகப் பிரிக்கலாம். சாதாரணம், எண்ணைத் தன்மையுடையது மற்றும் வரண்ட மயிர் என்பன. ஷம்புவிலுள்ள சவர்க்காரத் தன்மை முடியிலுள்ள பசைப்பிடிப்பு மற்றும் அழுக்குகளை அகற்றிவிடும். சுற்றுச் சூழல், முடியின் தன்மை மற்றும் ஒருவரின் தேவையினைப் பொறுத்தே ஷம்பு எவ்வளவு காலத்துக்கொருதரம் பாவிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கலாம். 'கண்டிஷனர்' என்ற தலைமுடி சீரமைக்கும் சாதனத்தையும் அடிக்கடி பயன்படுத்துவது நல்லதல்ல.

### தலைமுடி மற்றும் மண்டைப்பாதுகாப்பு

தலை முடியின் சிக்கினை நீக்குவதற்கு பற்களுக்கிடையில் அதிக இடைவெளியுள்ள சீப்புகளையே பயன்படுத்த வேண்டும். நெருக்கமான பற்களையுடைய சீப்பினால் தலை வாரும்போது மயிர் பிடுங்கப்பட்டு விடும். நீளமான முடியினை வாரும்போது தலை மண்டையுடன் முடியைப் பரவவிட்டு சீவுதலாகாது. ஈர முடியினை மின் இயக்க சாதனங்களால் காயவைப்பதைத் தவிர்க்க வேண்டும். எப்போதும் சுத்மான பருத்தியாலான துணியே நல்லது. மின் சக்தியினால் இயங்கும் வெப்பக் காற்றுமிழ் சாதனங்கள், முடியின் இயற்கையான தன்மையை அழித்து அதிக வரட்சியடைய வைத்துவிடுகின்றன. மயிர் இரு கூறாகப் பிளவுபடுவதற்கும் வழி சமைத்துவிடுகிறது.

அடிக்கடி மண்டையை மென்மையாக அழுத்தி மசாஜ் செய்யலாம். இதனால் இரத்த ஓட்டம் செம்மையடையும்.



நீளமான முடிகளைக் கவனமாகப் பராமரிக்கவேண்டும். இல்லையேல் மயிரின் நுனி பிளவுபட்டுவிடும். ஈரமான முடியினை மின் சாதனங்களைப் பயன்படுத்தி உலர்த்தாமல் கூடுமானவரை இயல்பாகவே உலர விடுங்கள். பருத்தியாலான மென்மையான துணியைக் கொண்டு துவட்டலாம். சிக்கினை நீக்கும்போது முதலில் மயிரின் நுனியிலுள்ளவற்றை நீக்கியபின் மேலே மண்டை வரை சீப்பால் மென்மையாக வாரி சிக்ககற்றலாம்.

உங்கள் சிகைக்குப் பொருத்தமான ஷம்புவினைத் தேர்ந்தெடுத்து அவ்வப்போது பயன்படுத்துங்கள். கண்டிஷனர் எப்போதும் பாவிக்கவேண்டிய அவசியமில்லை. சிகைக்



குச் சாயம் பூசுபவர்கள்தான் அடிக்கடி கண்டிஷனர் தடவுதல் வேண்டும்.



காய்ந்த முடியைவிட ஈரமான நிலையிலுள்ள முடியினைத்தான் பக்குவமாக வார வேண்டும். ஈரமான முடியில் விரைவில் பிளவு தோன்றக் கூடும். அதிக இடைவெளியுள்ள சீப்பினால் முதலில் நுனி மயிர்களை வாரிய பின்னர் மேற்புறமுள்ள மயிர்களை வாரி சிக்குகளை அகற்றலாம்.

# எந்த வயதில் எத்தனை மணிநேரம் தூங்க வேண்டும்



பலர் நாற்பது நாள் வரையிலும் உணவு உண்ணாமல் இருந்திருக்கிறார்கள். ஆனால் எவரும் தொடர்ந்து தூங்காமல் எட்டு நாளைக்குக்கூட உயிரோடு இருந்ததாக நாம் எங்கும் படித்ததில்லை.

1. நான்கு வயது குழந்தைகள் நாள் ஒன்றுக்கு பதின்மூன்று மணிநேரம் தூங்க வேண்டும்.
2. ஆறு வயது குழந்தைகள் பன்னிரண்டு மணி நேரம் தூங்க வேண்டும்.
3. எட்டு வயது குழந்தைகள் பதினொரு மணி நேரம் தூங்கவேண்டும்.
4. பத்து வயதுக் குழந்தைகள் பத்தரை மணி நேரம் தூங்கவேண்டும்.
5. பன்னிரண்டு வயதுக் குழந்தைகள் பத்து மணி நேரம் தூங்கவேண்டும்.
6. பதினான்கிற்கும் பதினாறுக்கும் இடைப் பட்ட வயதுடையவர்கள் ஒன்பது மணி நேரம் தூங்கவேண்டும்.
7. சராசரி மனிதர்கள் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு எட்டு மணிநேரம் தூங்கினால் போதுமானது.

குழந்தைகளை பொறுத்தவரை அவர்கள் விரும்புகிற நேரம் வரையிலும் தூங்குவதற்கு விட்டுவிடவேண்டும். அவர்களை சினிமா முதலியவற்றிற்கு அழைத்துக்கொண்டு போகக்கூடாது. இரவில் வெகுநேரம் வரையிலும் படித்துக்கொண்டிருக்குமாறு கட்டாயப்படுத்தக்கூடாது.

('ஆதாரம்'-உங்களுக்கு தெரியுமா?)

# உண்மையான கதாநாயகி

## அழகான ஜாக்குலின்



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின் கென்னடி.

சென்ற ஆண்டு இறந்துபோனார் ஜாக்குலின்.

கென்னடி மறைந்த பின்னரும் அமெரிக்க மக்களது மனங்களில் ராணியாக இருந்தவர் ஜாக்குலின்.

கவர்ச்சிகரமான ஜாக்குலின் பற்றி பல்வேறு கிசு-கிசுக்கள் வெளிவந்தபோதும் மவுசு குறையவில்லை.

கென்னடி சுடப்பட்டு இறந்தபோது தெறித்த இரத்தம் ஜாக்குலின் அணிந்திருந்த உடையில் பட்டது. இறுதிச் சடங்குகள் முடிந்து பல நாட்களாகியும் அந்த உடையை அணிந்திருந்தார் ஜாக்குலின்.

அமெரிக்காவின் அவமானச் சின்னமாக அதை அணிந்திருந்தார். அதனால் மக்களது அனுதாபமும் ஜாக்குலின்மீது திரும்பியது.

கென்னடி உயிரோடு இருந்தபோது மர்லின் மன்றோ என்னும் நடிகையோடு தொடர்பாக இருந்தார். ஆனாலும் ஜாக்குலின் கென்னடி மீது அன்பாக இருந்தார்.

கென்னடி மறைந்த பின்னர் தனது உதவியாளரை பாராளுமன்ற நூலகத்திற்கு அனுப்பிய ஜாக்குலின், ஆபிரகாம் லிங்கனது இறுதி யாத்திரை எப்படி நடந்தது என்று அறிந்துவரச் சொன்னார்.

ஆபிரகாம் லிங்கனது இறுதி ஊர்வலம் போலவே கென்னடியின் இறுதி ஊர்வலத்தையும் நடத்தி முடித்தார் ஜாக்குலின்.

கென்னடியின் மறைவின் பின்னர் உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவரான அரிஸ்டாட்டில் ஒனாஸிஸ் என்பவரை மணந்தார்.

ஜாக்குலின் தனது கடைசிக்காலத்தில் காதலித்தது ரெம்பிள்ஸ்மன் என்பவரை.

கென்னடியின் மறைவின் பின் ஜாக்குலினது தனிப்பட்ட வாழ்க்கை திசைமாறிய போதும் அமெரிக்க மக்கள் இப்போதும் ஜாக்குலினின் அழகையும், அறிவையும் நேசிக்கிறார்கள்.

# முகம் எப்படி? அலங்காரம் அப்படி!

திரைப்படங்களில் வரும் கதாநாயகிகளைப் பார்த்து, மனதிற்குள் தான் அவர்களைப்போன்று இருப்பதாகக் கற்பனை செய்துகொள்வதும், அவர்களைப் போன்று தன் நடை, உடை, பாவனைகளை மாற்றிக்கொள்வதும் பல பெண்களின் வழக்கமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு பெண்ணும் அவர்களைப் போன்று தன்னை மாற்றிக்கொள்வதைத் தவிர்த்து, அவர்களைப் போன்ற முக அமைப்பு உடையவர்கள் தங்களுக்கேற்ற அலங்காரங்களைப் பின்பற்றலாம்.

உதாரணத்திற்கு நடிகை நக்மா போன்று 'ஓவல்' முக அமைப்புடையவர்களுக்கு எந்த விதமான மேக்-அப்புக்கள் அழகாக இருக்கும் என்பதைப் பார்ப்போம்:

நக்மாவைப்போன்ற வசீகரிக்கும் முக அமைப்பு மிகச் சில பெண்களுக்கே வாய்க்கிறது. இப்படியானவர்களுக்கு தலைமுடி கட்டையாகவும், அடர்த்தியாகவும் இருப்பதால் முதலில் தலை முடியை நன்றாக வாரிவிட்டு, முன்புறம் செட் செய்துவிட்டு, அப்படியே பின்னாமல் விரித்துவிட்டு விட்டாலே மிக அழகாக இருக்கும். இல்லையென்றால் எளிமையான ஒரு கொண்டை (Top kony) போட்டுக்கொண்டால் பொருத்தமாக இருக்கும். படத்தில் தலைமுடியை நன்றாக இழுத்து உயர்த்திக்கட்டியிருப்பதால் முகம் சற்று நீளமாக இருப்பதைப்போன்று



காட்சியளிக்கிறது. இல்லையென்றால் இவரது முகம் அகலமாகத் தோன்றும்.

அகலமாகக் காட்சியளிக்கும் முகத்தை வட்டமாகவோ அல்லது நீளமாகவோ இருக்கும்படி காட்டிக்கொள்ளவேண்டுமானால் அதற்கேற்றபடியும், மேக்-அப் செய்துகொள்ளலாம். அதாவது நமக்குத் தேவையான வடிவம்வரை மேக்-அப் செய்துவிட்டு கட் கொடுத்து விட்டால் போதும். முதலில் முகத்தின் வடிவத்திற்கேற்ப ஒரு அவுட் லைன் (Out line) வரைந்துகொண்டு அந்தக் குறிப்பிட்ட வடிவம்வரை ஃபவுண்டேஷன் போட்டுவிட்டு, கட் பவுடரைப் போட்டால் போதும். இந்தப் பெண்ணின் அகலமான முகத்தைக் குறைத்துக் காட்டக்கூட இந்த மாதிரி முறைதான் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலதான் மிக அகலமான இவரது மூக்கும், தடித்த உதடுகளும் இந்தவித மேக்-அப்பினால் சரி செய்யப்பட்டிருக்கின்றன. பார்க்கும்போது, இதில் அவ்வளவாக வித்தியாசமும் தெரிவதில்லை.

உதாரணத்திற்கு ஒரு பெண்ணின் உதடு ஒரு பக்கம் சற்று நீளமாக இருக்கலாம். அப்போது உதட்டின் மேல் சரியான வடிவதற்கு ஒரு அவுட்லைன் வரைந்து கொண்டு அதன்மேல் மேக்-அப் போடலாம்.

இவரைப்போன்ற முக அமைப்பைப் பெற்றவர்கள் மிக எளிமையான ஆடம்பரமில்லாத பொட்டாகப் பார்த்து வைத்துக் கொண்டால் அழகாக இருப்பார்கள். அதே போல், இந்த முகவடிவுடன் ஒரு பெண் குட்டையாக இருந்தால் அவளுக்கு 3/4th மிடி போன்ற உடைகளும், உயரமாக இருந்தால் புடவையும் பொருத்தமாக இருக்கும்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

## முட்டை கட்லெட்

**தேவையான பொருட்கள்:**

மாவு-250 கிராம்
வெண்ணெய்- 250 கிராம்
முட்டை-3
அப்பச்சோடா-3 தேக்கரண்டி
பெரிய வெங்காயம்-2
பச்சைப் பட்டாணி-200 கிராம்
கரட்- 50 கிராம்
கொத்தமல்லி தழை- சிறிதளவு
மிளகாய்த்தூள்- 2 தேக்கரண்டி.
மல்லித்தூள்-2 தேக்கரண்டி
மசாலாதூள்-1 தேக்கரண்டி.
உப்பு-அளவாக

**செய்முறை:**

மாவையும், அப்பச்சோடாவையும் நன்கு கலந்து சலித்துக்கொள்ளவும். முட்டையை வெண்கரு, மஞ்சட்கரு என பிரித்து நன்கு அடிக்கவும். மாவு, அப்பச்சோடா கலவையுடன் வெண்ணெய் சேர்த்து நன்கு கடையவும். வாணலியில் இரண்டு மேசைக்கரண்டி எண்ணெய்விட்டு கொதித்ததும், நறுக்கிய வெங்காயம், கரட், அரை வேக்காடாக அவித்த பட்டாணி முதலியவற்றைச் சேர்த்து நன்கு வதங்கியவுடன் மிளகாய்த்தூள், மல்லித்தூள், மசாலாத்தூள் சேர்த்து இறக்கவும்.

இதை முதலில் பிசைந்து வைத்துள்ள மாவுடன் கலந்து கொத்தமல்லித் தழையைப் பொடிப்பொடியாக நறுக்கிப்போட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ளவும். எண்ணெய் சட்டியில் எண்ணெய்விட்டு, கொதித்தவுடன் கரண்டி கொண்டு வட்ட வடிவமாகச் செய்து எண்ணெயில் போட்டு, இரண்டு பக்கமும் சிவந்ததும் எடுக்கவும்.

மீண்டும் ஒரு வாய்ப்பு

மகளிர் மட்டும்

—பரிசுப் போட்டி—

ஏற்கனவே 25 வாரங்கள் வெளியான பரிசுக் கூப்பன் போட்டியில் பல ஆயிரக்கணக்கானவர்கள் பங்குகொண்டு ஆச்சரியப்பட வைத்துள்ளனர்.

பரிசுக் கூப்பன்கள் தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

அதிஷ்டசாலிகளின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

பெப்ரவரி 20இன் பின்னர் அதிஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மீண்டும் ஒரு வாய்ப்பு

தொடர்ந்து 25 வாரங்கள் வெளியாகும் பரிசுக்கூப்பன்களை வரும் வாரம் முதல் சேகரிக்கத் தொடங்குங்கள்.

பரிசுக்கூப்பனும், பரிசு விபரங்களும் அடுத்தவாரம் பிரசுரமாகும்.

# தேன் கிண்ணம்

### கனவுகளிலாவது வந்து போ.........

உன்
நினைவுகள் படர்ந்த
நிலா வெளிகளில்
நிமிர்ந்து
படுக்கிறேன்.......

•

நீ
உலா வந்த காலங்களை
நிலாப் பொழுதுகளால்
எழுதி.... எழுதி—
அழுது கொண்டிருக்கிறேன்.....


•

உன்
முகம் பார்க்க
முடியாமல்
முந்நூறு கிலோ மீற்றர்கள்
இடைவெளியில்
உயிரைத் தொலைத்து
உட்கார்ந்திருக்கிறேன்.......
மொத்தத்தில்
கொஞ்சம்
கொஞ்சமாய்......
நான்
இறந்து கொண்டிருக்கிறேன்......

•

வா......பெண்ணே........
கனவுகளிலாவது
ஒரு தடவை
கட்டாயம்
வந்து போ.......
அதுவரைக்கும்
உனக்காக
பிரார்த்தனைகள்
இந்த பிரபஞ்சத்தைப்போல்
நீண்டு கொண்டேயிருக்கும்.....

அ. சுதாசேகர்-பொத்துவில்-03.



### ஒரு வரம்!

தமிழுக்கு
தலைப்பாகை
ஒரு வரம்!

••

எழுத்துக்கு
ஏடுகள்
ஒரு வரம்!

••

பருவங்களுக்கு
பந்தங்கள்
ஒரு வரம்!

••

முகங்களுக்கு
முகவரி
ஒரு வரம்!

••

வாலிபருக்கு
வரதட்சணை
ஒரு வரம்!

பாமரருக்கு
பாரதி
ஒரு வரம்!

••

நங்கையருக்கு
நாகரிகம்
ஒரு வரம்!

••

கொடிக்கு
கொம்பு
ஒரு வரம்!


••

சிரிப்புக்கு
சிநேகிதர்
ஒரு வரம்!

••

அழகுக்கு—என்
அனார்கலி
ஒரு வரம்!

ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்.



### தூக்குக் கயிற்றில் நீதி தொங்கப்போகிறது!

மரண தண்டனை
விதிக்கப்பட்டவனின்
இறுதி மூச்சிலிருந்து
எழுந்த வார்த்தைகள்.
"செய்யாத குற்றத்திற்காக
இப்போது என்னை
தூக்கப் போகிறீர்கள்!
எனக்கு
தூக்குத் தண்டனை
விதிக்கப்பட்டபோதே
நான் செத்துப்போனேன்!
இப்போது
தூக்குக்கயிற்றில்
தொங்கப்போவது
நானல்ல!
உங்கள் நீதிதான்!"

செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

### கொஞ்சம் உயிர் தா.........!

நிஜம்—
அயத்துப்போகிறது
உன் நினைவுகள்
தொட்டில் ஆட்ட

□

வாழைப்பழத்தை(க்)
கடிப்பது போல—என்ன
நொழு நொழுப்பு—
உந்தன் பார்வை.

□

உன்—
உறவு உஷ்ணத்தினால்தான்
என் சோகங்கள்
கொஞ்சம்—
ஆல்வாடுகிறது—
அன்பே!

□

'நிலா!'
நீ—
இதழ் திறக்கும்
பொழுதுகளில்தானடி
என் கவிதைகள்—கூட
பீறிடுகிறது.

□

காதலீ.......!
சிரிக்காதே
என் வாலிபத்துடிப்பில்
இதயம் மயங்கி
மோகம் விழுங்கி
உயிர்கூட
இப்போ—
நாட்டியமாடுகிறது.

□

அட்டாளச்சேனை யூஎெல் மப்றூக்.

### மோதல் தவிர்ப்பு

இடியும் மின்னலுமாய்
சீறிச் சினந்த
வானத்தில்
மாயமாய் ஒரு
மாற்றம்!

மேகம் விலகி
கீற்றாய் தெரியும்
வளர் பிறையின்
எழிற் தோற்றம்!

கறுத்த வானில்
கண் சிமிட்டும்
நம்பிக்கை
நட்சத்திரங்களின்
ஏற்றம்!

இந்த இரவு
இப்படியே நீண்டால்
விடியல் வேளையில்
சூரியன் கூடத் தெரியலாம்
அந்தப் பகலின்
வெளிச்சத்தில்
பயமின்றி நடக்கலாம்!

காலத்தின் தீர்ப்பை
காத்திருப்பவருக்கெல்லாம்
வருமா அந்த
வசந்த உதயம்?

மக்காவிலிருந்து
இனியவன் இசார்தீன்.

### சமாதானமே இங்கு வா!

சமாதானமே இங்கு வா
உன்னை சந்தித்தால் மெத்த மகிழ்ச்சி
யாழ்ப்பாண பனாட்டு ஒடியல்
வாழைப்பழம் வாய்க்கு மிக ருசி.

இரவு நேர புகையிரதம்—கொழும்பு
இதமான பயணம்
கனமான மண்ணரனில் சிறார்களின்
களைகட்டிய விளையாட்டு.

துப்பாக்கியின் முனையில் சிலந்திக் கூடு
தந்தையை இழந்தவனுக்கு தனையனின் தாலாட்டு
ஆதவன் பொற்கதிரில்
அவள் மனம் குளிர்ச்சி.

நிலவினைக் கண்ட நாள் நினைவில் வந்தது
நிமிர்ந்து பார்த்தாள் நெஞ்சம் கனத்தது.

கண்ணெதிரில் காதலன்
[illegible]த்தினிலே முத்துகள்
நிலத்தினிலே இரு துளிகள் வீழ்ந்து அமிழ்ந்தது.

வருமா? சமாதானம்
வஞ்சியவள் கண்கள் பனித்தது
வந்து போனது மனதில்
கடந்தகால நினைவலைகள்
வானத்து விண் மீன்கள்
சிரித்தது பார்த்து.

சமாதானமே இங்கு வா
உன்னை சந்தித்தால் மெத்த மகிழ்ச்சி.

அன்பு அபூபக்கர்-திருகோணமலை.

## கத்தரித்த கடி ஜோக்ஸ்

அவர்: பொதுக்கூட்ட மேடைக்கு அருகில் தீயணைப்பு வண்டி எதற்காக நிக்குது?
நண்பர்: பேச்சாளர் தீப்பொறி பறக்க பேசுவாராம்.

□□

ஆசிரியர்: மூவேந்தர்களில் பாண்டியர்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
மாணவன்: ராஜபாண்டி, செந்தூரபாண்டி, சீவலப்பேரி பாண்டி, மற்றும் தோழன் பாண்டியன்.

□□



பெண்: என் காதலர் மடியில் படுக்கவே பயமா இருக்கு.
தோழி: ஏன்?
பெண்: ஹேர்பின் திருடுறார்டி.

காதலன்: கண்ணே! என் உயிர் வேண்டுமானாலும் தருவேன். என்ன வேண்டும் சொல்!
காதலி: அதெல்லாம் வேண்டாங்க. ரெண்டு கிலோ காப்பித்தூள் வாங்கித்தாங்க போதும்.

□□

வீட்டுக்காரர்: என்னப்பா இது, என் வீட்டில திருடினதுமில்லாமல் எனக்கு சாக்லேட் வேற தர்றியே.
திருடன்: இது என்னுடைய நூறாவது திருட்டு. அதான் சாக்லேட் சந்தோசமா சாப்பிடுங்க.

□□

பாபு: எப்ப கல்யாணம் பண்ணிக்கிறது என்ற விசயத்திலை எனக்கும் என் காதலிக்கும் பயங்கர சண்டை.
கோபு: அப்புறம் என்னாச்சு?
பாபு: நான் இந்த மாதமும், அவள் அடுத்த மாதமும் கல்யாணம் பண்ணிக்கப் போறதா முடிவு பண்ணிட்டோம்.


□□

அம்புஜம்: எங்க வீட்டுக்கும் எதிர் வீட்டுக்கும் ஒரே நேரத்திலை ஒரேவிதமான கஷ்டம் வந்திடிச்சு.
பங்கஜம்: அப்படி என்ன நடந்தது?
அம்புஜம்: எங்க வீட்டு பையனையும் எதிர்வீட்டு பெண்ணையும் இரண்டு நாளா காணோம்.

□□

மனைவி: என்னங்க, பையன் ஆறாவது மாடியில் இருந்து குதிப்பேன் என்று சொல்லிட்டுப் போறான்....... நீங்க பேசாமல் இருக்கீங்க?
கணவர்: பயப்பிடாதே! இந்த பில்டிங்கில் நாலுமாடிதான் இருக்கு.

## ஏழு வித்தியாசங்கள்



இரண்டு படங்களுக்கும் இடையே இருப்பது 7 வித்தியாசங்கள். ஐந்து நிமிடத்தில் கண்டுபிடியுங்கள். விடைகளைச் சரிபார்க்க பக்கம் 18க்கு செல்லுங்கள்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(12.02.95 முதல் 18.02.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கும்பம் - சூரியன், சனி
மேடம் - கேது
கர்க்கடகம் - செவ்வாய்
துலாம் - இராகு
விருச்சிகம் - வியாழன்
தனு - வெள்ளி
மகரம் - புதன்

★ சந்திரன்-மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நட்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, கடன் பயம். | காலை 7 மணி |
| சனி- | உயர்ந்த எண்ணம், பணவரவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | கடன்தொல்லை நீங்கும், மனப்பயம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | எடுத்த கருமம் வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வியாழன்- | வீண் குறைகேட்டல், செல்வாக்கு குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த எண்ணம், மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பொருள் வரவு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| புதன்- | தனலாபம், செய்தொழில் நன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | திடீர் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | மனக்கவலை நீங்கும், பணவரவு. | காலை 7 மணி |
| சனி- | அந்நியர் உதவி, செய்தொழில் நன்மை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, முன்னேற்றம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| புதன்- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண்மனஸ்தாபம், தொழில்கேடு. | காலை 6 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, கௌரவக்கேடு. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, பொருள் வரவுதடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் பலிதம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்கலக்கம், உறவினர் பகை. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண் குறைகேட்டல், பகைமை. | பகல் 12 மணி |
| புதன்- | வெளிவிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | செல்வாக்கு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தொழில் கேடு, மனப்பயம். | காலை 6 மணி |
| சனி- | காரியத்தடை, கௌரவக்குறைவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு குன்றும், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | பணவரவு, செய்தொழில் வெற்றி. | பகல் 12 மணி |
| புதன்- | காரியசித்தி, கடன் பயம் நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் குறைகேட்டல், நினைத்த காரியத்தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- | திடீர் பயணம், உறவினரால் தொல்லை. | பகல் 11 மணி |
| சனி- | தொழில் மந்தம், மனக்கவலை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த எண்ணம், குடும்ப மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் இலாபம், செய்தொழில் வெற்றி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | காலை 6 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | மனக்கஷ்டம், பெரியோர் பழி. | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### விருச்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் கவலை, செய்தொழில் நட்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | மனப் பயம், புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| புதன்- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- | முயற்சி வெற்றி, பொருள் இலாபம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், உறவினர் தொல்லை. | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் பகை, அரச விரோதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | மனக் கவலை நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| புதன்- | காரியத்தடை, பொருள் நட்டம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வீண் குறைகேட்டல், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் இலாபம், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், உறவினர் உதவி. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் சிறப்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| சனி- | பொருள் வரவு, கௌரவம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- | காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- | கடன்தொல்லை, பொருள் நட்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பொருள் விரயம். | பி.ப. 2 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- | வீண் குறைகேட்டல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- | உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்."
-சுப்பிரமணிய பாரதியார்-



## படிக்கணும் தூங்காதே!

நாளே நாளே ஓடாதே!
நானும் கொஞ்சம் படிக்கணும்.
சோர்வே சோர்வே நில்லாதே
சிறப்பாய் நானும் படிக்கணும்.

நினைவே நினைவே செல்லாதே
நினைத்து நானும் படிக்கணும்.
மறதி மறதி தங்காதே
மனத்தால் நானும் படிக்கணும்.

கண்ணே கண்ணே தூங்காதே
அல்லும் பகலும் படிக்கணும்.
இருளே இருளே இருக்காதே
ஒளியில் நானும் படிக்கணும்.

தொகுப்பு-
க. மகேந்திரன்
புனித யோன் பொஸ்கோ கல்லூரி
ஹட்டன்.

பாப்பா முரசு சிறுகதை

# சொல்லக்கூடாத இரகசியம்



தந்திரபுரி நாட்டின் சேனாதிபதி திடீரென்று இறந்துவிடவே, மன்னர் தமிழழகன் புதிய சேனாதிபதியை உடனே தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையில் இருந்தார்.

சேனாதிபதி பதவிக்குத் தனது முப்படைத் தளபதிகளைத் தவிர சிறந்தவர் வேறு யாரும் இல்லை என நினைத்தார். மார்த்தாண்டன், தாமோதரன், நரசிம்மன் ஆகியோரே அந்த மூவர்.

இந்த மூவரில் சேனாதிபதிப் பதவிக்குத் தகுதி உடையவர் யார் என்பதில் மன்னர் தமிழழகனுக்குக் குழப்பம் உண்டாகியது. அப்பொழுது தந்திரபுரி நாட்டின் அண்டை நாடும், நட்பு நாடுமான நீலகிரி நாட்டிலிருந்து அந்நாட்டின் சேனாதிபதி விஜயகீர்த்தி மன்னர் தமிழழகனைச் சந்தித்துப் பேச வந்தான்.

தந்திரபுரி நாட்டின் மீதும் நீலகிரி நாட்டின் மீதும், சித்திரபுரி நாட்டு மன்னன் மணிமாறன் படையெடுக்க முயல்வதால், என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று கலந்துபேசி முடிவு செய்யவே சேனாதிபதி விஜயகீர்த்தி அங்கு வந்தான்.

மன்னர் தமிழழகன் அவனிடம், "சேனாதிபதியாரே! இப்படி ஒரு இக்கட்டான நேரத்தில் எனது சேனாதிபதி இறந்துவிட்டார். ஆகவே நான் புதிய சேனாதிபதியைத் தேர்வு செய்யும் நிலையில் உள்ளேன். எனக்கு இதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தயவுசெய்து தாங்களே எனக்கு நல்ல சேனாதிபதியைத் தேர்ந்தெடுத்துக்கொடுங்கள்," என்று கேட்டுக்கொண்டார்.

"அரசே ஒரு பெரிய பொறுப்பை என்னை நம்பி ஒப்படைக்கிறீர்கள். அதற்கு நான் நிச்சயம் எனது திறமையைக் காட்டத்தான் வேண்டும். ஒரு சிறந்த சேனாதிபதியைத் தேர்ந்தெடுத்துக்கொடுக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு. அதற்குத் தகுதியுடையவர்கள் யார் யார் என்று சொல்லுங்கள். அவர்களில் இருந்து சிறந்தவரை நான் தேர்ந்தெடுக்கிறேன்," என்றான் விஜயகீர்த்தி.

"சேனாதிபதியாரே, மூன்று பேரே இப்பதவிக்குத் தகுதியானவர் என நான் எண்ணுகிறேன். அவர்களில் ஒருவரைத்தான் நீங்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்," என்றார் தமிழழகன்.

"அப்படியே செய்கிறேன் மன்னா!" என்றான் விஜயகீர்த்தி.

மறுநாள்!

முதலில் மார்த்தாண்டனை வரவழைத்தார் மன்னர் தமிழழகன்.

அவனிடம் விஜயகீர்த்தி, "மார்த்தாண்டா, தென்புறத்திலுள்ள சித்திரபுரி நாடு, இந்நாட்டின்மீது படையெடுத்து வரப்போகிறதாம். அதன் படைபலம் என்ன என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும்", என்று சொன்ன மார்த்தாண்டன், எதிரி நாட்டுப் படை பலத்தை விளக்கி விபரமாகக் கூறினான்.

"உங்கள் நாட்டுப் படைபலம் எவ்வளவு? அது எதிரி நாட்டுப் படைபலத்தைத் தாங்குமா?" என்று மறுபடி கேட்டான் விஜயகீர்த்தி.

"தாங்கும்" என்று சொன்ன மார்த்தாண்டன் தமது நாட்டுப்படை பலத்தை விளக்கமாகக் கூறினான்.

அவனை அனுப்பிய விஜயகீர்த்தி, அடுத்து தாமோதரனை அழைத்து அவனிடமும் இதே கேள்விகளைக் கேட்டான். தாமோதரனும் எதிரி நாட்டுப் படைபலத்தையும், தம் நாட்டுப் படைபலத்தையும் மிகவும் விளக்கமாகக் கூறினான்.

அவனையும் அனுப்பிவைத்த விஜயகீர்த்தி மூன்றாவதாக நரசிம்மனை அழைத்தான். அவனிடமும் அதே கேள்விகளைக் கேட்டான்.

எதிரி நாட்டுப் படைபலங்களைக் கூறிய நரசிம்மன், "நமது நாட்டுப் படைபலங்களை இப்போது என்னால் கூறமுடியவில்லை," என்றான்.

விஜயகீர்த்தி அவனையும் அனுப்பிவிட்டு, மன்னர் தமிழழகனிடம், "அரசே சேனாதிபதி பதவிக்கு இந்த நரசிம்மனே தகுதியானவன்," என்றான்.

மன்னர் தமிழழகனுக்கோ ஆச்சரியம். "விஜயகீர்த்தி! மார்த்தாண்டனும் தாமோதரனும் நம் படைபலம் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்கள். நரசிம்மனுக்கோ அது தெரியவில்லை. நமது படைபலத்தைப் பற்றியே தெரியாத இவன், படைத் தளபதியாக இருப்பதற்குக்கூட தகுதியில்லை என்று நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். நீ என்னவென்றால், இவன்தான் சேனாதிபதியாக இருக்கத் தகுதியுடையவன் என்கிறாய். இது எப்படி?" என்று தனது சந்தேகத்தைக் கேட்டார்.

"அரசே! நரசிம்மனுக்கு இந்நாட்டுப் படைபலங்கள் பற்றிய விபரங்கள் அனைத்தும் நன்கு தெரியும். அதனால்தான் அவன் படைத் தளபதியாய் இருந்துகொண்டிருக்கிறான். எல்லாம் தெரிந்திருந்தும் அதை என்னிடம் சொல்லாததற்கு காரணம் உண்டு. அது என்ன காரணம் என்று அவனிடமே கேட்டுப்பாருங்கள் என்றான் விஜயகீர்த்தி. பின்னர் தனது நாடான நீலகிரி நாட்டிற்குப் புறப்பட்டான்.

அதன் பிறகு மன்னர் தமிழழகன், நரசிம்மனைத் தனியே அழைத்து, "நரசிம்மா! நம் நாட்டின் படைபலம் பற்றி விஜயகீர்த்தி கேட்டபோது நீ ஏன் சொல்லவில்லை? உனக்கு அவை பற்றித் தெரியாதா?" என்று கேட்டார்.

"அரசே! நம்நாட்டுப் படைபலம் பற்றித் தெரிந்திருக்காமல் என்னால் இந்தத் தளபதி பதவியை வகிக்க முடியாது. எனக்கு எல்லாம் தெரியும். ஆனாலும் சேனாதிபதி விஜயகீர்த்தியிடம் அவற்றை நான் சொல்ல விரும்பவில்லை. அவர் என்னதான் தங்களது நண்பரின் சேனாதிபதியாக இருந்தாலும், நமது நாட்டின் இராஜாங்க, நிர்வாக, பாதுகாப்பு இரகசியங்களைப் பொறுத்தவரை அவர் மூன்றாவது மனிதரே. என்னதான் இன்று நீலகிரி மன்னர் தங்களுக்கு நண்பராக இருந்தாலும், நாளை அவர் பகைவரானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்று நாம் விளையாட்டாக நம் படைபலங்களை விஜயகீர்த்தியிடம் சொல்லிவிட்டால், நாளை அவர்கள் நமக்குப் பகைவர்களாகிவிட்டால், எளிதில் நம்மை வெற்றிகொண்டு விடுவார்கள். இவற்றைக் கருத்திற்கொண்டுதான் விஜயகீர்த்தியிடம் நம் படைபலத்தைப்பற்றி நான் எதுவுமே கூறவில்லை," என்றான் நரசிம்மன்.

மன்னர் தமிழழகனுக்கு அப்போதுதான் விஷயமே விளங்கியது. அவர் நரசிம்மனின் மதிநுட்பத்தையும், நாட்டுப் பற்றையும் பெரிதும் பாராட்டினார்.

அடுத்து வந்த ஒரு நல்ல நாளில் மிகவும் ஆரவாரமாக அவனுக்கு சேனாதிபதி பதவியைக் கொடுத்தார் மன்னர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.02.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 78
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 75

பரிசுக்குரியவர்:
காமலீற்றா சாமிளா குணசேகரம்
நல்லாயன் கன்னியர் மடம் -கொழும்பு-13.

பாராட்டுக்குரியவர்கள்:
சண்முகநாதன் சர்வானந்தா
கார்மேல் பாத்திமா தேசியப் பாடசாலை, கல்முனை.
எம்.என். பாத்திமா தஸ்னீம்-பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.
வி. கௌரிதாசன்-புனித ஜோசப் கல்லூரி, திருகோணமலை.
இஸ்மயில் பர்ஸான்-உடதலவின்ன, கடுகஸ்தொட்ட.
பிரியா சங்கரன்- இந்து மகளிர் கல்லூரி,கொழும்பு.
ஏ.எஸ்.எஃப். அஜ்மிலா-மாவனல்லை.

## விடுகதைகளும் விடைகளும்

1. வெட்டினால் தளைக்கும் அது மரமல்ல; பழுக்கும் அது கனியல்ல; இழுக்கலாம் அது கயிறல்ல; கறுப்பாய் இருக்கும். அது காகமல்ல. அது என்ன?
2. வயிறு நிறைய சாப்பிட்டால் வானத்திலே பறப்பான். யார் அவன்?
3. உண்ணலாம் உணவல்ல; விரிக்கலாம் போர்வையல்ல; மூடலாம் இமையல்ல; திறக்கலாம் சாவியல்ல. அது என்ன?
4. வாய் இல்லாமல் கேட்பான்; கை இல்லாமல் வாங்குவான். அவன் யார்?
5. தீட்டலாம் கத்தியல்ல; விளக்கலாம் பாடமோ பாத்திரமோ அல்ல. அழகாக இருக்கும்; ஆனால் அது ஓவியமல்ல. அது என்ன?
6. பிரிந்திருப்பார்கள் பகைவர்களல்ல; ஒன்று சேர்வார்கள் நண்பர்களல்ல; பிரயாணம் செய்வார்கள் பயணிகளல்ல; நம் வீட்டில் இருப்பார்கள்; ஆனால் உடன் பிறந்தோர்களல்ல. யார் அவர்கள்?
7. பாதி வெள்ளை; பாதி கறுப்பு. ஆனால் இருக்கும் இரண்டு; அது பார்க்கக் கூடிய ஒன்று. அது என்ன?
8. குகை உண்டு; அதற்கு இருவாசல்களும் உண்டு; ஆனால் மனிதர்கள் நுழைய முடியாது. அது என்ன?
9. பார்த்தால் நெட்டை; விடும் அது முட்டை; உரித்தால் மட்டை; உடைத்தால் தட்டை. அது என்ன?
10. அடிக்கும் அது கை அல்ல; உதைக்கும் அது கழுதை அல்ல; ஓடும் கடிகாரமல்ல; ஐந்து கிளைகள் உண்டு. ஆனால் மரமல்ல. அது என்ன?
11. ஒரு தாயின் வயிற்றில் நாற்பத்தைந்து பிள்ளைகள். யார் அவள்?

**விடைகள்**

1. முடி 2. பலூன் 3. வாய் 4. காது
5. பல் 6. பணம் 7. கண் 8. மூக்கு
9. தென்னை, தேங்காய், மட்டை
10. கால் 11. தீப்பெட்டி

தொகுப்பு-எம்.என். றினூசா-யோனகபுர, திக்வெல்ல.

## பந்து

வண்ண வண்ணப் பந்து
அது வட்டமான பந்து
விண்ணை முட்டும் பந்து
அது விந்தையான பந்து
(வண்ண)
அண்ணா தந்த பந்து
அது அருமையான பந்து
பாலரோடு கூடி-நாம்
சேர்ந்து ஆடும் பந்து.
(வண்ண)
கையால் அடித்தாலும்-இரு
காலால் உதைத்தாலும்
சாலக் கோபம் கொள்ளா-மிக
சாதுவான பந்து.

அனுப்பியவர்-
ஏ.கே.ஏ. நிஷா.

## தந்திரக் கணக்கு

ஒரு பெரியவர் கூடையில் சில வாழைப்பழங்களைக் கொண்டு சென்றார். அப்போது அங்கு வந்த சிறுவன் 'ஐயா கூடையில் எத்தனை வாழைப்பழங்கள் இருக்கின்றன?' என்று கேட்டான். அவர் அதற்கு நேரடியாக பதில் கூறவில்லை. மாறாக,

**2 ஆல் பிரித்தால் ஒன்று மிஞ்சும்**
**3 ஆல் பிரித்தால் இரண்டு மிஞ்சும்**
**4 ஆல் பிரித்தால் மூன்று மிஞ்சும்**
**5 ஆல் பிரித்தால் நான்கு மிஞ்சும்**

என்று கூறினார். அப்படியானால் அவரிடம் இருந்த வாழைப் பழங்கள் எத்தனை?

**விடை**
59 வாழைப்பழங்கள்


தொகுப்பு- நஸ்லீஹா பறக்கத்துல்லா
ஹிஸ்புல்லா ம.வி.,
தெலியாக்கொன்னை.

## ரிக்டர் ஸ்கேல்



- **ரிக்டர் ஸ்கேல் (அளவு) என்றால் என்ன?**
  *பூகம்பம், நிலநடுக்கம் ஆகியவற்றை அளக்க இந்த அளவை பயன்படுகிறது. அமெரிக்க பூகம்ப அராய்ச்சியாளர் சார்ள்ஸ் ரிக்டர் இதனைக் கண்டுபிடித்தார்.*
- **மிகக் கடுமையான பூகம்பம் என்றால் எந்த அளவுக்குமேல் இருக்கும்?**
  *ரிக்டர் அளவையில் 9'க்கு மேல் இருந்தால் அது கடுமையான பூகம்பம் எனப்படும்.*
- **மிதமான பூகம்பம் என்பது என்ன அளவாக இருக்கும்?**
  *ஐந்திற்கும் குறைவான ரிக்டர் அளவையின்படி பூகம்பம் ஏற்பட்டால் அதனால் அதிக சேதம் ஏற்படாது. அது மிதமான பூகம்பம் எனப்படும். ரிக்டர் அளவையில் 7க்கும் அதிகமான அளவு பூகம்பம் ஏற்பட்டால் அது பெரிய பூகம்பம் எனப்படும்.*
- **ரிக்டர் அளவையில் ஒரு அளவைக்கும், அடுத்த அளவைக்கும் அதற்கடுத்த அளவைக்கும் இடையே எவ்வளவு வேறுபாடு இருக்கும்?**
  *ரிக்டர் அளவில் எண் 5ஐவிட எண் 6, பத்து மடங்கு அதிகமாக இருக்கும். எண் 6ஐவிட எண் 7 நூறு மடங்கு அதிகமாக இருக்கும். எண் 8, ஆயிரம் மடங்கு அதிகமானதாக இருக்கும்.*
- **பூகம்பம், நிலநடுக்கம் ஆகியவற்றை நன்கு அறியும் திறன் விலங்குகளுக்கு உண்டு என்பது உண்மையா?**
  *ஆம். மனிதனால் 2' அல்லது 3' எண் பூகம்பத்தைத்தான் லேசாக அறிய முடியும். ஆனால் விலங்குகள் இவற்றைவிட குறைவான நில நடுக்கத்தைக்கூட எளிதில் அறிந்துவிடும்.*

## அறிவோம் மனதில் பதிவோம்



உலகிலேயே மிக நீளமான பெரிய புகைவண்டி தென் ஆபிரிக்காவில் ஓடுகிறது. பொருட்களை மாத்திரம் ஏற்றிச் செல்லும் இந்தப் புகைரதத்தில் 660 பெட்டிகள் உள்ளன. இதன் நீளம் 7.3 கிலோ மீற்றர். இதை 9 எலக்ட்ரிக் என்ஜின்களும், 7 டீசல் எஞ்ஜின்களும் இழுத்துச் செல்கின்றன.



இங்கிலாந்தில் கிறீன்விச் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் மிகப் பெரிய தொலைநோக்கி உள்ளது. இது 1893ம் ஆண்டு நிறுவப்பட்டது.



மெக்கலன் வாத்து என்ற ஒரு வகை வாத்து மிக வேகமாக நீந்தக் கூடியது. அது மணிக்கு 27 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்தும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 8 மங்கலம்

**வி**யர்வைப் பெருக்கில் கோகுல் அப்படியே சோர்ந்து துவண்டு போய்க்கொண்டிருந்தான்.

ஆனால் மனசு சோர்வடையவில்லை. அதற்குள் என்னென்னவோ நினைவுகள்...!

மிதக்க ஆரம்பித்தது-அவனுடைய சிறு வயதுக் காலம்!

ஏழெட்டு வயசில் இளஞ் சிரிப்போடு நின்றான் கோகுல். இடுப்பில் கட்டிய பட்டுத் துண்டு. மார்பில் தவழ்ந்த பூனூல். மழுங்க முன் பக்கம் சிரைக்கப்பட்ட வட்டத்தலை; கட்டுக் குடுமி!

எதிரில் நின்றிருந்தவர்கள் அத்தனை பேருக்கும் அவன் வயதுதான்! ஒரு சிலருக்கு ஒன்றோ இரண்டோ கூடும்; அல்லது குறையும். ஆனால் கும்மாளமிடும்போது அனைவருமே அவனுக்குச் சரிமட்டம்!

ஆசான் பள்ளிக்கூடம் ஏதோ ஒரு திருவிழாவுக்காக அடைக்கப்பட்டிருந்தது!

எனவே தான் அத்தனை பையன்களும் பாலேக்கல் மனையின் பின்கட்டிலிருந்த தோப்புக்குள் கூடியிருந்தனர்.

அது சித்திரா பவுர்ணமி நாள்!

மரங்களான மரங்கள் எல்லாம் தோப்புக்குள் பூவிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தன.

முல்லையும், குடமல்லியும், மகிழமும், பன்னீர்ப் பூவும் தரையில் கெட்டிக்கிடந்தன.

இது மாதிரி நேரங்களில்...

அக்கம் பக்கத்து நம்பூதிரிப் பிள்ளைகளுக்கு பாலேக்கல் தோப்புதான் விளையாட்டுக் கூடம்.

வந்து நிற்பவர்களுக்கெல்லாம் கோகுல்தான் தலைவன்.

விளையாட அவர்களுக்கு வேறு இடம் கிடையாதா? இருந்தது. ஆனால் நீலகண்டன் நம்பூதிரிக்குத் தன் மகன் கோகுல் வேறு எங்கேயும் போய் விளையாடுவது பிடித்தமற்ற சமாச்சாரம்!

எனவேதான்...

தங்கள் மனைக்குள் மற்ற இல்லத்துப் பிள்ளைகள் வருவதைப் பற்றியோ, விளையாடுவதைப்பற்றியோ, கத்திக் கும்மாளமிடுவதைப் பற்றியோ எந்தவித ஆட்சேபனையும் நீலகண்டன் நம்பூதிரி சொல்லுவதில்லை! மாறாக- அவர் பேச்சு இப்படி அமைந்திருந்தது...

"குழந்தைகள் தானே? கத்தத்தான் செய்யும்; விளையாடத்தான் செய்யும். அதுகளாலே நமக்கு என்ன தொந்தரவு? ஆடியோடி விளையாடினதுக்கு அப்புறம் அவுங்கவுங்க இல்லத்துக்கு அவுங்கவுங்க போகப் போறாங்க. அவ்வளவுதானே?" என்பார் அவர்.

பலருக்கும் இது ஆச்சரியமாக இருக்கும்.

இல்லத்து அந்தர்ஜனம் கழுத்தை ஒடித்துக்கொண்டு போவாள்.

"நல்லா குதிச்சு நாள் முழுக்க விளையாடட்டும்! நமக்கு என்ன?- ஒரு தொந்திரவும் இல்லே!" என்பாள். கோகுலை விரட்டுவாள்:

"...அந்த வானரங்களை எல்லாம் இழுத்துட்டு நீ தோப்புக்குள்ள போய் விளையாடுடா! இங்கே ஏன் இப்படி அழிச்சாட்டியம் பண்றாய்?"

கோகுல் இதனால் தான் அவர்கள் வரும்வரை இல்லத்தின் நுழைவாசலில் காத்திருப்பான். வந்து எல்லாரும் சேர்ந்து கொண்ட மறு நிமிடமே அம்மாவின் பார்வைக்கோ அப்பாவின் பார்வைக்கோ படாமல் இல்லக் குளத்தின் ஓரமாகப் பம்மிப் பதுங்கியபடி தோப்புக்குள் ஓடுவான்!

இப்படி-ஓடின ஒருநாள் தான் அது நடந்தது...

நன்றாக நினைவுக்கு வருகிறது கோகுலுக்கு.

□□□

"**வா**ங்கடா வாங்க..! அந்தப் பக்கம் வந்து பாருங்க...மகிழம்பூ பூத்து இருக்கு!" என்றான் அவன். ஒருவன் மூக்கைச் சுருக்கி அதன் மணத்தை அனுபவித்துவிட்டுச் சொன்னான்....

"பூக்கலேடா! பூத்து உதிர்ந்தாத்தான் இப்படி வாசம் வரும்!" பையன்கள் ஒருவர் பின் ஒருவராக அங்கங்கே மண்டிக்கிடந்த சிறு புதர்களை விலக்கியபடி தோப்பின் கடைசிக் கோடிவரை போனார்கள்! அங்கே ஓர் ஆச்சரியம் தெரிந்தது!

மகிழம் மரத்தின் படர்ப்புக்கு அடியில் ஏதேதோ மண் பொம்மைகள்; கற்பதுமைகள்!

சில சிதிலப்பட்டும்; சில உருக்குலையாமலுமிருந்தன.

அவற்றிற்கு மகிழமரம் பூவார்ச்சனை செய்திருந்ததைப் போலிருந்தது!

"இதெல்லாம் என்ன கோகுல்?"

"தெரியலே!"

ஒருவனுக்குக் கோகுல் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோது மற்றொரு சிறுவன் அங்கே விழுந்து கிடந்த இளநீர்க் கருக்கை எடுத்து வயிற்றில் வைத்து டும்...டும்...என்று தாளமடித்தபடி வந்தான். இன்னொரு சிறுவன் தென்னம் மட்டையை ஒடித்து வாயருகே வைத்தபடி நாதசுரம் வாசித்துக் கொண்டே வந்தான்.

"அடேய் கோகுல்! இன்னிக்கு நாம கல்யாண விளையாட்டு விளையாடுவோமா?" என்றான் ஒருவன்.

"அப்படின்னா மாப்பிள்ளை யாரு?" கேட்டான் கோகுல்!

"நீதான் மாப்பிள்ளை. இன்னிக்கு நீதான் பட்டுத்துணிகட்டியிருக்கே!" என்றான் வேறு ஒருவன்.

"ஆமாடா! பொறுக்குங்க....பொறுக்குங்க! கீழே கெடக்கற பூவையெல்லாம் பொறுக்குங்க! மாலைகட்டி மாப்பிள்ளை கழுத்திலே போட்டுடுவோம்!" என்றான் மற்றொருவன்.

பையன்கள் அத்தனைபேரும் ஏகோபித்துக் குரல் எழுப்பினார்கள்.

கோகுலுக்கு வெட்கமாகிவிட்டது!

"அடேய்... அம்மாஞ்சீ! நீதான் இன்னிக்கு கல்யாண விருந்து தயார் செய்யற சமையல் ஐயர்! சட்டுன்னு ஆகட்டும், போடா!" ஒரு சோணங்கியை எவனோ ஒருத்தன் உந்தித் தள்ளினான்.

இதற்குள் மற்றவர்கள் மாலை கட்டுவதற்காகப் பூப் பறிக்கவும், பொறுக்கவும் ஆயத்தப்பட்டார்கள். வேறு சிலர் சாப்பிடுவதற்கான இலைகளைப் பறித்துவந்தார்கள்.

"தின்னிப் பெருச்சாளி! இனியும் கல்யாணமே ஆகலே! அதுக்குள்ள என்னடா இலையும், தழையும்?"

பறித்து ஓரிடத்தில் போட்டுவிட்டு கோகுலுக்கு மாலை கட்டிப் போட ஆரம்பித்தார்கள். ஒரு மாலை முடிந்ததுமே மறுபடியும் ஒரு மாலை கட்டப்பட்டது!

"இதைக் கையில் பிடிச்சுக்கடா! கொண்டு போய் பொண்ணு கழுத்திலே போட்டாத்தான் கல்யாணம்!" என்றான் ஒருவன் காரியாத்தமாக. உடனே கையில் கருக்கு வைத்திருந்தவன் மேளம் கொட்ட, மட்டை வைத்திருந்தவன் நாயனம் ஊத கல்யாணக் கோஷ்டி மணப்பெண்ணைத் தேடிப் போயிற்று!

"போடுடா...மாலையைப் போடுடா! இதுதான் பொண்ணு!"

ஒரு கருங்கல் பதுமையைக் காட்டினான் ஒருவன்.

கோகுல் மாலைபோட்டான்- அந்தப் பதுமைக்கு!

"கட்டுடா...தாலியைக் கட்டு..." என்றார்கள் மற்றவர்கள். அங்கிருந்த ஏதோ ஒரு கொடியை இழுத்து தாலியையும் கட்டி முடித்தான் கோகுல்!

சமையற்கார ஐயர் பையன் ஓடோடி வந்தான்.

"சாப்பாடு தயார்! சாப்பாடு தயார்! கல்யாண விருந்து சாப்பிட்டப்புறம்தான் கல்யாணம் முடிஞ்சதா அர்த்தம்!"



கல்யாணக் கோஷ்டி மாப்பிள்ளையோடு வந்து இலந்தை மரத்தின் அடியில் வரிசையாக அமர்ந்தது. கல்லும், மண்ணும், காட்டு கிழங்கும் இலையுமாகப் பரிமாறப் பட்டிருந்த விருந்தை எல்லாருமே பாவனையாகச் சாப்பிட்டு ஏப்பம் விட்டார்கள்!

□□□

இப்போது...அந்த நினைவு மறுபடியும் ஏன் வரவேண்டும்? திடுக்கிட்டுக் கண் விழித்தவன்...இருட்டுக்குள் ஒரு ஒளிபோல் எதிரில் அந்த யக்ஷினி நிற்பதையே பார்த்தான்.

அவள்மீது காட்டுப் பூக்களின் மணம்...

இன்னமும் வீசிக்கொண்டே இருந்தது.

"இங்கேயும் வந்துட்டியா நீ?" கத்தினான் கோகுல்.

"வராமல் எப்படிப் போவேன் கோகுல்? இன்று நமக்கு முதல் இரவு. முகூர்த்தத் தேதியும் நேரமும் குறித்து நம்மை ஒன்றுசேர விட்டிருக்கிற இந்த இரவில் தங்களை விட்டு நான் தனியாகப் போக முடியுமா?"

அவள் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு அவனுக்கு நேர் எதிரிலேயே வந்து நின்றாள். குங்குமத்தின் சிவப்பாகத் தெரிந்தன கன்னங்கள். பற்கள் முல்லையாய் விரிந்தன. பயம் அவனை அப்பியது.

தன்னை இந்த அறைக்குள் வந்து படுக்கச் சொல்வதற்கு முன் தந்தை கொடுத்த தாயத்து பத்திரமாக இடுப்பில் இருக்கிறதா என்று மறுபடியும் தடவிப்பார்த்தான் கோகுல்.

"அவ-ஒரு யக்ஷினி! அவகிட்டே நீ பாதுகாப்பா இருக்கணும்னா இந்தத் தாயத்தை எப்பவும் இடுப்பிலேயே கட்டியிருக்கணும். எக்காரணத்தாலும் இதை அவிழ்த்துடாதே!"

அப்பாவின் வார்த்தைகள் அடி மனதில் அப்போதும் நின்றன.

"என்ன கோகுல்...? இடுப்பிலே தாங்கள் கட்டியிருப்பது தாயத்துதானே?"

கோகுலுக்கு ஆமாம் என்று தலையாட்டக் கூடத் தைரியமில்லை.

"எத்தனையோ ஆண்டுகளாக இந்த ஏந்திழை தங்கள் அன்பான அணைப்புக்காக ஏங்கி ஏங்கி காத்திருந்தது இதற்காகத்தானா கோகுல்? இப்படி ஒரு நல்ல முகூர்த்தத்தில் என்னை அருகே நெருங்க விடாமல் தடுப்பது தர்மம்தானா கோகுல்?"

"எதையாவது சொல்லி என் மனசை மாத்த முயற்சி பண்ணாதே! எனக்கு நீ பொண்டாட்டியில்லே!"

"மறந்து விட்டீர்களா? நீங்கள்தானே எனக்கு மாலையிட்ட மணவாளர்?"

"மாலையா? எப்போ...எப்போ?"

"மகிழம்பூ மரத்துக்குக் கீழ்...ஒரு சித்திரா பவுர்ணமிப் பகலில் என்னை மாலையிட்டு மணாளினியாக்கியதை மறந்து விட்டீர்களே..நாதா!"

கெஞ்சினாள் அவள்!

"சின்ன வயசிலே... அதெல்லாம் ஒரு விளையாட்டு! நீ அதை நிஜம்னு எடுத்துட்டுத்தான் என்னை இப்படி மிரட்டறியா? நான் மிரள மாட்டேன்..! போ...போ..!"

சொன்னான் கோகுல்!

"உங்களை அணைத்து ஆனந்தம் கொள்ளாமல் நான் இங்கிருந்து இன்று போகக்கூடாது கோகுல்! எந்தன் பட்டுடலைப் பாருங்கள்! கட்டி அணையுங்கள்.."

"உன்னை எனக்கு யாருன்னே தெரியாது! சும்மா மிரட்டாதே!"

"ஐயனே! நானா மிரட்டுகிறேன்? உங்களுக்காகவே எத்தனை எத்தனை காலமாகக் காத்துக்கொண்டிருந்தவள் நான்,"

"நீயார்?"

"என் பெயர் பத்ரா. நீங்கள் மாலையிட்ட நாள் முதல் தங்கள் மனைவியாகி உங்கள் நினைவாகவே காதலோடு காத்துக்கொண்டிருக்கிற என்னையா நீங்கள் இப்படி ஒரு கேள்வி கேட்கிறீர்கள்?"

"என் நினைவும், காதலும் உனக்கு இருக்கிறது நிஜம்தானா?"

"ஆமாம் அன்பரே!"

"அப்படியானா நான் சொல்றபடி கேள்!"

"சொல்லுங்கள்....நாதா!"

"முதல்லே என்னை நிம்மதியா இருக்க விடு."

"அதற்காகத்தானே தங்களிடம் இப்படி யாசிக்கிறேன்? என் மோகப் பசியை மூட்டி விட்டுவிட்டு போகும்படி சொன்னால் எப்படி? இந்த இரவை எனக்குத் தாருங்கள். அப்புறம் எல்லாப் பகலும் இரவுகளும் உங்களுக்கே என்று விட்டுவிட்டுப் போகிறேன். எனக்கு இந்த ஒரு இரவே போதும் நாதா!"

அவள் கெஞ்சி அழுவதைப் போலிருந்தது!

"என்னாலே முடியாது...! தயவு செஞ்சு நீ போயிடு..."

கோகுல் கைகூப்பினான்.

"ஐயோ! தாலிகட்டிய கணவர், மனைவியிடம் இப்படிக் கைகூப்பிக் கெஞ்சலாமா?" அவள் அவன் அருகே லேசாகத் தணிந்து கொஞ்சுதலாகச் சொன்னதுமே...குப்பென்று வீசியது மகிழம்பூவின் மந்தகசிக்கும் மணம்.

"....நான் தங்களின் அடிமை! தங்களுக்கே என்னை அர்ப்பணிக்க வந்திருக்கும் பெண்மை! இதைத் தவிக்க விடுவது தங்களது ஆண்மையாகாது கோகுல்!" அவள் அவனை நெருக்கமாக வந்து அணைக்க முற்பட்டபோது...

திடீரென்று எதுவோ அவளைப் பின்னுக்குத் தள்ளிய பதட்டம்!

சட்டென்று தடுமாறி நின்றாள் அவள். "கோகுல்! நீங்கள் அந்தத் தாயத்தை அவிழ்த்தெறியப் போகிறீர்களா இல்லையா?"

கேட்டாள். கேள்வியிலேயே ஓர் உக்கிரம் இருந்தது!

"முடியாது!"

அவனும் அதே வேகத்தில் பதில் சொன்னான்.

பிஞ்சு நாளில் செய்த ஒரு விளையாட்டு இப்போது தன்னுடைய நிம்மதி மொத்தத்தையும் ஒரே நாளில் குலைத்துச் சின்னாபின்னமாக்கப் போகிறதென்று நினைக்க நினைக்கக் கோகுலுக்கு நாடி நரம்புகள்கூட இயங்க மறுப்பதைப் போல் ஓர் உணர்வு!

பயத்தால் உள்ளம் பதறிக்கொண்டிருந்தாலும்...இடுப்பில் பத்திரப்படுத்தப்பட்ட தாயத்து, தன்னிடம் இருக்கும் வரை எந்த யக்ஷினியும் தன்னை நெருங்க முடியாது என்கிற தைரியமும் மனசுக்குள் முகிழ்த்து முகிழ்த்து எழ ஆரம்பித்தது.

என்னதான் உருவில் ஒரு அழகிய பெண்ணாக வடிவெடுத்து வந்திருந்தாலும்... தன் எதிரில் நிற்பவள் ஒரு யக்ஷினி என்கிற கவனம், கோகுலுக்கு இருந்ததால்.... அவளுடைய கோபாவேசமோ உக்கிரமான அதட்டலோ இப்போது பயனளிக்காமல் போய் விட்டது!

அவளது அதிகாரம் பலிக்கவில்லை!

எனவே... அவளிடம் ஒருவகை ஆத்திரமும், வெறியும், வன்மமும் சேர்ந்துகொண்டதைப்போல்...

மறுபடியும் ஒரு பிளிறல் கோகுலின் காதுகளை அறைந்தது!

"எறியடா! அவிழ்த்து! எதற்கு உன் இடுப்பிலே தாயத்து?"

யக்ஷினியின் குரலே மாறிப்போயிருந்தது.

பாதக் கொலுசு மணியின் நாதக் கலவையாக ஒலித்த குரல்... இப்போது நாராசமாக இருந்தது.

நடுங்கிப் போனான் கோகுல்!

அப்போது-

அறைக்கு வெளியே... இலத்தின் முற்றத்து அருகே... எங்கெங்கோ வெறியன் நாய்கள் ஊளையிட்டுக் கத்துவதைப்போல் விட்டுவிட்டுக் கேட்டது சப்தார்ச்சனை! அதன் பயங்கரத்தில் எதிரில் நின்ற பயங்கரம் சிறுத்துப்போனதைப் போல் கோகுல் வெளிறி நடுங்கி நிமிர்ந்து பார்த்தான்!

அதுவரை அணைந்து போயிருந்த விளக்கு-

சின்னப் புள்ளியாய் நிமிர்ந்து பெருந்திரியாய் ஒளியைப் பரப்பியது.

இந்த வெளிச்சம் ஒரு சில நொடிகளுக்குத்தான்!

அதற்குள்-மூடப்பட்டிருந்த ஜன்னல்களும், கதவுகளும் விரியத் திறந்தன! வெளியிலிருந்து ஒரு கொடுங்காற்று உள்ளே வந்து சுழிந்தது! விளக்கை ஊதி அணைத்தது!

கோகுலுக்குள் கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும் போன இடம் தெரியவில்லை! எதிரில் நின்றிருந்த வெண்பட்டு கண்ணுக்கே புரியவில்லை! ஆனால்... தரைக்கும் விட்டத்துக்குமாய் ஓங்கி உயர்ந்து நின்றிருந்தது ஓர் உருவம்!

தனது இங்கிதங்கள் எதற்கும் கோகுல் வசமாகவில்லை என்று உணர்ந்ததுமே பத்ரா பைஸாஸமாக அந்த அறைக்குள் மாறி நின்றாள்! இடி இடித்ததுபோலச் சிரித்தாள்.

"இப்போதாவது உன் இடுப்பில் உள்ள தாயத்தை அவிழ்த்து எறிகிறாயா இல்லையா?"

கர்ணகடூரமாக ஒலித்தது யக்ஷினியின் குரல்.

கோகுல் இதைக் காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை. ஏனென்றால் பார்த்த அந்தப் பயங்கரமான தோற்றம், அவனது சப்த நாடிகளையும் ஸ்தம்பிக்கச் செய்திருந்தது.

தனது முயற்சிகள் எதுவுமே பலிக்காது போனதால் பத்ரா ஒரு பழிகாரத் துர்க்கையாக மாற ஆரம்பித்தாள்!

வெளியே-

காற்று ஊங்காரமிட்டுச் சீற ஆரம்பித்தது! அந்த இருட்டில் பல நூறு நாய்களின் ஊளைச் சத்தம்!

(தொடர்ந்து வரும்)


## எழுதுவது யார்?


**தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முரசு'க்காக எழுதும் தொடர் இது!**

வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!

கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான-பரிசுகள் காத்திருக்கின்றன.

தொடர்ந்து வாசியுங்கள் நாம்கேட்கும்போது விடையை எழுதி அனுப்பினால் போதும்.


## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். ஞானம்
முகவரி: இல. 50-54, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எம். லாபிர்
முகவரி: கோபாலபுரம் நிலாவெளி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, கரம் விளையாடுதல்.



பெயர்: என். செல்வமணி
வயது: 15
முகவரி: பம்பரகல போஸ்ட், ரத்தோட்டை.
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், பேனா நட்பு.



பெயர்: எவ். ஹிமாயா
முகவரி: P.O.BOX-1502, CODE NO-92400, AL-ARDIYA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி.



பெயர்: ஜி. லக்ஸ்மன்
வயது: 27
முகவரி: F.A.C. COMPANY, P.O.BOX-25809, SAFAT-13119, KUWAIT
பொ.போ: தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: எம். நஸ்ருல்லா
வயது: 28
முகவரி: P.O.BOX- 1172 JUBAIL 31951 K.S.A.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: ரி. அன்பழகன்
வயது: 22
முகவரி: புளியாவத்தை கீழ்ப்பிரிவு, டிக்கோயா.
பொ.போ: வானொலி கேட்டல், நண்பர்கள் தொடர்பு.

பெயர்: எம். கைஸ்
வயது: 19
முகவரி: குட்டிக்கராச்சி, பாடசாலை வீதி, கிண்ணியா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, வீடியோ.

பெயர்: எஸ். தனம்
வயது: 24
முகவரி: MUHLERAIN STR-21, 4414, FULLINGDORF, SCHONTHAL, SWITZERLAND.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: அப்துல் காதர்
வயது: 24
முகவரி: 93, அல்முனவ்வரா வீதி, அக்கரைப்பற்று-04.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்

பெயர்: பி. சிவநாதன்
வயது: 28
முகவரி: ஆசி குளம், வவுனியா.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், பேனா நட்பு.

பெயர்: இம்தியாஸ்
வயது: 22
முகவரி: 36, கோபியாவத்தை, சிலாபம்.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், தொலைக்காட்சி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தாய்

## 12

## மக்சீம் கார்க்கி

"அந்திரியூஷா! (அந்திரியூஷா-அந்திரேயைச் செல்லமாக அழைப்பது) உங்கள் பூட்சுகளைச் சீக்கிரம் பழுதுபார்த்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் ஜலதோஷம் பிடித்துவிடும்."

"அடுத்த சம்பளத் திகதியில் நான் புதுப் பூட்சுகள் வாங்கிவிடுவேன்" என்று சிரித்துக்கொண்டு பதில் சொன்னான் அந்திரேய். பிறகு தனது வாட்டசாட்டமான கரங்களை அவளது தோளின்மீது போட்டுக்கொண்டு பேசினான்: "நீங்கள் தான் எனது உண்மையான தாயாக, இருக்கலாம். ஆனால் நீங்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டீர்கள். நான் மிகவும் கோரமாயிருக்கிறேன், இல்லையா?"

அவள் பதில் சொல்லாமல் அவனைச் செல்லமாக அறைந்தாள். அவள் எத்தனை யெத்தனை அன்பு மொழிகளையோ கூற நினைத்தாள்; எனினும் அவளது இதயம் பரிவுணர்ச்சியினால் பரிதவித்தது; வார்த்தைகள் அவளது உதட்டைவிட்டு வெளிவரவே இல்லை.

□□□

அந்தக் குடியிருப்பிலுள்ள மக்கள், நீல மையால் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்களை வினியோகித்த சோஷலிஸ்டுகளைப் பற்றிப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அந்தப் பிரசுரங்கள் தொழிற்சாலையின் ஒழுங்குமுறை பற்றி காரசாரமாக விமர்சனம் செய்தன; பீட்டர்ஸ்பர்க்கிலும், தென் ருஷியாவிலும் நடைபெறும் வேலை நிறுத்தங்களைப் பற்றிக் கூறின; தங்களது சொந்த நல உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகத் தொழிலாளர் அனைவரும் ஒன்றுசேர வேண்டும் எனப் போதித்தன.

தொழிற்சாலையில் நல்ல பணவருமானம் பெற்றுவந்த நடுத்தர வயதினர் அதைக் கண்டு கோபாவேசம் கொண்டார்கள்.

"கலவரக்காரப் பயல்கள்! இவர்களுக்குச் செம்மையாய்க் கொடுக்கணும்" என்று கூறிக்கொண்டார்கள். அந்தத் துண்டுப் பிரசுரங்களைத் தமது முதலாளிமாரிடம் கொண்டுபோய்க் கொடுத்தார்கள்.

இளவட்டப் பிள்ளைகள் அந்தப் பிரசுரங்களை உற்சாகத்தோடு வாசித்தார்கள்.

"இதெல்லாம் உண்மைதானே!" என்றார்கள் அவர்கள்.

உழைத்து உழைத்து ஓடாகிப்போன பெரும்பாலான தொழிலாளர்கள் நம்பிக்கையற்றுப் பேசினார்கள்:

"இதனால் எல்லாம் என்ன நடந்துவிடப் போகிறது? அதெல்லாம் ஒன்றும் நடக்காத காரியம்."

எனினும் அந்தத் துண்டுப் பிரசுரங்கள் தொழிலாளர் மத்தியில் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன. ஆனால், அந்த ஒருவார காலத்தில்வேறு புதுப் பிரசுரங்கள் ஏதும் வரக்காணோம். உடனே அந்தத் தொழிலாளர்கள் மட்டும் தம்முள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்: "ஒரு வேளை அவர்கள் அச்சடிப்பதை நிறுத்தி விட்டார்கள் போலிருக்கிறது!"

ஆனால் அடுத்த திங்கட்கிழமையன்று எப்படியோ மீண்டும் புதுப் பிரசுரங்கள் வினியோகம் ஆயின. மீண்டும் தொழிலாளர்கள் தம்முள் குசுகுசுவென்று பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள்.

தொழிற்சாலையிலும் சாராயக் கடையிலும் யாருக்குமே இனந்தெரியாத ஆட்கள் சிலரின் நடமாட்டம் அதிகரித்தது. இந்த ஆட்கள் அங்குமிங்கும் கவனமாகப் பார்ப்பதும், யாரிடமாவது எதையாவது கேட்பதும், ஒவ்வொருவர் பேசும்போதும் குறுக்கே தலையிட்டுப் பேசுவதுமாக இருந்தார்கள். அவர்களது அளவுகடந்த எச்சரிக்கையாலும் அவர்கள் ஜனங்களோடு பலவந்தமாய்ப் பழக முனையும் காரணத்தினாலும் அவர்கள் பிறரது சந்தேகப் பார்வைக்கு ஆளானார்கள்.

இந்தக் கிளர்ச்சிக்கெல்லாம் தனது மகனது வேலையே காரணம் என்பதைத் தாய் உணர்ந்துகொண்டாள். அவனைச் சுற்றி மக்கள் எப்படிக் குழுமுகிறார்கள் என்பதையும் அவள் கண்டாள். அவனுக்கு என்ன நேர்ந்துவிடுமோ என்ற கவலையோடு, ஒரு பெருமித உணர்ச்சியும் அவளது இதயத்தில் கலந்தது.

ஒருநாள் மாலையில் மரியா, விலாசவின் ஜன்னல் கதவைத் தட்டினாள்; தாய் கதவைத் திறந்தவுடன், மரியா சிறிது உரத்த குரலில் இரகசியமாகச் சொன்னாள்:

"ஜாக்கிரதையாயிரு, பெலகேயா! இந்தப் பிள்ளைகளுக்கு ஆபத்து வரப் போகிறது. இன்றிரவு உன் வீட்டைச் சோதனை போடப்போகிறார்கள். மாசினுடைய வீட்டையும், நிகலாயின் வீட்டையும் கூடத்தான்."

மரியாவின் தடித்த உதடுகள் துடித்தன. அவள் தனது கொழுத்த மூக்கினால் பெருமூச்சுவிட்டாள். திருகத்திருக விழித்தாள்; தெருவில் யாரையோ கண்களால் பின்தொடர்ந்தாள். அங்குமிங்கும் பரக்கப் பரக்கப் பார்த்தாள்.

"எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் உனக்கு ஏதும் சொல்லவில்லை, நான் உன்னை இன்று பார்க்கக்கூடவில்லை புரிந்ததா?"

அவள் போய்விட்டாள்.

ஜன்னலை மூடியபிறகும், தாய் மெதுவாக நாற்காலிக்குள் விழுந்து புதைந்து கிடந்தாள். ஆனால், தன் மகனுக்கு நேரவிருக்கும் பேராபத்தைப்பற்றிய பயபீதி அவளை உடனேயே எழுந்திருக்கச் செய்தது. அவள் அவசர அவசரமாக உடை உடுத்திக் கொண்டாள்; தலைமீது ஒரு கச்சையை மடித்துக்கட்டிக்கொண்டாள்; பியோதர் மாசினிடம் ஓடிப்போனாள்; அவன் நோய்வாய்ப்பட்டிருந்தான்; எனவே வேலைக்குப் போகவில்லை. அவள் உள்ளே நுழைந்த போது, அவன் ஜன்னலருகே உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான்; வலது கையை இடது கையால்தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தான். நோய்வாய்ப்பட்டிருந்த அவனது வலது கைப் பெருவிரல் இயற்கைக்கு மாறாக நிமிர்ந்து நின்றது. அவள் சொன்ன செய்தியைக் கேட்டதும் அவனது முகம் வெளுத்தது. அவன் துள்ளியெழுந்தான்.

"ஓ, அப்படியா சேதி!" என்று முணுமுணுத்தான்.

"சரி. நாம் என்ன செய்யலாம்?" என்று நடுநடுங்கும் கரத்தால் நெற்றி வியர்வையை வழித்துக்கொண்டே கேட்டாள் பெலகேயா.

"ஒருநிமிஷம் பொறுங்கள், பயப்படாதீர்கள்" என்று கூறிவிட்டு, தனது சுருட்டைத் தலையை, இடது கையால் பின்னோக்கிக் கோதிவிட்டுக்கொண்டான் பியோதர் மாசின்.

"நீங்களே பயப்படுகிறீர்களே!" என்று அவள் கத்தினாள்.

"நானா?" அவன் முகம் கன்றிப் போயிற்று; வலிந்து புன்னகை செய்து கொண்டே, "ஆமாம்...ம்.... அது போகட்டும்... நாம் இதை உடனே பாவெலுக்குத் தெரியப்படுத்தவேண்டும். நான் யாரை யாவது அனுப்புகிறேன். நீங்கள் வீட்டுக்குப் போங்கள். வீணாகக் கவலைப்படாதீர்கள். அவர்கள் நம்மையென்ன அடிக்கவா செய்வார்கள்? அடிப்பார்களா?" என்று கூறினான்.

வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன் தாய் அங்கிருந்த சகல புத்தகங்களையும் ஒன்று சேர்த்தாள். அந்தப் புத்தகங்களை மார்பின் மீது அணைத்துப் பிடித்தவாறு அங்கும் இங்கும் நடந்து தத்தளித்தாள்; அடுப்பைப் பார்த்தாள்; அடுப்புக்குக் கீழே பார்த்தாள்; தண்ணீர் பீப்பாயைப் பார்த்தாள். பாவெல் அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே வீட்டுக்குள் ஓடிவருவான் என்று எதிர் பார்த்தாள். ஆனால் ஏமாந்தாள். அவன் வரவில்லை. கடைசியில் அவள் நடந்து நடந்து அலுத்துப்போய் சமையலறையிலிருந்த பெஞ்சின்மீது புத்தகங்களை வைத்துவிட்டு அசைவதற்கே பயந்துபோய் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். பாவெலும் ஹஹோலும் வீடு திரும்பும்வரையிலும் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

"உங்களுக்கு விஷயம் தெரியுமா?" என்று அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் வாய்விட்டுக் கத்தினாள்.

"ஆமாம், தெரியும்" என்று புன்னகையோடு சொன்னான் பாவெல்; "நீ என்ன பயந்துவிட்டாயா?"

"ஆமாம், எனக்கு ஒரே பயம்; ஒரே பயமாயிருக்கிறது..."

"நீ பயப்படக்கூடாது. அதனால் பயனில்லை" என்று சொன்னான் ஹஹோல்.

"சரி, தேநீருக்குத் தண்ணீர்கூட வைக்கவில்லையா?" என்று கேட்டான் பாவெல்.

"எல்லாம் இதனால்தான்" என்று கூறிக்கொண்டே தன்னிடத்தைவிட்டு எழுந்து, புத்தகங்களைச் சுட்டிக்காட்டினாள் அவள்.

அவளது மகனும், ஹஹோலும் விழுந்துவிழுந்து சிரித்தார்கள்; அந்தச் சிரிப்பினால் அவள் மனம் சிறிது நிம்மதி பெற்றது. பாவெல் அந்தப் புத்தகங்களில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து, புழக்கடைக்குச் சென்று ஒளித்து வைக்கப் போனான்.

"இதற்கெல்லாம் பயந்தால் ஒன்றுமே நடக்காது. அம்மா" என்று கூறிக்கொண்டே தேநீர் அடுப்பை ஏற்றினான் ஹஹோல். "இந்த மாதிரி முட்டாள்தனத்தில் ஜனங்கள் தங்கள் நேரத்தைப் பாழடிப்பது இருக்கிறதே அது படுமோசமான, வெட்ககரமான காரியம். இடைவாரிலே வாள்களைத் தொங்கவிட்டுக்கொண்டும், பூட்சுகளில் தார் ஆணிகளை மாட்டிக்கொண்டும் பெரிய பெரிய குண்டுமணிதாகள் இங்கு வருவார்கள்; இங்குள்ள எல்லாவற்றையும் குடைந்து துளைத்துப் பார்ப்பார்கள், மேலே ஒரு அட்டாலி இருந்தால் அதில் ஏறிப் பார்ப்பார்கள்; நிலவறையிருந்தால் அதிலும் நுழைந்து பார்ப்பார்கள். அவர்களது மூச்சியிலும் தலையிலும் நூலாம்படை அப்பி அடைவதுதான் மிச்சமாயிருக்கும்; ஏமாற்றத்தால் எரிந்துவிழுவார்கள்; திகைப்பார்கள்; வெட்கப்படுவார்கள். அதனால், தாங்கள் மிகவும் மூர்க்கமாகவும் கோபமாகவும் இருப்பதாகப் பாசாங்கு செய்வார்கள். தங்களது தொழில் எவ்வளவு படுகேவலமானது என்பதை உணர்வார்கள். ஒரு தடவை இப்படித்தான் என்னுடைய சாமான்களையெல்லாம் அவர்கள் தாறுமாறாய் உலைத்தெறிந்து சீர்குலைத்துவிட்டார்கள். பிறகு அந்தப் பரிதவிப்பால், அவர்கள் இன்னது செய்வது எனத் தெரியாமல் திகைத்து வெளியேறினார்கள்; போய்விட்டார்கள். இன்னொருமுறை அவர்கள் போகும்போது என்னையும் கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். பிறகு என்னைச் சிறையில் போட்டு, நாலுமாத காலம் உள்ளே வைத்தார்கள். சிறைக்குள் போனால் நீ வெறுமனே உட்கார்ந்து இருப்பதைத் தவிர வேறு வேலையே கிடையாது; பிறகு சிறையிலிருக்கும் போது சம்மன்கள் வரும்; உன்னைத் தெருக்களின் வழியே சிப்பாய்கள் நடத்திச் செல்வார்கள்; யாரோ ஒரு பெரிய தலைவன் உன்னை என்னென்னவோ கேள்வி கேட்பான். அந்தத் தலைவர்களில் எவனும் அப்படி ஒன்றும் புத்திசாலியல்ல. அர்த்தமற்று எது எதையோ கேட்பான்; பிறகு மீண்டும் சிறைக்குக் கொண்டுபோகுமாறு சிப்பாய்களுக்கு கட்டளையிட்டு உன்னை அங்குமிங்குமாக வெட்டியாக இழுத்தடிப்பார்கள்; அவர்கள் வாங்குகிற சம்பளத்திற்கு ஏதாவது மாரடித்து ஆகவேண்டுமே! கொஞ்ச நாள் போய்விட்டால், அவர்களே சலித்துப்போய் உன்னை விடுதலை செய்து விடுவார்கள் அவ்வளவுதான்!"

"அந்திரியூஷா! நீங்கள் என்ன இப்படிப் பேசுகிறீர்கள்?" என்று கேட்டாள் தாய்.

அடுப்பை மூட்டி, ஊதுவதற்காகக் குனிந்து முழங்காலிட்டிருந்த ஹஹோல் நிமிர்ந்து பார்த்தான்; அவன் முகம் சிவந்து போயிருந்தது. பிறகு மீசையைத் திருகிவிட்டுக்கொண்டு கேட்டான்:

"எப்படிப் பேசுகிறேன்?"

"என்னவோ யாரும் உங்களைத் துன்புறுத்தாத மாதிரி!"

"இந்த உலகில் துன்புறாத ஆத்மா எங்கே அம்மா இருக்கிறது?" என்று இளம் புன்னகையோடு கூறிக்கொண்டே எழுந்துநின்று தலையை ஆட்டிக் கொண்டான். "அவர்கள் என்னை எவ்வளவோ துன்புறுத்தத்தான் செய்தார்கள்; ஆனால் எனக்கு எல்லாம் பழகிப்போய்விட்டது; மரத்துப்போய் விட்டது. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள் என்று தெரிந்திருந்தும், நாம் என்ன செய்துவிட முடியும்? அந்தத் துன்பங்களையெல்லாம் பொருட்படுத்தினால், என் வேலைதான் கெடும்; அந்தத் துன்பங்களையெல்லாம் நினைத்துப்பார்ப்பதும் வீணான நேரக் கொலைதான். இதுதானம்மா வாழ்க்கை! சமயங்களில் மனிதர்களைக் கண்டாலே எனக்குக் கோபம் வரும். எண்ணிப் பார்த்தேன்; இதிலென்ன பயன்? ஒவ்வொருத்தனும் அடுத்தவன் நம்மை அறையப் போகிறான் என்று எண்ணித்தான் பயப்படுகிறான்; எனவே முதல் அடியை இவனே கொடுக்க முற்படுகிறான். இப்படித்தானம்மா வாழ்க்கை இருக்கிறது!"

அவனது வார்த்தைகள் இதசுகத்தோடு பிறந்து வழிந்தன. அந்தப் பேச்சினால் அவளுக்கு அன்று நடக்கவிருக்கும் சோதனையைப்பற்றிய பயம் நீங்க ஆரம்பித்தது. அவனது முழிக் கண்களில் களிப்பு குடிகொண்டது; அவன் எவ்வளவு கோரமாயிருந்தாலும், லாவகமான உடற்கட்டு கொண்டவன் என்று கண்டாள்.

தாய் பெருமூச்செறிந்தாள்.

"அந்திரியூஷா! கடவுள் உங்களுக்கு அருள் செய்யட்டும்!" என்று மனதார வாழ்த்தினாள் அவள்.

ஹஹோல் தேநீர் அடுப்பருகே சென்று குந்தி உட்கார்ந்தான்.

"எனக்கு நல்லருள் கொஞ்சம் கிடைத்தாலும்போதும். நான் அதை ஒன்றும் மறுதலிக்கமாட்டேன். ஆனால், அவ்வருளுக்காக நான் கை நீட்டி யாசகம் கேட்கமாட்டேன்!" என்றான் ஹஹோல்.

பாவெல் புழக்கடையிலிருந்து வந்து சேர்ந்தான்.

"அவர்கள் ஒன்றும் கண்டுபிடிக்கப் போவதில்லை" என்று நம்பிக்கை நிறைந்த குரலில் சொல்லிவிட்டு, முகங்கை கழுவினான். பிறகு கைகளைத் துடைத்துக்கொண்டு, தாயின் பக்கமாகத் திரும்பினான்.

(தொடர்ந்து வரும்)


**என்றும் முதலிடம்**

**உலகில் மிகச் சிறந்த நாவல் எது?**
**ஒரே பதில்**
**தாய்! தாய்!! தாய்!!!**

**உண்மைகள் எப்போதும் வசீகரமானவை**
**அதுதான் 'தாய்' நாவல்**
**எப்போதும்**
**முதலிடத்தில் இருக்கிறது!**

**தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!**

**ரகுநாதனின்**
**மொழி பெயர்ப்புநடை பிரமாதப்படுத்துகிறது.**

**-ஆ.ர்.**


# ஏமாறச் சொன்னது நானோ?

அந்த பஸ் வண்டி கோயில் ரதம் போல் ஊர்ந்து கொண்டிருந்தது. ஒருவர் இறங்க ஒன்பது பேர் ஏற பிரயாணிகளின் நிலையோ தர்மசங்கடமாகிக்கொண்டிருந்தது. இந்த நரக வேதனை நம் மக்களுக்கு பழகிப்போன ஒன்றுதானே? நான் கையில் இருந்த 'முரசை' விரித்து ரசிகனின் 'இலக்கிய நய'த்தில் மூழ்கத் தொடங்கினேன்.

"எக்ஸ்கியூஸ் மீ"

திரும்பிப் பார்க்க நான் அசந்து போனேன். சிற்பக்கூடத்தில் புதிதாய் செதுக்கிய எழில் மிகு சிற்பம் போன்ற அழகிய நங்கை ஒருத்தி தும்பிச் சிறகாய் படபடக்கும் விழிகளால் என்னை அளந்து கொண்டிருந்தாள். நெருக்கமும் புழுக்கமும் அவளை களைப்படையச் செய்திருக்க வேண்டும். அதனால்தான் அந்த தாமரை முகத்தில் பனித்துளிபோல வியர்வை முத்துக்கள் முகாமிட்டிருந்தன.

இமைக்க மறந்த என் விழிகளுக்கு திடீரென போடப்பட்ட 'பிரேக்' ஒலியும், குலுக்கலும் விடுதலை கொடுக்க, நான் சுயநினைவுக்கு வர... அவள் நிலை தடுமாறி என்மீது விழவும் சரியாக இருந்தது.

'ஸொறி, இற் வோஸ் பை மிஸ்ரேக்' அவள் குரல் தேனில் நனைந்திருந்தது. எழுந்துகொண்டாள் அவள். நான் தான் ஏதோ இன்ப அதிர்வில் அவள் நினைவில் வீழ்ந்து கிடந்தேன்.

அந்த பட்டுடல் பட்ட இடமெல்லாம் பூவை நெருப்பில் நனைத்து ஒத்தடம் கொடுத்தது போல் தகித்தது.

'இற்'ஸ் ஓ.கே, நீங்க எதையோ... சொல்ல வந்தீங்களே?"

ஏதோ ஓர் உணர்வு பந்தாய் சுருண்டு தொண்டையை அடைக்க திக்கித் திணறி வார்த்தை வெளி வந்தது.

'நோ..ஒண்ணுமில்ல' அந்த மாதுளம் பற்கள் மின்ன நாணத்துடன் மறுத்தாள்.

அவள் எதையோ கேட்க வந்து கேட்காது விட்டது எனக்கு சற்று ஏமாற்றத்தை கொடுத்தாலும்... இந்த அழகு நிலாமுன் நிற்பதுவே ஆயிரங்காலத்து தவம் என எண்ணிக்கொண்டேன்.

அது என்னவோ தெரியவில்லை. அணுகுண்டு வீழ்ந்தாலும் அசைந்து கொடுக்காத ஆண் மனம், பெண் ஒருத்தியின் பால் ஈர்க்கப்பட்டு விட்டால் அவனது செயல்களும், சிந்தனையும் ஸ்தம்பித்து, திசைமாறி அவளது ஒவ்வொரு அங்க அசைவிற்கும்- ஏன் உணர்வுகளின் பரிமாற்றத்திற்கும் பின்னால் ஒரு கேள்விக் குறியை தொங்கவிட்டு அதற்கு (சுயநலத்தோடு) விடை தேட முற்படுகின்றதே. இது இயற்கையா? இல்லை. இளமையுணர்வின் பிரதிபலிப்பா? எனக்கு புரியவில்லை.

மீண்டும் இலக்கிய நயத்தில் வீழ்ந்தேன். ஆனால் மனம் ஏனோ ஒட்டவில்லை.

பஸ் வண்டி பேருவளை சந்தியை அடைய பலர் இறங்க அவர்களுடன் ஒருத்தியாக அவளும் இறங்கிக்கொண்டாள். சுமை குறைய சுகம் பிறப்பதுபோல் பயணிகள் குறைய புது வேகத்துடன் புறப்பட்டது அந்த பஸ் வண்டி.. ஆனால் மனம் மட்டும் ஏனோ அவளை சுற்றிச் சுற்றியே வட்டமிட்டது. மனதில் ஓர் அழுத்தம்! வட்ட நிலா இல்லாத வானம் போல் ஓர் வெறுமை.

'பேருவளை பஹின்ன கட்டிய கருணாகரலா இஸ்ஸராட்ட யன்ன' நடத்துநரின் அந்தக் குரல் என்னை நினைவலைகளில் இருந்து மீட்டு வந்தது. நான் எழுந்துகொள்ளவும் பஸ் வண்டி இலங்கை வங்கிக்கு முன்பாக நிறுத்தவும் சரியாக இருந்தது.

நான் பஸ்சை விட்டு இறங்கி வீடு நோக்கி நடக்கலானேன்.

என்னைக் கண்ட தங்கை ஓடி வந்தாள்.

'அண்ணா...அண்ணா என் செயினை கொடுங்கண்ணா."

அப்போதுதான் ஞாபகம் வந்தது. போகும்போது அவளது 'செயினை' போட்டுக் கொண்டு சென்றது.

கழுத்தை தொட்டுப்பார்த்தேன் 'சுரீர்' என்றது. கழுத்தில் இருந்த செயினை காணவில்லை. அப்போதுதான் புரிந்தது. அந்த அழகு நிலா எத்தகைய ஆபத்தான பேர் வழி என்று. அவளின் திறமையைப் பாராட்ட வேண்டிய நேரம் அவளுக்காக அனுதாபப்படவும் வேண்டியதாயிற்று. (என்னடா...இவன் விசித்திரமானவனாக இருக்கானே, செயினையும் பறிகொடுத்து விட்டு, அவளுக்காக அனுதாபப்படுகிறானே' என நீங்கள் உண்மையாகவே என்மீது அனுதாபப்படுவது எனக்கு புரிகின்றது. இருந்தும் நான் அவளுக்காக அனுதாபப் பட்டுத்தான் ஆகணும்) ஏன்னா அது 'தங்கச் செயினல்ல' வெறும் 'டுப்ளிகேட்'தான்.



பேருவளை-ஏ.பீ.எம்.ஜிபரி

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# நோன்புக் கஞ்சி

ஓட்டமாவடி-அறபாத்

உம்மா பசிக்குது, தனது சின்ன மகனின் பட்டினிக் குரல் ஆசியத்தின் நெஞ்சை பிசைந்துகொண்டிருந்தது. இரண்டு நாள் உலை ஏறவில்லை. ஏதோ பாணை வாங்கி சீனியுடன் தொட்டுத் தின்ன கொடுத்துவிட்டு, அவள் தண்ணீரை மட்டும் குடித்து சும்மா இருந்து விட்டாள். இன்று அவளுக்கும் பசியின் அகோரம் தாங்க முடியவில்லை. அடுக்களைக்கு சென்று பானைகளை உருட்டி பார்த்தாள். அவளின் வாழ்க்கையைப் போல் அதுவும் காலியாகத்தான் இருந்தது.

ஆசியத்துக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டும் ஆண்கள். கணவன் அஹ்மது காலமாகி இந்த வருஷத்துடன் மூன்று வருஷமாகிறது. விறகுக்குப்போன அஹ்மது, அதே மாட்டுவண்டியில் பிணமாக திரும்பிய அகோர காட்சி அவள் நெஞ்சில் இன்றும் கனலாய் தகித்தது. பயங்கரவாதத்தின் கோரப் பசிக்கு அவள் கணவன் பலியாகியதை நினைக்க நினைக்க விரக்தி மேலிட்டது. ஆரம்பத்தில் அனுதாபப்பட்டு உறவினர்கள் ஓடி ஓடி உதவினர். பின் ஒவ்வொருவராய் அவளை ஒதுக்கி விட்டனர்.

ஆசியத்து முதன் முதலில் தனிமையை- வறுமையை உணர்ந்தாள். எதிர்காலம் அவள் முன்னே பூதாகாரமாய் நின்றது. இரண்டு பிள்ளைகளின் வாழ்வும் தன் முன்னே மங்கிப்போவதாக அவளின் உணர்வு அழுத்தியது. மூத்த மகனையும் சின்னச் சின்ன வேலைகள் செய்துவர அனுப்பி, தானும், தெரிந்த வீடுகளில் பாத்திரம் தேய்த்து காலம் தள்ளினாள். இருந்தும் பாழாய்ப்போன அவள் பூரித்த இளமையும் அதன் வனப்பும் அவளுக்கு செல்லும் இடமெல்லாம் அச்சுறுத்தலாய் இருந்தன. பட்டினியாக செத்தாலும், மானத்துடன் வாழ வேண்டும் என்றெண்ணிய ஆசியத்து வீடுகளில் வேலைக்கு போவதை நிறுத்திக்கொண்டாள். எஜமானர்களின் பாலியல் பேச்சுக்களும், கள்ளப் பார்வையும் அவ்ளை இம்சைப்படுத்தின.



ஆசியத்து பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டாள். அழும் மகனை ஆசுவாசப் படுத்தினாள். நாளை தலை நோன்பு. நோன்புக்கு பள்ளியில் முப்பது நாளைக்கும் கஞ்சி கொடுப்பார்கள். ஒரு மாதம் 'பித்ரா'வுக்கு அலைந்து நாலு பணம் சேர்த்து பிள்ளைகள் இரண்டு பேருக்கும் இந்தப் பெருநாளைக்காவது உடுப்பு வாங்க வேண்டும். நினைக்கையில் ஆசியத்துக்கு இதழோரம் புன்னகை வெட்டியது.

"ராசிக், கெதியா வா; பள்ளியில கஞ்சி கொடுக்காங்க. நீயும்போய் வாங்கிட்டுவா" மூத்த மகனைக் கூப்பிட்டு பானையொன்றை கொடுத்து அனுப்பினாள். தலை நோன்பு அவள் பட்டினி நோன்புதான் நோற்றாள். நோன்பை நீரால் திறந்துவிட்டு, கஞ்சிக்குப் போன மகனை எதிர்பார்த்திருந்தாள். இளைய மகன் சோர்ந்துபோய் சுருண்டு கிடந்தான். அவளுக்கும் தலை சுற்றியது. கண்கள் இருண்டன. அப்படியே சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

எத்தனை மணி நேரம் அப்படி இருந்தாளோ, அருகில் அழுகை கேட்க விழித்தாள். கஞ்சி கொண்டுவரப் போன மகன் அலங்கோலமாய் நின்றான். வாரிச் சுருட்டி எழுந்து மகனை இழுத்து அணைத்தாள். இதமாய் வருடினாள். "ஏன் மகன் அழவுறீங்க? எங்க கஞ்சி?" ராசிக் தேம்பினான். அழுகையினுடைய காரணத்தை அறிந்துகொள்ள தாய்மை துடித்தது. அவனை தேற்றி, காரணம் கேட்டாள். அவன் சொன்னான்:

"உம்மா, கஞ்ச வாங்கி, சரியான பசியா இருந்திச்சி குடிச்சிட்டு, பொறகு உங்களுக்கும், தம்பிக்கும் வாங்க போனேன். தலைவர் வந்து எண்ட ஷேர்ட் கொலரை புடிச்சி இழுத்து பானையையும் பறிச்சி வீசிட்டாரு. ஏண்டா களவா இரண்டு தரமா கஞ்சி வாங்குறாய்ன்னு கேட்டாரு, அது மட்டுமில்ல உம்மா,ஏண்டா உங்க வாப்பாவா இப்படி செய்ய சொன்னாரு அப்படின்னும் கேட்டாரு."

ஆசியத்துக்கு நெஞ்சு வெடித்தது. தலைவராம் பெரிய தலைவர். கருவிக கொண்டாள். வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. இருந்தும் வேதனையை அடக்கிக்கொண்டாள். "மகன் நீ தம்பிய பார்த்துக்க, நான் போய் கஞ்சி கொண்டாரன்." சொல்லிவிட்டு எழுந்தாள். நடை தள்ளாடியது. சிரமப்பட்டு பள்ளியை அடைந்தவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. கஞ்சி கொடுக்கும் இடம் காலியாய் இருந்தது. தலைவர் மட்டும் நின்றிருந்தார். இவளைக் கண்டதும் "என்ன ஆசியத்து, உன்ட மகன் கூடாத வேலையெல்லாம் செய்றான்," என்றார். இவளுக்கு உயிர் பிடுங்கப்படுவதைப்போல் இருந்தது.

"இல்ல தலைவர், பசியிலதான் அப்படி செஞ்சிருக்கான். வீட்ல ஒரு பிள்ளையும் நானும் இன்னும் பட்னிதான். கொஞ்சம் கஞ்சி ஊத்தி கொடுங்க." தலைவருக்கு பக்கத்தில் இருக்கும் இரண்டு வாளிக் கஞ்சி அவள் கண்ணில் பட்டது. அதிலிருந்து தனக்கு கொஞ்சம் தருவார் என்ற நப்பாசை அவளுக்குள் பூத்தது. கஞ்சி வாசம் வேறு அவள் நாவில் நீரை சுரக்க வைத்தது.

"இண்டைக்கி கொடுத்து முடிஞ்சி, நாளைக்கு வா" தலைவரின் பதிலை அவளால் தாங்க முடியவில்லை. சுருண்டு கிடக்கும் கடைசி மகன் மனசில் வந்தான். விழிகளில் திரண்ட நீரை முந்தானையால் துடைத்துக்கொண்டாள்.

"டேய் முத்து! இந்த இரண்டு வாளி கஞ்சயும் எண்ட வூட்டுக்கு கொண்டுபோய், ஒண்ட நோனாக்கிட்ட கொடு. மற்றது, நம்மட நாய்களுக்கு ஊத்து." தலைவரின் அந்தக் கட்டளை ஆசியத்தின் காதுகளில் அக்கினியாய் விழுந்தது. வீட்டில் பசியின் கொடுமையால் வாடிக்கிடக்கும் பிள்ளைகள் ஆசியத்தின் விழிகளில், அவள் முன்னே செத்துக்கொண்டிருப்பதாய் உணர்ந்தாள். 'இங்கே தலைவர்களின் நாய்களைவிட நானும், என் பிள்ளைகளும்' பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டே தள்ளாடிச் சென்றாள் ஆசியத்து.

---

# கண்ணின் மணியே போராட்டமா?

வெகுநேரமாய் பஸ்ஸுக்காய் காத்து நின்றாள் சிதாரா.வெய்யில் அதிகம். உடம்பில் வியர்வை ஓடைகள் உற்பத்தியாகின. சலிப்பும் எரிச்சலும் மண்டிக்கொள்ள பஸ் தரிப்பின் கம்பித் தடுப்பில் சாய்ந்துகொண்டாள்.

"ஆ.... வலிக்குதுங்க... தாங்க முடியல... ஒரு பெனடோலும் கொஞ்சம் தண்ணியும் அந்த பெட்டிக்கடைல வாங்கித் தாங்களே... ஐயோ.... அம்மா... என்னால தாங்க முடியலியே.." மஞ்சள் சேலையில் இளம் பெண்ணொருத்தி முகத்தில் வேதனை வழிய வியர்த்துப்போய் தலையை அழுத்தியபடி, பக்கத்தில் நின்றிருந்த அவனை வேண்டினாள். சிதாரா கவனித்தாள். இருவரையும். கணவன் மனைவியாக இருக்க வேண்டும்; பெண்ணுக்கு தலை வலியோ ஏதும் வருத்தமோ தெரியவில்லை. துடித்துப் போய் வேதனையில் இருக்கிறாள். ஆனால் அவனோ?

"சீ... இதென்ன பெரிய தொல்லையாப் போச்சு உன்னோட. ஒரே புலம்பலும் அழுகையும்." சலித்துக்கொட்டியபடி இன்னும் இரண்டடி தள்ளி நின்று வெறுப்புத் தோய்ந்த முகபாவத்துடன் சிகரட்டை உள்ளிழுத்தான். பின் எஞ்சிய சிகரெட் துண்டை காலுக்கடியில் போட்டுத் தேய்த்தவன் விரைவாக எங்கோ விலகிப் போனான்.

சிதாரா பார்த்துக்கொண்டிருந்தாள். தலையை அழுத்திப் பிடித்த படி முனகலாக வேதனை வெளிப்பாட்டோடு கண்ணீரில் நின்றிருந்தாள் அப்பெண். தண்ணீர் கொண்டு வருவான் என சிதாரா நினைத்துக்கொண்டிருக்க போனவன் திரும்பவில்லை. நிமிஷங்கள் ஓடின.

சிதாராவுக்கு வியர்த்துப்போனது. உடலைப் போலவே மனமும்! இதற்கு மேலும் பொறுக்க முடியாது. கைத் தாங்கலாக அப்பெண்ணை அழைத்துப்போய் அருகிலிருந்த கடையில் அமர வைத்தவள் தண்ணீரும் பெனடோலும் வாங்கிக் கொடுத்தாள். கண்ணீர்த்துளிகள் தண்ணீர்க் கிளாஸில் விழ மெதுவாக நிமிர்ந்தாள் அப்பெண்.

"ரொம்பவும் நன்றி. நீங்க செஞ்ச உதவிக்கு.." சொல்லிய வார்த்தைகள் வாய்க்குள் இறுக அழுதுவிட்டாள். "பரவாயில்லம்மா, யாரா இருந்தாலும் ஒரு பெண் இத்தன கஷ்டப்படுறத பார்த்துக் கொண்டிருக்க முடியாது." சிதாரா ஆதரவாய் அவளது கரம் பற்றி கூறினாள்.

கடையை விட்டு வெளியில் வரும்போது அவளது கணவன் சற்று தூரத்தே யாரோ ஒருவனுடன் சிரித்தபடி கதைத்துக்கொண்டிருந்தான். நிலையில் ஒரு தடுமாற்றம். சிரிப்பில் ஒரு விகாரம்.

"பார்த்தீங்களா, நான் இங்க வலியில துடிக்க, அவரு அவர் பாட்டுக்கு போய் குடிச்சிட்டு வந்துட்டாரு. இப்படியே நான் மயங்கி விழுந்து செத்து தொலைஞ்சிருக்கலாம். எல்லாம் என் விதி. இப்படிப்பட்ட ஒருத்தருக்கு வாழ்க்கப் பட்டு அனுபவிக்கிற வேதனைகள் போதும். யாருக்குமே அநியாயம் செய்யாத எனக்கு ஆண்டவன் இப்படி ஒரு கணவரா கொடுத்தது ஏன்?" தன் விதியை நொந்து அழுதாள். முகம் தெரியாத ஒருத்தி, இன்னும் பெயர்கூட தெரியவில்லை அதற்குள் அவள் வாழ்க்கையின் சோகத்தை தன்னிடம் சொல்லியழுவது கண்டு சிதாரா திகைத்துப் போனாள்.

என்ன பதில் சொல்வது? எப்படி ஆறுதல் சொல்வது? புரியவில்லை அவளுக்கு. இடையில் அவன் வந்தான். "அந்தா...பஸ் நிற்குது வா.." அவளை இழுக்காத குறையாய் கூட்டிப்போனான். விடைபெறக்கூட இயலாத அவள் கண்களாலேயே "போறேன்" சொல்லிப் போவதை அனுதாபப் பார்வையோடு பார்திருந்தாள் சிதாரா. "சீ, என்ன மனிதன் அவன்" வெறுப்போடு கூடிய பெருமூச்சு சொல்லாமலேயே வெளிப்பட்டது.

சிதாராவின் மன வெளியில் நன்றாய்ப் பதிந்துபோனது அப்பெண்ணின் முகம். அந்த கலங்கிய விழிகள்..... துடிக்கும் உதடுகள்....

மீண்டுமொரு பகலின் மத்தியில் குடையின் துணையோடு சிதாரா அப்பெண்ணைச் சந்திக்கிறாள். கைப்பையும் குடையுமாக அவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறாள். ஆசிரியையாகத் தொழில் பார்ப்பதாகக் கூறிய அவள் சிதாராவை சினேகம் பிடித்துக்கொண்டாள். சிதாராவுக்கும் மகிழ்ச்சி. அன்றைய சம்பவங்களை இழுத்து மீண்டும் காயப்பட வைக்காது உரையாடலை கொண்டு செலுத்த,



ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி

அப்பெண்ணோ திடீரென "அன்னைக்கு நீங்க செஞ்ச உதவிய என்னால மறக்க முடியாது" என்றவாறு ஆரம்பித்தவள் மனக் குமுறலை வெளிக்கொட்டினாள். அணை கட்டிய மனச் சோகம் வெளிப்பட்டது.

"என் விருப்பம் இல்லாமலேயே என் அப்பா அம்மா இவருக்கு என்ன கட்டி வெச்சாங்க. கையில ஒரு நிரந்தர தொழிலில்ல. தேடிக்கிற முயற்சியும் இல்ல. ஆரம்பத்தில என்னவோ நல்லா இருந்தாரு. போகப்போக என்மேல காரணமில்லாம கோபப்படுவாரு. தனக்கு தொழில் இல்லங்கிற தாழ்வு மனப்பான்மைதான் காரணம்னு நினைச்சு நானும் அனுசரிச்சு நடந்தேன். ஆனா இப்ப புதுசா குடிப்பழக்கமும் சேர்ந்துடிச்சு. வாழ்க்கையே நரகம்னு நெனக்கிற அளவுக்கு வேதனை. எப்பவோ தற்கொலை பண்ணி இருப்பேன். ஆனா என் வயித்துல பொறந்த பரிதாப ஜீவன், என் ஒரே மகனுக்காகத்தான் இன்னும் மூச்சு விட்டுட்டு இருக்கேன். இல்லாட்டி எப்பவோ நான்..." நீளமான பேச்சின் இடையில் உதடுகள் துடிக்க, விழிகளில் கண்ணீர் தெறிக்க நிறுத்திவிட்டு மூச்செடுக்க சிரமப்பட்டாள்.

சிதாராவும் தன் கண்ணில் ஈரம் உணர்ந்தாள். மனதில் பாரம் உணர்ந்தாள். எத்தனை பேர் பெண் விடுதலை பற்றி பேசி, விவாதித்து, கோசங்கள் போட்டாலென்ன? உலகம் மாறி விடவா போகிறது? இல்லை என்பதுபோல் இன்னுமோர் அபலைப் பெண்ணின் கண்ணீர் அவளது கரங்களில் சூடாக விழுந்துகொண்டிருந்தது. தன் மகளுக்கு கணவனாக வருபவன் எப்படிப்பட்டவன்? குணம் எப்படி என விசாரிக்காது கல்யாணம் என்றவுடன் பெண் சம்மதம் கேட்டறியாது அவசரப்பட்டு விடும் பெற்றோர்கள் இருக்கும்வரை தொடர் கதையாகுமோ இந்நிலை?

சிதாரா யோசிக்கிறாள்.

---

# 'பென்ஷன்!'

கிண்ணியா அமீரலி



மஹ்பூபா டீச்சர் பென்ஷன்ல போய்
ஆறு வருஷமாகிறது. இப்போது மாதா
மாதம் வெள்ளவத்தை தபாற்கந்தோரில்
பென்ஷன் எடுத்துக்கொண்டிருக்கின்றார்.
தான் பிறந்து... வளர்ந்து... வாழ்ந்த
தன் சொந்த ஊரில் வாடகை வீடு
மாறி வாழ்க்கையை ஓட்டி வந்த
மஹ்பூபா டீச்சர் பட்ட கஷ்டங்கள்
ஊரறியும்.
'காலம் ஒருநாள் மாறும் நம் கவலைகள்
யாவும் தீரும்' என்ற நம்பிக்கையோடும்
பொறுமையோடும் ஊரார் பிள்ளையை
ஊட்டி வளர்த்தார்.
தன் பிள்ளைகள் தானே வளர்ந்தன.
ஞாயிறு- நாகமுத்து.
திங்கள்- திலகவதி.
செவ்வாய்- செல்லத்தம்பி.
புதன்- பொன்னியா.
வியாழன்- வசந்தமலர்.
வெள்ளி- மனாயிதா.
சனி- சப்ரா உம்மா.
இப்படியாக-ஒவ்வொரு நாளும் 'கை
மாத்து'த் தந்து உதவியவர்களுக்குக்
கைம்மாறு..? மஹ்பூபா டீச்சரின்
குடும்பம் அந்த அன்புள்ளங்களை
ஒருபோதும் மறந்துவிட முடியாது.
பென்ஷன் பணத்தை எண்ணும்
போதெல்லாம் மஹ்பூபா டீச்சர் கண்
கலங்கிவிடுவார்.
அன்று-
இருபதாம் தேதி என்றால் இதயமே
சுக்கு நூறு!
இன்று-
மஹ்பூபா டீச்சர் பட்ட
கஷ்டங்களுக்கெல்லாம் பலன்
கிடைத்துவிட்டது.
கவலைகள் யாவும் தீர்ந்துவிட்டன.
மஹ்பூபா டீச்சர் பென்ஷன் எடுப்பது
யாருக்காக?
தன்-மகன்-மகள்-மகன்-மகன்-மகளின்
பிள்ளைகளுக்காகத்தானோ..?
ஆமாம்: மஹ்பூபா டீச்சரின்
பென்ஷன்-தன்
பேரன்-பேத்திகளுக்குத்தான்.
நவ்பலுக்கு-ஹெலிகொப்டர்.
நவ்மானுக்கு-மோட்டார் சைக்கிள்.
நஸீமுக்கு-ஜீப்.
ரஸானாவுக்கு-சட்டை-சப்பாத்து-புத்தகம்.
ரஸானுக்கு-துப்பாக்கி.
ரஸ்னாவுக்கு-பூச்சட்டை.
இன்னும் வரும்...
'அழகான பெண்ணைப் பெறு.
அறிவுள்ள ஆணைப் பெறு' என்பார்கள்.
இரண்டும் பெற்ற-ஐந்து பெற்ற
மஹ்பூபா டீச்சர் பெற்ற பிள்ளைகள்
பெற்ற ஒளிமயமான
எதிர்காலம்-நிம்மதியை ஏந்தி வந்த இந்த
நிகழ்காலம்..!
மஹ்பூபா டீச்சர்-
ஓய்வு பெற்ற ஆசிரியை மட்டுமல்ல,
என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி-
நானொரு கவிஞனாக உருவெடுத்த
காட்சிகண்டு-தினம் தினம் சந்தோஷிக்கும்
என் தாயும் கூட! பள்ளிக்குச் சேர்ந்த
நாள் முதலாய்ப் பள்ளிக்குத்தான் போய்
வருகின்றார்!
ஆமாம்!
யாரு சொன்னா...மஹ்பூபா டீச்சர்
பென்ஷன்ல போய்விட்டார் என்று.
இப்பொழுது...அவர் தன்
பேரப்பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு
'மொன்ரசூரி' போகின்றார்!

# வீழ்ந்தாலும் வாழ்வான்

## இலக்கிய நயம்

தருவது - ரசிகன்



**ம**ன்னவன் நம்பி நெடுஞ்செழியன் யானையின்மீது கம்பீரமாய் காட்சியளித்தான்.

சாளரம் வழியாக எட்டிப் பார்த்தன வட்ட நிலவுகள்.

உயர்ந்த தோளும், திரண்ட மார்பும், யானையின் உடலை அழுத்துவதுபோல தெரிந்த வலிய தொடைகளும், நிமிர்ந்த பார்வையும், வீரமும் விஷமமும் கலந்த உதட்டு நகையும் எட்டிப்பார்த்த வட்ட நிலவுகளை வெட்கப்படவைத்தன.

'மன்னவன் இவனே, மாவீரம் இவனதே. இவனை மார்பிலே தாங்கும் மாபாக்கியம் பெற்றவள் எவளோ?'

நிலவுகளின் நெஞ்சில் மையம் கொண்டது ஏக்கப் புயல்.

சாளரம் வழியே அவன் அழகை விழிகளால் சுவைத்தபடி ஒரு நிலவு கேட்டது.

"வலியவர்தானடி நம் மன்னர். இவரை எதிர்ப்பவர் இனிப் பிறப்பரோ சொல்லடி?"

"போரிலே வெற்றியும் தோல்வியும் சகஜம்தானடி. வாழும் காலத்தில் விதைக்கும் புகழே வரலாற்றில் நிலைக்க வகையாகும் கேளடி."

"வரலாற்றில் இவர் நிலைப்பார். பொன்னேட்டில் இவர் புகழ் பொறிப்பார். எல்லாம் சரியடி. ஆனால் யார் இவர்; நெஞ்சில் குடியேறியிருப்பாள்?"

"கொடுத்து வைத்தவள் எவளோ அவளே மன்னர் இவரது மனமாளிகையின் ராணியாவாள். அந்த கொஞ்சும் கிளியே அங்கு குடியிருப்பாள்."

பெருமூச்சுக்களை பரிமாறிக்கொண்டன அந்த இரு நிலவுகள்.

□□

**ந**றுமணங் கமழும் பூக்களால் தொடுத்த மாலை கழுத்திலே. குளிர்ந்த மணம் தரும் சந்தனம் மார்பிலே. குவிந்த முலை, கனிந்த இதழ், கவிபாடும் விழிகள் கொண்ட நடமாடும் சொர்க்கம் அவன் கரத்தின் சிறையிலே.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?"

"இன்னும் நூறு நூறு விழிகள் எனக்கு இருந்திருக்கக்கூடாதா?"

நம்பி நெடுஞ்செழியன் உரத்துச் சிரித்தான்.

"பேரழகு மட்டுமல்ல பேராசையும் உனக்கு இருக்கிறது. இரண்டு விழிகளே இந்தப் பாடு படுத்தும்போது இன்னும் நூறு விழிகள் இருந்தால் என் நிலை என்னாவது?"

"உங்கள் கம்பீர அழகை காண இரு விழிகள் போதவில்லையே நான் என்ன செய்வேன்?"

"புகழுகிறாய். அதிகமாகப் புகழுகிறாய். வசந்த இதழ்களில் நனைந்துவரும் வார்த்தைகளுக்கும் மதுவில் உள்ள சுவையிருக்கும் என்று தெரிந்துகொண்டேன்."

"இப்போது நீங்கள் புகழுகிறீர்கள்!"

"புகழவில்லை. பொருத்தமான வார்த்தை தேடிக்கொண்டிருக்கிறேன். ஆனால் இது வார்த்தைகள் தேடும் நேரமல்ல."

"வேறு என்ன நேரம்."

"வசந்த வடிவானவளிடம் வையகத்து சொர்க்கபுரிக்கு வழி கேட்கும் நேரம்."

நம்பி நெடுஞ்செழியன் நகைத்தான். கரச்சிறையில் இருந்தவளின் இதழ்களை நனைத்தான். நனைந்தான்.

□□

**அ**ரசர்கள் பலர் கூடியிருந்த அவையில் நம்பி நெடுஞ்செழியன் நடுநாயகமாக வீற்றிருந்தான்.

"எவரும் உங்கள் எதிர் நிற்க முடியாது. போர்க்களத்தில் தாங்கள் ஒரு புயல்!"

என்று புகழ்ந்தார் ஒரு அரசர்.

நம்பிநெடுஞ்செழியன் பதில் சொன்னான்.

"தவறு, வெற்றியில் கர்வம் விழியை மறைக்கும். தோல்வி கண்டவர்களை இகழ்வது குறுமதி நம்மைக் கெடுத்துவிட நாமே வழி செய்வதாகிவிடும்."

"ஆகா...தாராள மனம்."

"இல்லை. இதுதான் தர்மம்."

"ஆயினும் தங்கள் வீரம் விதைக்கும் வெற்றிகளை மறுக்கமுடியாது."

"தவறு. போரின் வெற்றிக்கு நானும் காரணம். ஆனால் நான் மட்டும் காரணமல்ல. துணையாய் நிற்கும் இனிய நண்பர்கள், உயிரை துச்சமாய் நினைத்து துள்ளிச் செல்லும் தூயவீரர்கள் இப்படிப் பலரின் கூட்டு முயற்சியே வெற்றியாக அறுவடையாகிறது."

அரசர்கள் வியந்தனர். அவையினர் மகிழ்ந்தனர்.

□□

**மு**ரசங்கள் முழங்கின. போர் உடை தரித்து புறப்பட்டான் நம்பி நெடுஞ்செழியன்.

உறைக்குள் வாள். உள்ளத்தில் ஆவேசம். புறப்படும்போது எதிர்வந்த இளம்பெண்கள் ஆரத்தி எடுத்து வழியனுப்பினர். அவர்களின் விழிகளில் ஈரம்.

ஈட்டிகள் பறந்தன. வாட்கள் சுழன்றன. களிறுகள் பிளிறும் ஓசையால் போர்க்களம் அதிர்ந்தது.

நம்பியின் குதிரை பகைவர் அணிகளை உடைத்துப் பிளந்து பாய்ந்து சென்றது. கடும் வேகத்தில் சுழன்ற கைவாள் பகைவர் சிரங்களை அவர்கள் கழுத்தில் இருந்து கொய்த்து போட்டது.

இரத்த ஆற்றில் மாண்டவர் போக மீண்டோர் ஓடினர். அது உயிரை கையில் பிடித்தபடி நிகழ்ந்த ஓட்டம்.

ஒரு களம் முடிய மீண்டும் போர்க்களம். மீண்டும் போர் உடை. மீண்டும் கனியிதழ் வழங்கிய வழியனுப்பும் முத்தம்.

பரந்த வீதிகள் வழியே மன்னவன் நம்பி நெடுஞ்செழியன் தேரில் விரைந்தான்.

கண்டவர் வியந்து 'வென்று வருக' என்று மனதார வாழ்த்தினர்.

"இரந்து கேட்பதல்ல சமாதானம். இறந்தே போயினும் இரப்பது என்ற பேச்சே கிடையாது. வலிய அழைத்து பொருத நினைத்தால் மறுத்தோ பதுங்குவது? செந்தமிழ் வீரம் செத்தழியாது. ஆனால் வேதனை, செந்தமிழ் பேசுவோர் தமக்குள் வெஞ்சமரில் அழிவது! எப்போது முடியும் இந்த சோதர யுத்தம்? சமரும் நமக்குள். சாவதும் நாமே."

மனத்துக்குள் வேதனை. போர்க்களம் நோக்கி தேர் விரைந்தது.

மூண்டது யுத்தம். செந்தமிழ் படைகள் களத்து மேட்டில் தமக்குள் மோதின.

குருதி நதி களத்தை நனைத்தது. மரண ஓலம் காற்றையும்கூட கலங்கவைத்தது.

ஒரு தாய் மக்கள் தமக்குள் மோதி சிரசுகள் உருள மண்ணில் சரிந்தனர்.

நம்பி நெடுஞ்செழியன் புயலாய் மாறினான். உக்கிரம். எங்கும் உதிரம் சிந்திக்கொண்டிருந்தது.

எங்கிருந்தோ ஒரு ஈட்டி பறந்து, நம்பி நெடுஞ்செழியனின் மார்பில் துளைத்தது.

இறக்கும் நொடியிலும் உதட்டில் இருந்து இறங்காத புன்னகையோடு களத்து மேட்டில் அவன் புகழுடல் சாய்ந்தது.

செய்தி கேட்டு களம் நோக்கி பதறிவந்தார் புலவர் பேரெயின் முதுவலார்.

"உனக்கோ இக்கதி" மனம் துடித்தது. சித்தம் கலங்கியது.

இருக்கும்போது புகழ ஆயிரம்பேர் வருவர்.

ஆனால், புலவரோ மன்னன் நம்பி நெடுஞ்செழியன் மறைந்தபோதும் அவன் புகழ் மறவாமல் பாடினார்.

சங்கத்தமிழ் இலக்கியமான புறநானூற்றில் இருக்கிறது அந்தப் பாடல்.

"தொடியுடைய தோள் மணந்தனன்
கடிகாவிற் பூச் சூடினன்
தண்கமழுஞ் சாந்து நீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்.
நட்டோரை உயர்பு கூறினன்
வலியரென வழி மொழியலன்.
மெலியாரென மீக் கூறலன்
பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்



வேந்துடை அவையத்து ஓங்கு புகழ்
-தோன்றினன்.
வருபடை எதிர்தாங்கினன்
பெயர் படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவினன்.
நெடுந்தெருவில் தேர் வழங்கினன்
ஓங்கு இயற் களிறு ஊர்ந்தனன்
தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்
பாண் உவப்பம் பசி தீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன் ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்
இடுக ஒன்றோ! சுடுக ஒன்றோ!
படுவழிப் படு கவிப் புகழ் வெய்யோன்
-தலையே!"

திணை: பொதுவியல்
துறை: கையறுநிலை.
பாடியவர்: பேரெயின் முதுவலார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—88

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | █ | 2 | 3 |
| 4 | | █ | 5 | | | |
| | █ | 6 | █ | █ | | █ |
| █ | 7 | | | | █ | 8 |
| 9 | | | | █ | 10 | |
| | | | █ | 11 | █ | |
| | █ | | █ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. இதன் புகையும் உடலுக்குப் பகைதான்.
4. அறுசுவை உணவில் இது உண்டு.
5. வயிராற உண்டால் இது கிடைக்கும்.
7. உடல் உழைப்பை நம்பி வாழ்பவர்.
9. ஒவ்வொரு மதத்திற்கும் இது உண்டு.
10. உயிர் போய்விட்டால் இதுவும் துடிக்காது.
12. கண்ணாடியை வெட்ட இது கை கொடுக்கும்.

### மேலிருந்து கீழ்

1. இசையோடு தொடர்புடையது இது.
2. பல் மரங்கள் சேர்ந்தால்தான் இது உருவாகும்.
3. தீர்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பார் இவர்.
6. இவரது எதிர்காலம் வாக்காளரின் கையில் இருக்கும்.
7. பழங்கதைகள் சொல்வதில் கெட்டிக்காரி.
8. மடல் என்றும் இதனைச் சொல்லலாம்.
9. இது இருக்கும் ஊரில்தான் குடியிருக்க வேண்டும் என்பார்கள்.
11. பெண்ணை இப்படியும் அழைப்பதுண்டு.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 18.02.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-88
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-86ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ச் | 2 சா | ணி | █ | 3 மு | 4 டி |
| ம் | █ | 5 க | ரு | ங் | க | ல் |
| பி | █ | 6 ச | ரி | █ | 7 வ | லி |
| 8 கா | ர | ம் | █ | 9 பா | ரி | █ |
| 10 ப | ணி | █ | █ | கு | █ | 11 மு |
| தி | █ | 12 து | ப் | பா | க் | கி |
| █ | 13 பா | ரா | ட் | டு | █ | ல் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.86இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ராஜகோபால் சாந்திமலர் பதுளை.
2. செல்வி.நிஹாரா முதலிப் அநுராதபுரம்.
3. கே.சிவராஜன் ஹட்டன்.
4. எம்.சதாத் நாவலப்பிட்டி.
5. செல்வி.ரி.தேவிகா ராஜகிரிய.
6. பி.கணேசமூர்த்தி வவுனியா.
7. முகமட் ஹஸ்ஸான் ராஜகிரிய.
8. செல்வி.கே.ரஞ்ஜனி கொழும்பு-13.
9. செல்வி.வி.இலக்கியா அப்புத்தளை.
10. திருமதி.எம்.கிருஷ்ணவேணி தேற்றாத்தீவு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்

### மேற்கிந்தியத்தீவில் இந்திய அணி



சுனில் கவாஸ்கர்

**மே**ற்கிந்தியத் தீவான டிரினிடாட்டில் இந்திய வம்சாவழியினர் குடியேறிய 150வது ஆண்டுவிழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும், மே மாதம் 4,6,7ம் திகதிகளில் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக போட்டி ஒன்றில் விளையாடவும், இந்திய கிரிக்கெட் அணி மே மாதம் போர்ட் ஒவ் ஸ்பெயின் செல்கிறது.

இந்திய கிரிக்கெட் அணி ஒன்றை மேற்கிந்தியத் தீவுகளுக்கு முதன் முதலாக அழைத்துச் சென்ற இந்திய கப்டன் என்ற முறையில் விஜய்ஹசாரேயும், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக அதிகமான டெஸ்ட் சதங்களை அடித்தவர் என்ற பெருமை பெற்றவருமான சுனில் கவாஸ்கரும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### ரிச்சட்சன் சாதனை

**தெ**ன்னாபிரிக்க கிரிக்கெட் அணி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்ள ஆரம்பித்தபின் அந்த அணி விளையாடிய 20 டெஸ்ட் போட்டிகளிலும் கலந்துகொண்ட ஒரே தென்னாபிரிக்க வீரர் விக்கெட் கீப்பரான டேவ் ரிச்சட்சன் ஆவார்.

கடைசியாக நியூசிலாந்து அணிக்கெதிராக விளையாடிய மூன்று டெஸ்ட் போட்டிகளில், தென்னாபிரிக்க அணியில் அதன் முக்கிய வீரர்களான கெப்ளர் வெஸல்ஸ், அலன் டொனால்ட் ஆகிய இருவரும் இடம்பெறவில்லை. இந்தத் தொடரில் டேவ் ரிச்சட்சன் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி ஒரு சதம் உட்பட 247 ஓட்டங்கள் பெற்றார். இதுவே அந்தத் தொடரில் பெறப்பட்ட அதிக ஓட்டங்களாகும். அத்துடன் இவர் 16 'கட்ச்'களையும் பிடித்துள்ளார்.



டேவிட் ரிச்சட்சன்

### 7 வித்தியாசங்கள்

1. பையனின் தலை
2. டி.வி.ஏரியல்
3. கட்டடங்கள்
4. சட்டை மடிப்பு
5. பையனின் கால்மடிப்பு
6. பரசூட்டின் டிசைன்
7. வீட்டின் யன்னல்

### நீச்சலில் புதிய சாதனை!

பின்லாந்து நாட்டில் எஸ்போ நகரில், உலக கோப்பை நீச்சல் போட்டி நடைபெற்றது. அதில் மகளிர் 50 மீற்றர் பட்டர்பிளை பிரிவு நீச்சலில் அமெரிக்க வீராங்கனை ஏமி வான்டைசன் புதிய சாதனை படைத்துள்ளார். 21வயதான ஏமி வான்டைசன் இந்தப் பந்தய தூரத்தை 26.73 வினாடிகளில் நீந்திக் கடந்தார். இந்தப் பந்தயத்தில் 26.93 வினாடிகளில் நீந்தியதுதான் இதுவரை சாதனையாக இருந்து வந்தது. 1993ம் ஆண்டு ஜூலை மாதம் அவுஸ்திரேலியாவின் ஏஞ்சலா கெனடி நிகழ்த்திய இந்தச் சாதனையை கடந்த 3ம் திகதி ஏமி வான்டைசன் முறியடித்து புதிய சாதனை படைத்தார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இவ்வாரம் (12.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

# மகாபாரதம்

அங்கம் 67

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:
நன்மையும் தீமையும் மோதிடும் போரில்
உண்மையதுணர்ந்த அஸ்தினாபுரமே
அழிவினை நாடியே அகல்வதைத் தடுத்திடும்
வழியேது மறியா வித்தகர் பிதாமகர்,
மற்றுள பெரியோர், மாண்புடைவீரர்,
சுற்றுமுள்ளவரும் துரியனைச் சார்ந்தனர்.
உத்தமர் விதுரர்- உண்மையை உணர்ந்தவர்
சத்தியம் காத்திடப் பதவியைத் துறந்தனர்!

-காட்சி தொடக்கம்-

திருதராட்டிரரிடம் விதுரர் வருகிறார்.

**விதுர:** வணக்கம் மன்னவ! என்காலடி ஓசையைக் கொண்டே என் வருகையினைத் தாங்கள் இன்று அறிந்து கொள்ள முடியவில்லைப்போலும்!

**திருத:** எனது கண்பார்வையினை இழந்ததைப் போன்று என் காதுகளும் கேட்கும் சக்தியினை இழந்து விட்டது என்றே தோன்றுகிறது. தர்ம நியாயங்களை நன்கறிந்த என் அன்புத் தம்பி விதுரா! எனக்குரிய செம்மையான பாதையினைக் காட்டுவாயா?

**விதுர:** மகாராஜா! போருக்குரிய வரவேற்புப் பதாதைகள் விரிக்கப்பட்டு விட்ட இக் காலகட்டத்தில் தாங்கள் தயங்கித் தடுமாறலாமா? ஆயுர்வேத மருத்துவ விற்பந்நர்கள், நோயின் தீவிரத்தால் பழுதடைந்துபோன தேகத்தின் அங்கத்தினை சத்திரசிகிச்சை மூலம் வெட்டி விடலாம் என்று கூறியுள்ளனர். அதுபோல நானும் தங்களைப் பொறுத்தவரை, வேண்டப்படாத- பழுதடைந்த ஒருறுப்பாகவிருப்பதனால் நானே தங்களிடமிருந்து பிரிந்து விடத் தீர்மானித்துவிட்டேன் மன்னவ!

**திருத:** எனது நிழல் போல் என்னுடனிருந்த என் அன்புச்சகோதரனான நீயும் என்னை விட்டுப் பிரிய நினைத்து விட்டாயா விதுரா?

**விதுர:** தங்களைவிட்டு நான் பிரியவில்லை. அரண்மனையில் பிரதம மந்திரி என்ற பதவியிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன்.

**திருத:** இந்த நெருக்கடியான வேளையில் என்னைத் தவிக்கவிட்டு விட்டுப் போகிறாயா தம்பி? நீ கூறும் உண்மைகள் கூட சில சமயம் எனக்கு கசப்பானவையாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் தம்பி! பாண்டு மாண்டு மறைந்தாலும் நீயாவது என் அருகில் கடைசிவரை இருப்பாயென எண்ணியிருந்தேன்; ஆனால் நீயும் என்னை விட்டுப் போகிறேன் என்கிறாயே!

**விதுர:** அண்ணா! நான் இந்த யுத்தத்துக்கு ஆதரவானவனல்ல; போரில் எவர் பக்கமும் சார்ந்து நிற்க முடியாதவன் நான். என் இல்லம் சென்று தனிமையில் காலம் கழிக்கப் போகிறேன்.வணக்கம் அண்ணா!

__பின்னணிப் பாடல்:__

தர்மத்தைத் தெய்வமெனத்
தொழுது வாழும் விதுரர் மகான்
கர்வமதைக் கவசமெனக்
கொண்ட துரியோதனனின்
துர்மதிக்குத் தூபமிட
தூயமனம் பொறுக்காமல்
பேர் துலங்கு பதவியினைத்
துறந்திடவும் துணிந்தனரே!

-காட்சி மாற்றம்-

விதுரர் மனைவியுடன் குந்தி உரையாடுகிறார்.

**விது.மனை:** கவலைப்படாதிருங்கள் அக்கா! யுத்தம் நடந்தாலும் தங்கள் புதல்வர்களே நிச்சயம் வெற்றியீட்டுவார்கள்!

**குந்தி:** வெற்றிபற்றி நான் சிந்திக்கவில்லை. துரியோதனன் தீய வழியில் சென்றபோதும் அவனும் என் மகன்தானே? அவன் மடிந்தால் எனக்கும் துயரம் தோன்றாமலிருக்குமா?

விதுரர் வருகிறார்.

**விதுர:** வணக்கம் அண்ணி!

**குந்தி:** நீடூழி வாழ்க!

**விதுர:** தயவு செய்து அத்தகைய வாழ்த்தினை எனக்கு அளிக்கவேண்டாம் அண்ணி! அஸ்தினாபுரத்தின் மூத்த குடி மக்கள் எல்லோரும் ஒன்றாகவே இறந்து விட்டால் நன்றாயிருக்கும். செத்து விழுவோரின் சடலங்களை அவர்களுடைய பலம் குன்றியதோள்களில் சமக்க வேண்டிய நிலை இருக்காதல்லவா?

**விது.மனை:** யுத்தத்தைத் தடுக்கும் மார்க்கமே இல்லையா?

**விதுர:** ஒரு சிறு வழி இருந்தாலும் விட்டு விடுவேனா? பிதாமகரையே கவுரவ சேனைக்குத் தளபதியாக நியமித்து விட்டார்கள். அவருக்கு எதிராக பாண்டவர்கள் எவ்வாறு அயுதங்களை ஏந்தப் போகிறார்களோ தெரியவில்லை!

**குந்தி:** தனது பேரப்பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளும் செத்து வீழ்வதை எவ்வாறு உயிருடன் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்! பாரத வம்சத்தின் பெரும் பொக்கிஷமான பிதாமகரை உயிருடன் காப்பாற்ற வழி பாருங்கள்.

**விதுர:** அஸ்தினாபுரம் நோக்கிவரும் பாதைகளும் இங்கிருந்து வெளிசெல்லும் பாதைகளும் அழிவினை- பேரழிவினையே உச்சரிக்கும்போது நான் எந்தப் பாதை மூலமாக அப்பெருமகனைப் பாதுகாக்க முடியும்?

குந்தி வெளியே செல்கிறார்.

**விது.மனை:** எங்கே போகிறீர்கள் அக்கா?

**குந்தி:** அஸ்தினாபுரம் அழியுமானால் அதற்கு நானும் ஒரு காரணம் ஆவேன்! ஆகவே அந்த அழிவுக்காக வருந்தி கண்ணீர் வடிக்கப் போகிறேன்!

-காட்சி மாற்றம்-

குந்தி படுக்கையில் அமர்ந்த வண்ணம் கண்ணீர் வடிக்கிறார். அவர் மனக்கண்முன் அர்ச்சுனனுக்கும் கர்ணனுக்குமிடையில் கடும் சமர் நடக்கிறது. இருவரும் பாணம் பட்டு வீழ்ந்து மடிகின்றனர்.

□□□

கர்ணன் பிறந்ததும் குழந்தையைப் பேழையில் வைத்து கங்கை நதியில் விடும் காட்சி தோன்றுகிறது.

□□□

அஸ்தினாபுரி அரங்கில் பாண்டவர் தாங்கள் கற்ற வித்தைகளை அரங்கேற்றிய காட்சிகள் பின்னோக்காகத் தோன்றுகின்றன.

**கர்ண:** இந்த அரங்கம் பொதுவானதே! நானும் ஒரு வில் வீரன்தான்! கவுரவ குல வீரன் அர்ச்சுனன்தான் வில்வித்தையில் வல்லவன் என்று அறிவிப்பதற்கு முன்னர் என்னுடன் மோதி வெல்லட்டும் பார்க்கலாம்!

**கிருபா:** முதலில் நான் இரு வீரர்களையும் அறிமுகம் செய்து வைக்கிறேன்! இதோ இவன் பாண்டுமாமன்னனுக்கும் குந்திக்கும் பிறந்தவன். கவுரவ குலத்தவன்- சத்திர வம்சத்தவன்- அர்ச்சுனன். துரோணாச்சாரியாரிடம் வித்தைகள் பயின்றவன். எங்கே... உன்னுடைய குலம்- கோத்திரம்- பெற்றார் பற்றிய விபரங்களைக் கூறு....

**குந்தி:** இல்லை... இல்லை... கர்ணா என்னை மன்னித்துவிடு கர்ணா...!

-காட்சி மாற்றம்-

மாலையில் சூரியதேவனை கர்ணன் வணங்கும்போது குந்தி அங்கு வருகிறார்.

**கர்ண:** வணக்கம் தேவி! மர நிழலில் அமருங்கள்! தேரோட்டியான அதிரதனின் மகன் இந்த ராதேயனால் தங்களுக்கு ஆகவேண்டியது யாதோ?

**குந்தி:** எத்தகைய அசௌகரியங்களையும் தாங்கும் வல்லமை எனக்குண்டு. உன்னிடம் ஒன்று கேட்கவே இங்கு வந்துள்ளேன்.

**கர்ண:** எவரிடமும் எதனையும் யாசகமாகப் பெறவேண்டிய நிலையில் தாங்கள் இல்லை என்று தோன்றுகிறது. இது தான் அவ்வாறு பிறரிடம் கையேந்தும் முதல் சம்பவம்போல் தெரிகிறது. தயவு செய்து என்னிடம் தாங்கள் யார் என்பதைக் கூறுங்கள். தாங்கள் கட்டளையிட்டால் மட்டும் போதும் தேவி!

**குந்தி:** உன் தாயான ராதே தான் உனக்குக் கட்டளையிடும் உரித்துடையவளப்பா! உன்னை வாழ்த்தும் தகுதியுடை அத்தாய்க்கு என் வந்தனங்கள்!

**கர்ண:** என்னைப் பெற்றவளை நான் அறிய மாட்டேன். நான் பிறந்ததும் என்னைக் கங்கை நதியில் விட்டுவிட்டாள் என் தாய். தாங்கள் குறிப்பிட்டீர்களே! அவளேதான் என்னைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தவள். என்னைத் தூர விலக்கிய என்னைப் பெற்ற தாயிலும் பல மடங்கு மேலானவளே என்னை வளர்த்த அன்னா. இருப்பினும் என்னை வேண்டாப் பொருளாக வீசி எறிந்த அந்தத் தாயை ஒரு முறையாவது பார்த்துவிடவேண்டும் என்ற அவா எழாமலில்லை. அவரைக் கண்டு அவர் பாதங்களைத் தொட்,டு வணங்கியபின், "என்னை ஏனம்மா இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கினீர்கள்?" என்று கேட்கவேண்டும்போல் தோன்றுகிறது.

**குந்தி:** தன்னுடைய இக்கட்டான நிலையை அம்மாது விளக்கினால் என்ன செய்வாய்?

**கர்ண:** அந்த ஆண்டவனுக்கே இடுக்கண் நேரலாம்; ஒரு தாய்க்கு அவ்வாறு எதுவுமே நேராது!

**குந்தி:** உன் தாயின் நிலையினை பூரணமாக உணர்ந்தவள் நான்.

**கர்ண:** என்ன...! உங்களுக்கு என் தாயின் நிலை தெரியுமா? எப்படி...?

**குந்தி:** நிச்சயம் தெரியும்.... அந்த அபாக்கியவதியான தாயே நான் தானடா மகனே! என் வயிற்றில் பிறந்த என் மூத்த மகன் நீதானடா...!

**கர்ண:** என்ன...? தாங்களா என் தாய்! அவ்வாறானால் என் வந்தனங்களைத் தங்களுக்குச் செலுத்த வேண்டுமே!

**குந்தி:** மகனே!

**கர்ண:** வேண்டாம் தாயே! இந்த தேரோட்டியின் மகனை- ராதேயின் மகனை- மாபெரும் வீரர்களான பாண்டவர்களை ஈன்றெடுத்த பெரும் பேறு பெற்ற அன்னையான தாங்கள் மகனே என்று அழைக்க வேண்டாம்! மகாராணி குந்தி அவர்களே! தங்களுக்கு எதுவேண்டுமோ கேளுங்கள்! மகனே என்று அழைத்து எதனையும் யாசிக்கவேண்டாம்!

**குந்தி:** என் மகனை,மகனே என்று அழைக்காமல்வேறு எப்படி அப்பா அழைப்பது...?

**கர்ண:** அன்றும் நான் உங்கள் மகன்தானே? என்னை மகன் என்றும் பாராமல் வெறுத்து ஒதுக்கினீர்களே! இன்று மகன் என்ற பாசத்துடனா என்னை நாடி வந்தீர்கள்? . இல்லையில்லை! ஏதோவொரு சுயநல நோக்கம் தான் தங்களை இங்கு அழைத்து வந்துள்ளது!

**குந்தி:** இவ்வாறு கடுமையாகவும் கொடுமையாகவும் நீ இருக்கிறாயே மகனே!

**கர்ண:** கடுமையுமல்ல கொடுமையுமல்ல தாயே! என் உள்ளத்தில் அமுங்கிக் கிடந்த வேதனையின் வெளிப்பாடு தானம்மா இது! சூரிய பகவானுக்குப் பிறந்தவனான இவனை அன்று தேரோட்டியின் மகன் என்று உலகம் தூற்றியபோது அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தீர்களல்லவா? என்றோ ஒதுக்கிய மகனை இன்றேன் காண வந்தீர்கள்? உங்களுக்கு வேண்டியதைக் கேட்டு- எவரும் காண்பதற்குமுன் இங்கிருந்துபோய் விடுங்கள். எவராவது 'யாரிவன்' என்று கேட்டால் உங்கள் மகனா தேரோட்டியின் மகனா என்று சொல்ல முடியாத சங்கடமான நிலை தங்களுக்கு உருவாகலாம் அல்லவா?

**குந்தி:** கர்ணா! வெறுப்பினை ஒதுக்கிவிட்டு நிமிர்ந்த தலையுடன் என்னருகில் வா! உன்னை அன்புடன் அணைக்கிறேன். என் மடியில் உன் தலையை வைத்துத் தலாட்டத் துடிக்கிறேனடா...!

**கர்ண:** தேரோட்டி என் தந்தை-ராதே என் தாய்! அவர்களுடைய இந்த மகனின்தலை தங்கள் மேலான மடியில் கிடக்க அருகதையற்றது அம்மா!



**குந்தி:** தயவு செய்து அவ்வாறு கூறாதே மகனே!

**கர்ண:** குந்தி மகாராணியே! நான் தங்கள் மகனல்ல; தங்களைத் தாய் என்று நான் அழைத்தால் என்னை எடுத்து வளர்த்த அந்தப் பெண்ணுக்கு அநீதி விளைவித்தவன் ஆவேன். உங்கள் மகனாக நீங்கள் என்னைப் பார்க்க வந்திருந்தால் விதுரர் மகானின் இல்லத்திலிருந்து இரதம் ஒன்றில் ஏறி "என் மூத்த மகன் கர்ணனைப் பார்க்கப் போகிறேன்" என்று கூறிக்கொண்டு வந்திருப்பீர்கள்! அர்ச்சுனனுடைய உயிரைக் காக்கும் ஒரே நோக்கத்துடன் தான் தாங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். அன்று கவுரவர்கள் சூழ்ந்திருந்த அரங்கிலே- கற்ற வித்தைகளை அரங்கேற்றும் வேளையிலே-கவச குண்டலங்களுடன் என்னைக் கண்டதும் நான் யார் என்று தங்களுக்கு தெரிந்திருக்கும். என் தம்பிமாரிடம் "இவன் தானடா உங்கள் மூத்த அண்ணன்" என்று கூறி வாழ்த்துப் பெறுவதற்கு ஏன் என்னிடம் அனுப்பவில்லை. அம்மா...! அம்மா....! புனிதமான இந்த வார்த்தை என்னை புண்படுத்திவிட்டது தாயே! என்னை ஈன்றெடுத்ததும் என்னை வீசி எறிவதற்கு தக்க காரணம் ஏதோ ஒன்று இருந்திருக்க வேண்டும் என்றெல்லாம் என் அன்னையைப் பற்றி ஏதேதோ கற்பனையில் நான் இருந்தேன். ஆனால் தாயே! தாங்கள் இன்று என்னிடம் வந்து உன்னை ஈன்ற உன் தாயே நான்தான் என்று கூறி, என்னுள்ளத்தில் புரையோடிப்போயிருந்த புண்ணைக் கிண்டிக் கிளறி வேதனையை அதிகரிக்கச் செய்துவிட்டீர்கள். அம்மா! அம்மா! என் சின்ன வயதிலிருந்து உங்களைக் காணத்துடித்தேன். ஆனால் எனக்குக் கிட்டாத அந்த பாசத்தை எல்லாம் என் தம்பிமார் ஐவருக்கும் பகிர்ந்தளித்துவிட்டீர்கள். இன்று சுயநல நோக்குடன் பாசத்தை பொழிய முன்வந்திருக்கிறீர்கள். ஆனால் உங்கள் ஆசிகளை ஏற்பதற்கு நான் ஆயத்தமாக இல்லை.

கர்ணன் அழுதவண்ணம் முழங்காலில் விழுகிறான்.

குந்தி கர்ணனுடைய தலையை தன்னுடன் அணைக்கிறாள்.

**குந்தி:** கர்ணா! என் மகனே!

**கர்ண:** தாயே! தங்கள் கண்ணீரால் என்னைப் புனிதனாக்கிவிட்டீர்கள்! இப்பொழுது கூறுங்களம்மா இந்த ராதேயனிடமிருந்து தங்களுக்கு என்ன வேண்டும்?

**குந்தி:** இல்லை மகனே! நீ ராதேயனல்ல! குந்தியின் மகன். நீ என் மூத்த மகன்! இந்த உலகம் அனைத்தும் அறியும் வண்ணம் நான் உரக்கக் கூறுவேன். எனக்கு ஐந்து புதல்வர்கள் மட்டுமல்ல, எனக்கு ஆறு புதல்வர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை அறிவிப்பேன்!

**கர்ண:** அதனால் பலன் ஏதுமில்லைத் தாயே! இந்த ராதேயன் எவருக்கோ கடமைப்பட்டவன். தங்களுக்கு என்ன வேண்டும்? தடையின்றிக் கூறுங்கள்.

**குந்தி:** மகனே! பாண்டவர்களில் நீயே மூத்தவன் என்பது உறுதியாகிவிட்டது. அவர்களுக்கு நீ எதிரியாக இருக்க வேண்டியதில்லை. என்னுடன் வந்துவிடு. உன் தம்பிமார் பெருமைப்படுவார்கள். இந்த உலகினையே ஆட்சி புரிவாய் நீ!

**கர்ண:** இந்த உலகினை ஆட்சி புரிவதற்கு நேற்றும் இன்றும் எனக்கு அழைப்புக்கள் வந்துள்ளன. நேற்று வாசுதேவ கிருஷ்ணன் எனக்கு உலகினை ஆளும் தகுதியினைத் தந்தான். இன்று தாங்களும் உலகினை ஆட்சி செய்யும் உரிமை எனும் இலஞ்சம் கொடுக்கப் பார்க்கிறீர்கள்.

**குந்தி:** இலஞ்சமில்லை மகனே. உனதுரிமை.

**கர்ண:** வேதனையும் சோதனையும் நிறைந்த என் வாழ்வில் விதூஷகத்திற்கு இடமில்லைத் தாயே! தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறேன். தேரோட்டி மகனாக- ராதேயனாக நான் பட்ட பெருங்கடன் ஒன்று உண்டு தாயே! எனக்கும் தம்பிமார் உள்ளனர், என்ற உண்மை தெரிவதற்கு முன்பு எவருமற்றவனாக, ஏங்கி நின்ற வேளையில் என்னை அன்பால் அணைத்தவன் துரியோதனன். அத்தகைய என்னுயிர் நண்பனை விட்டுவிலகி இன்றுதான் நான் அறிந்துள்ள என் தம்பிமாருடன் இணைவது சரியாகுமா தாயே? பாண்டவருடன் போரிட என்னை ஆதாரமாக வைத்தே துணிந்தான் துரியோதனன். இன்று போய், அவனிடம் 'நான் உன்னை விட்டு விலகிப் போகிறேன்' என்று கூறமுடியுமா? என் குரு பரசுராமரின் சாபத்துக்கு ஆளானேன்! இந்திர தேவன் என் கவச குண்டலங்களைப் பறித்தான். வாசுதேவ கிருஷ்ணனும் தாங்களும் என் உறுதியினைக் குலைத்துவிட்டீர்கள். போரில் நான் மரணமடையக்கூடும். தாங்கள் ஐவரின் தாய் என்பது மட்டுமே இந்த உலகுக்குத் தெரியும். தங்களுக்கு ஐவரைவிட மூத்த மகன் ஒருவனும் இருக்கிறான் என்பது அந்த சூரிய தேவனுக்கு மட்டுமே தெரியும். போரின் முடிவு எப்படியானாலும் தங்களுக்கு ஐந்து புதல்வர்கள் இருப்பார்கள்; அதில் மாற்றமிருக்காது. நிச்சயமாக இருக்காது. நீங்கள் என்றும் பஞ்ச பாண்டவர்களின் அன்னையாகவே இந்த உலகம் உள்ளவரை திகழ்வீர்கள் தாயே!

__பின்னணிப் பாடல்:__

ஒரு தாய் வயிற்றினி லுதித்த நற் தனயர்கள்
பெரு வேற்றுமையால் பிரிய நேரிடினும்
கருவினி லவர்களைக் காய்த்துச் சுமந்தவள்
உருவினா லெவரையும் உவட்டுதல் முடியுமோ?

கதிரவனருளினால் கர்ணனை ஈன்றவள்
நதி வழி சிசுவினை நகர்த்திடத் துணிந்துமென்...?
மதிநிகர் பாண்டுவின் மக்களைப் பெற்றுமவ்
விதியினிலேகிய மைந்தனை மறந்திலை!

-காட்சி மாற்றம்-

மத்சய நாட்டுக்கு கிருஷ்ணன் வருகிறார். பாண்டவர்களை சந்திக்கிறார்.

**யுதிஷ்:** வணக்கம் வாசுதேவா! தயவுசெய்து அமருங்கள். எங்கள் பெரிய தந்தையார் நலமாக உள்ளாரா?

**அர்ச்:** அம்மா நலமா என்று முதலில் கேளுங்கள் அண்ணா!

**யுதிஷ்:** தம்பி! தமது தாயாரைவிட பெரிய தந்தையார் வயதில் முதிர்ந்தவர் அல்லவா?

**பீமன்:** அப்படியானால் பிதாமகரைப்பற்றிக் கேட்டிருக்கலாமே?

**யுதிஷ்:** தம்பி பீமா! அவர் அரசரல்லவே?

**நகுல:** ஆனால், தன்னுடைய தம்பி பிள்ளைகளின் உரிமைகளைப் பறித்தவராயிற்றே அந்த அரசர்!

**யுதிஷ்:** சத்திரிய தர்மத்தின்படிதான் நாம் நடந்துகொள்ள வேண்டும். அதனை ஒதுக்குவது நல்லதல்ல. கிருஷ்ணா! பெரியப்பா எப்படி இருக்கிறார்?

**கிருஷ்:** நலம்தான். ஆனால் கவலையுடன் இருக்கிறார். கங்கையின் மைந்தரும் இரு ஆச்சாரியர்களும் கலக்கமுற்றுத்தான் இருக்கிறார்கள். மன்னரின் மனம் போரைப்பற்றி கவலை கொள்ள வில்லை. ஆனால் மற்றைய மூன்று பெரியர்களும் போரின் விளைவுகளைப் பற்றி வேதனையுடன் காணப்படுகின்றனர்.

**அர்ச்:** அப்போ போர்தான் முடிவா?

**கிருஷ்:** போரினைத் தவிர்க்க எத்தனையோ முயற்சிகளை எடுத்தேன். துரியோதனன் எதற்கும் வளைந்து கொடுக்கவில்லை. ஆகவே போர்தான் முடிவு.

**சகா:** இப்பொழுது அம்மாவைப்பற்றிக் கூறுங்கள்.

**கிருஷ்:** அத்தை நலம்தான். தனது வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துள்ளார். நடைபெறவிருக்கும் யுத்தம் வெறும் ஆயுதங்களுடன் ஆயுதம் மோதும் போரல்ல. சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருடைய இதயத்தையும் பிளக்கும் போராக இருக்கப் போகிறது. ஆகவே அத்தையும் இந்தப் போரில் தனக்குரிய பங்கினை ஏற்கத்தான் போகிறார். துரியோதனன் உங்கள் தாயிடம் சென்று தன்னை வாழ்த்தும்படி கோரத்தான் போகிறான்-நீடூழி வாழ்க என்று உங்கள் அன்னை அவனையும் வாழ்த்தத்தான் போகிறார்.

-காட்சி மாற்றம்-

குந்தியிடம் கர்ணன் ஆசி பெற வருகிறான்.

**துரி:** வணக்கம் சித்தி! தங்களிடம் ஆசி பெற வந்திருக்கிறேன்.

**குந்தி:** ஆண்டவன் நீடூழி வாழ அருளுவானாக!

**துரி:** சித்தி! நான் வெற்றிபெற வேண்டுமென்று தங்களிடம் வாழ்த்தினைப் பெற அல்லவா வந்திருக்கிறேன்!

**குந்தி:** உன்னன்னை- என் அக்காளிடம் அத்தகைய ஆசியைப் பெற்றாயா?

**துரி:** இல்லை. தங்களுடைய ஆசி பெறாமல் அத்தகைய வாழ்த்தினை என் தாய் எனக்குத் தரமாட்டாள்.

**குந்தி:** அப்போ- பிதாமகரிடம் ஆசி பெற்றாயா?

**துரி:** அவர்தானே எனது படையின் பிரதம தளபதி.

**குந்தி:** அப்படியானால் ஆச்சாரியர் துரோணர், குலகுரு...?

**துரி:** அவர்களும் என் படையின் தளபதிகளே!

**குந்தி:** மகனே! விதுரரைப்பற்றி..?

**துரி:** அவர் எமது பிரதம மந்திரிதான். இருப்பினும் அவர் என்னை ஆதரிப்பவரல்ல. என்னை ஒருபோதும் அவர் வாழ்த்த மாட்டார்.

**குந்தி:** விதுரர் அஸ்தினாபுரத்திற்கோ உனக்கோ எதிரானவரல்லவர். அத்தகைய பெரியார்களை நீ சந்தேகிக்கலாகாது மகனே. அஸ்தினாபுரத்தின் நலன்களுக்கு நீ விரோதியாக இருந்தால் மட்டுமே விதுரர் உன்னை வெறுப்பார்.

**துரி:** எனது நாட்டின் தலைநகரான அஸ்தினாபுரத்தை நான் எவ்வாறு விரோதிக்க முடியும்?

**குந்தி:** மகனே! அஸ்தினாபுரி வெறுமனே ஒரு தலைநகர் மட்டுமல்ல. பாரத வம்சம் நிலைத்திருக்க முதுகெலும்பு போன்றது அது. உன் தாய்க்குச் சமமானது. அது அழிந்து போனால் கவுரவ குலத்திற்கு எதுவுமே மிஞ்சப் போவதில்லை. இந்த நகரின் வாயில்கள் ஒவ்வொன்றிற்கும் சென்று வெற்றியை அளிக்கும்படி வேண்டிக்கொள். இதைத் தவிர வேறு வகையான வாழ்த்துக்கள் இல்லை.

**துரி:** அவ்வாறானால் என் வெற்றியை தாங்கள் விரும்பவில்லைப் போலும்!

**குந்தி:** வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் தவிக்கும் நான் இதயத்தில் துரியனை யேந்தி கண்ணீர் வடிக்கிறேன் மகனே! இந்த யுத்தத்தில் யார் தோல்வி கண்டாலும் நான் அழுவதற்கு கடமைப்பட்டவள். உனது நடவடிக்கைகள் எனக்கு உடன்பாடானவையல்ல. இருப்பினும் நீ மரிப்பதை நான் விரும்பவில்லை. போருக்கு நீ ஆயத்தமாகிவிட்டாய். என்னுடைய ஆசிகள் உனக்குக் கவசமாக இருக்கலாம்; இருப்பினும் அர்ச்சுனனின் கணைகளிலிருந்தும் பீமனின் கதாயுதத்திலிருந்தும் உன்னை என் வாழ்த்துக்கள் காப்பாற்றக் கூடும் என்ற நம்பிக்கை எனக்கில்லை!

__பின்னணிப் பாடல்:__

ஒரு மரத் திருகிளை ஒன்றுடனொன்று
பொருதிடத் துணிந்திடும் போதிலப் பெருமரம்
அருகணைத் தெதனையும் ஆசி தந் தேற்றிட
பெரு வழி விதியிலை எனும் நிலையதுபோல்
அண்ணன் தம்பி புதல்வர்கட்கிடையினில்
மண்ணினைப் பங்கிடும் போட்டியில் போர் வெறி
வெற்றிபெற்று நீ வாழ்ந்திடு என்றுயர்
வாழ்த்தினைக் குந்தியும் கூறிடலாகுமோ?

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



வண்ண நகைகளின் கூட்டம்
எண்ணம் முழுதும் அதை நாடி

436331

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


தருவது - வீயோடெ



# கூடி விளையாடும் குழந்தை போல-

[illegible] காப்பாற்றப்பட்ட குட்டிகள் தங்களுக்கு நேர இருந்த அபாயம் புரியாமல் கூடி விளையாடுகின்றன.


Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

436686

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11




# புதிய ஹீரோ

விரைவில் கொழும்பு மாநகரில் புதிதாக வடிவமைக்கப்பட்டு வரும் திரை அரங்கொன்றில் இரசிகர்களை மகிழ்விக்கப் போகிறது ஹொலிவூட்டின் கடந்த வருடச் சிறந்த படங்களுள் ஒன்றான 'ஸ்பீட்'. வேகமும் இப்படத்தின் நாயகன் கியனு ரீவ்ஸ் சிறந்த உடற்கட்டும் கவர்ச்சியான தோற்றமும் கொண்ட இளைய புதிய கண்டுபிடிப்பு

ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லட்' நாடகத்தில் கதாநாயகனாகத் தோன்றி - அந்நாடகம் வினிப்பெக்-மனிட்டோபா அரங்கில் 30 தடவைகள் மேடை ஏறியது. அப்போதும் இரசிகர்களில் பெரும்பாலோர் இடம் கிடைக்காமல் திரும்பிச் சென்றுள்ளனர். திரைப்பட வாய்ப்புக்கள் தேடிவரத் தொடங்கிவிட்டமையினால் 30 வயது இளைஞரான ரீவ்ஸ், தொடர்ந்தும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் நடிக்க முடியாதிருக்கிறார். ஆனால் இவர் மேடை நாடகங்களில் நடிக்கவே விரும்புகிறார். நாடக இரசிகர்கள் விரும்பினாலும் பணத்தை அள்ளிக்குவிக்கும் திரை உலகைத் துறந்து அவர் மேடைக்கு வருவாரா என்பது சந்தேகமே!

# மெல்ல சரிய விழிகள் விரிய

உலக அதிசயங்களில் ஒன்று பைசா கோபுரம். இத்தாலி நாட்டில் இருக்கிறது. உயரம் 179 அடி. இந்த கோபுரம் செங்குத்தான நிலையில் இருந்து 14 அடி சாய்ந்து போய் நிற்கிறது. மெல்ல மெல்ல சாய்ந்து இறுதியில் விழ்ந்துபோகக் கூடும் என்று கருதப்படுகிறது. இதனை பார்வையிட உலகின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் குவிகிறார்கள்.








# உனக்கு பாதி

மனிதர்களோடு நட்பாக வாழ்வதில் கொரில்லா வகை குரங்குகள் கில்லாடிகள். குறும்பு செய்வதிலும் கொரில்லா குரங்கை மிஞ்ச முடியாது. வாழைப்பழத்தில் பாதியை கேட்டல்ல தானே எடுத்துக்கொள்ளும் உரிமையோடு கை நீட்டுகிறார் கொரில்லா குரங்கார். படத்தில் நட்பின் உரிமையும், உறவின் இனிமையும் பளிச்சிடுகிறது! அல்லவா?



# எனக்கும் பிரபலம்

'லவ் பேட்ஸ்' எனப்படும் பறவைகளோடு வேடிக்கைகாட்டி விளையாடும் நாயார். கூடி வாழத் தெரிந்த மையால் உலகெங்கும் அறியப்படும் பிரபலமாகிவிட்டது.




[illegible]